Vol.4, Issue 3 | Annual Subscription ₹420


@NewsRotary /RotaryNewsIndia

ஆகஸ்ட் 2021

# ரோட்டரி நியூஸ்


INDIA
www.rotarynewsonline.org

Rotary




திலீப் குமார்
(1922–2021)

# RNT Executive Committee Members (2021–22)



**Ramesh Meher**
RI District 3030

*Secretary - Executive Committee*



**Gaurish Dhond**
RI District 3170

*Chairman - Governors Council*



**V Thirupathi Naidu**
RI District 3160

*Treasurer - Executive Committee*



**Anup Mittal**
RI District 3011

*Secretary - Governors Council*



**Jacintha Dharma**
RI District 3212

*Member - Advisory Committee*






















# உள்ளே


**12 ராஜஸ்தானில் தடுப்பணை கட்டிய இரு தில்லி ரோட்டரி சங்கங்கள்**
அல்வார் மாவட்டத்தில் RCகள் டெல்லி மன்தான், டெல்லி வெஸ்ட் நடத்தும் நீர்ப் பாதுகாப்புத் திட்டம்

**18 பருவநிலை மாற்ற நெருக்கடி ஆப்பிரிக்கா மீதும் கவனம் செலுத்துங்கள்: வனேஸ்ஸா நகாடே**
ஆப்பிரிக்கா சந்திக்கும் பேரழிவான சுற்றுச்சூழல் விளைவுகளைச் சரிசெய்யும்படி உலகத் தலைவர்களுக்கு காலநிலை ஆர்வலர் வனெஸ்ஸா நகாடெ வலுவான வேண்டுகோள்.

**20 வளர்வோம், சேவை செய்வோம்: சேகர் மேத்தா**
புதிய பொறுப்பை ஏற்கும் சேகர் மேத்தா அவர்களை உயர்நிலை அரசுத் தலைவர்கள், மூத்த ரோட்டரி தலைவர்கள் வாழ்த்திய மிகப் பெரிய ஜூம் கூட்டம்.

**28 ஒடிஸாவில் கண் மருத்துவமனை உருவாக வழிவகுத்த திருமண வரவேற்பு**
ஒடிஷா கிராமம் ஒன்றில் கண் மருத்துவமனைக்கு வழிவகுத்த மைன்ட்ட்ரீ நிறுவனத்தின் இணை நிறுவனர் சுப்ரதோ பாக்சி அவர்களின் யோசனை.

**30 ஒடிஷா பெண்கள் ஹாக்கிக் குழுவின் வெற்றிக் கதை**
Rtn ஜதிந்தர் குமார் சர்மா நிறுவிய ரோட்டரி ஹாக்கி அகாதெமி ஒடிஷா மாநிலத்தில் மூன்று மையங்களில் 200 கிராமப்புறப் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கிறது.

**34 நடிப்பில் திலீப் தனி ரகம்!**
திலீப் குமார் அஞ்சலி; அவருடைய லட்சக்கணக்கான விசிறிகளுக்கு, அவரைப்போல் இன்னொரு மந்திர நாயகர் இனி எப்போதும் கிடைக்கமாட்டார்.

**56 விவசாயிகளுக்காக ரோட்டரி கட்டித்தந்த பாலம்**
RC ஷெகாவான் ஒரு சிறிய கிராமத்தில் மக்களுக்காக ஒரு திடமான பாலம் ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

**60 புதுப்பிக்கப்பட்ட ரோட்டரி அறக்கட்டளை நிதியளித்தல் மாதிரிக்கான ஒரு வழிகாட்டி**
TRF அங்கீகரிக்கும் நிதிகளைப்பற்றிய புதிய கொள்கை மாற்றங்களைத் தெரிந்துகொள்ளுங்கள்.


*பெண்களுக்கு ஆற்றல் அளிக்கவேண்டும் என்கிற RI தலைவர் மேத்தாவின் அழைப்பு வரவேற்கவேண்டியது*

*பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதில் கவனம் செலுத்துங்கள் என்று RI தலைவர் சேகர் மேத்தா அழைப்பு விடுத்திருப்பது மிக முக்கியமானது.*

*தலைவர் சேகர், அவருடைய மனைவி ராஷியின் அழகிய புகைப்படத்துடன் அமைந்த இந்த இதழில் எப்போதும்போல் பல ஆர்வம் தரும் செய்திகள், கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன. குறிப்பாக, மும்பையில் உள்ள RC க்வீன் ஸ் நெக்லஸ் எடுத்துவரும் ஆக்சிஜன் செறிவூட்டிகள், சமூகக் குளிர்பதனப் பெட்டிகளை வழங்குதல் போன்ற கோவிட் உதவி நடவடிக்கைகளைப் பற்றிய கட்டுரை நன்கு அமைந்திருந்தது. ரோட்டரி மக்கள் மீது காண்பிக்கும் அக்கறையை இதுபோன்ற திட்டங்கள் நன்கு உணர்த்துகின்றன.*

*R ஸ்ரீனிவாசன், RC மதுரை*
*மிட்-டவுன் — D 3000*

*ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அழைத்துவாருங்கள் என்கிற மேத்தாவின் கருத்து மிகச்சிறந்தது; இன்னும் மேம்பட்ட உலகத்துக்காகப் பெண்களுக்கு ஆற்றல் அளிப்பது ஒரு புதுமையான யோசனையாகும். எதிர்வரும் ரோட்டரி ஆண்டு அவருக்கு*



*வெற்றிகரமாக அமையவேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.*

*புதிய RI இயக்குநர்களுடைய செய்திகள் எங்களை ஊக்கப்படுத்து கின்றன. ஹெலென் கெல்லரை மேற்கோள் காண்பிக்கும் அறங்காவலர் தலைவர் ஜான் F ஜெர்ம், இந்த நோய்ப்பரவல் நேரத்தில் முன்னேறும் வழியை நமக்கு உணர்த்துகிறார்.*

*நோய்ப்பரவலுக்குப் பிந்தைய உலகத்தில் சங்கங்கள் சந்திக்கக்கூடிய பிரச்சனைகளை PRIP ஹோல்கர் நாக் பேசுகிறார். RC மும்பை க்வீன் ஸ் நெக்லஸ் மற்றும் இந்தியாவிலுள்ள வேறு பல சங்கங்களின் மிக உயர்ந்த பணியைப்பற்றிப் படிப்பது மகிழ்ச்சியளித்தது. மிகப் பெரிய திட்டங்களுக்காக ரோட்டரி, டாடா இணைந்து செயல்படுகிறார்கள், உங்கள் வீட்டை ஆற்றல் செயல்திறன் கொண்டதாக ஆக்குங்கள் போன்ற மற்ற கட்டுரைகளும், சைகலைப் பற்றிய கட்டுரையும் படிக்கவேண்டியவை, மதிப்பு மிக்கவை. புகைப்படங்களும் மிக நன்றாக அமைந்திருந்தன.*

*ஃபிலிப் முலப்பொனெ M T*
*RC திருவனந்தபுரம்*
*சப்அர்பன் — D 3211*

*பெண்களுக்கு ஆற்றல் அளிப்பது, அவர்களுடைய நலனை உறுதி செய்வது, ரோட்டரி சேவைகளில் அவர்களைச் சேர்த்துக் கல்வி, தூய்மை, வேலை வாய்ப்பு மற்றும் நலப் பராமரிப்பை அவர் களுக்குக் கிடைக்கச் செய்வது ஆகியவற்றில் RI தலைவர் மேத்தா கவனம் செலுத்துவது மிகவும் வரவேற்கவேண்டியது. அவருடைய கருப்பொருள் ஓர் ஆழமான பொருளைத் தாங்கி யுள்ளது, பெரிய திட்டங்களைச் செய்வதற்கான வாய்ப்புகளைச் சங்கங்களுக்குத் திறந்துவைக்கிறது.*

*ஜூன் இதழின் அட்டையில் தலைவர் சேகர் மற்றும் ராஷியைப் பார்த்தது மகிழ்ச்சி அளித்தது.*

*அபய் கிஷோர் சன்த்வர்*
*RC தன்பத் மிட்-டவுன் — D 3250*

தலைவர் மேத்தா, RID மகேஷ் கோட்பாகி பற்றிய விரிவான கட்டுரைகளில் பல தகவல்கள் நிறைந்திருந்தன, இதுவரை ரோட்டரியில் அவர்கள் செய்துள்ள பல சாதனைகள், சேவைத் திட்டங்களைச் சுட்டிக்காட்டின.

RC பெல்தங்கடி நடத்தும் நீர்த் திட்டங்கள் விவசாயிகளுக்கு உதவியுள்ளன.

Dr பொன் முத்தையன்
RC ஆடுதுறை — D 2981

S R மது புகழ் பெற்ற பாடகரான சைகலைப்பற்றி எழுதிய கட்டுரை, அவருடைய ஈர்ப்பான குரலை நினைவு படுத்தியது. அவருடைய ஆழ்துயர்க் குரலில் இருக்கும் உணர்வுகளின் ஆழத்தை எழுத்தாளர் சரியாகப் பதிவுசெய்துள்ளார். அன்றைய இலங்கை வானொலியில் சைகல் பாடல்களைக் கேட்கும் நினைவுகள் இசை விரும்பிகளுடைய இதயங்களில் என்றென்றும் தங்கும்.

K ரவீந்திரன், RC திரிகரிபூர் — D 3204

இந்த ஆண்டுக் கருப்பொருள், பெண் குழந்தைக்கு ஆற்றல் அளிப்பது தான் என்பதால், RI தலைவர் மேத்தா வின் இந்தக் கனவை நாம் சங்கத்தின் மூலம் திட்டங்களைச் செயல்படுத்தி வெற்றியடையச் செய்வோம்.

DG ஜசிந்தா தர்மா RC நாகர் கோயிலின் ரோட்டரியனாக 13 ஆண்டுகள் சேவையாற்றியபின் RID 3212 ஆளுநராகியுள்ளார்; அவருடைய வெற்றி, பெண்களுக்கு ஆற்றல் அளிப் பதற்கான ஒரு நல்ல எடுத்துக் காட்டு ஆகும்.

S மோகன், RC மதுரை
வெஸ்ட் — D 3000

**ரோட்டரி கோவிட் தடுப்பு மருந்தை உருவாக்கவேண்டும்**

36 ஆண்டுகளுக்குமுன்னால், 1985ல் ரோட்டரி தன்னுடைய வரலாற்றின் மிகப் பெரிய லட்சியத் திட்டத்தைத் தொடங்கியது: இளம்பிள்ளைவாதத்தை நீக்கும் முயற்சி. கிட்டத்தட்ட 3 பில்லியன் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக ரோட்டரியன்கள் \$2.1 பில்லியனுக்குமேல் திரட்டி யுள்ளார்கள், எண்ணற்ற மணி நேரம் தன்னார்வலர்களாகப் பணி புரிந்துள்ளார்கள். இதனால், போலியோ 99.9% குறைந்தது.

வியக்கவைக்கும் இந்தச் சாதனையை ரோட்டரியால் நிகழ்த்த இயன்றுள்ளது என்றால், அவர்கள் ஏன் ஒரு கோவிட் தடுப்பு மருந்தையும் உருவாக்க முயலக்கூடாது? ரோட்டரி ஒரு கோவிட்

*RI தலைவர் சேகர் மேத்தா தன்னுடைய பதவிக்காலத்தின் போது கவனம் செலுத்தவிருக்கும் ஐந்து முக்கியத்துவங்களைப் படித்து மிகவும் மகிழ்ந்தேன், குறிப்பாக, இப்போதைய தேவையாகிய பெண்களுக்கு ஆற்றல் அளித்தல் மிகுந்த மகிழ்ச்சி அளித்தது.*

*குவஹாத்தியில் நடந்த ஜெய்ப்பூர் கை, கால் முகாமைப்பற்றிய கட்டுரையில், காண்டாமிருகத் தாக்குதலில் காலை இழந்த காட்டுப் பாது காவலர் டமோங்கின் நெஞ்சைத் தொடும் கதையைப் படித்தது எங்கள் கண்களைத் திறந்தது. இந்தத் திட்டம் பாராட்ட வேண்டியது, பிரசங்கங்களுக்கு ஊக்கம் அளிப்பது.*

*RID 3181ன் நீடித்திருக்கும் நீர்ப் பாதுகாப்புத் திட்டங்கள் (ஜூன் இதழ்) விவசாயிகளுக்கு மிகச் சிறந்த உதவியாக அமையும், அவர்களுடைய மன உறுதியை மேம்படுத்தும்.*

*கர்னல் விஜயகுமார்*
*(ஓய்வு பெற்றவர்)*
*RC ஆலப்பி கிரேட்டர்* — D 3211

தடுப்பு மருந்து உருவாக்க ஆய்வகத்தை அமைக்கலாம்.

டோமி ஏபென், RC ஆலப்பி — D 3211

தலைவர் மேத்தா, RID மகேஷ் கோட்பாகி பற்றிய ஆசிரியருடைய கட்டுரைகள் மிகச்சிறந்த ஆர்வம் அளித்தன. அவர்களை மிகையாகப் புகழாமல், அவர்களுடைய பங்களிப்புகள், சாதனைகள் சரியாக விளக்கப்பட்டிருந்தன.

சந்தியா ராவ் எழுதும் Wordsworld பத்தியை, பரத் மற்றும் ஷலான் சவுர் வழங்கும் தன்னைக் கவனித்துக் கொள்வது பற்றிய பயனுள்ள உதவிக் குறிப்புகளை, TCA ஸ்ரீனிவாச ராகவனுடைய LBWஐ நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

மண்ட்யம் பதரிநாராயணா
RC தாணெ ஹில்ஸ் — D 3142

ரோட்டரி நோபல் பரிசுக்குப் பரிந்துரைக்கப்படவேண்டும் என்ற தலைவர் மேத்தாவின் கனவை, முன்பு TRFல் இருந்த, இப்போது பெருமை மிக்க ஒரு ரோட்டரியனாக இருக்கிற நானும் பகிர்ந்துகொள்கிறேன். காரணம், அதனால் வருகிற பெருமையோ புகழோ இல்லை; மிகச் சிறந்த சேவை அமைப்பாக ரோட்டரி உருவாவதை நோபல் பரிசு இன்னொரு படி விரைவாக்கும். அனைத்து ரோட்டரியன்களுடைய சார்பாக நம் RI தலைவர் அந்தப் பரிசைப் பெறும் பெருமைக்குரிய கணம் இந்த ஆண்டு நிகழும் என்று நான் நம்புகிறேன்.

R முரளி கிருஷ்ணா
RC பெர்ஹம்பூர் — D 3262

### நெஞ்சைத் தொடும் ஆசிரியர் பக்கம்

நெடுந்தொலைவுத் துக்கத்தைப் பற்றிய ஜூன் ஆசிரியர் பக்கம் நெஞ்சைத் தொட்டது, கள எதார்த்தத்தைப் பிரதிபலிக்கிறது. கோவிட் ஆயிரக்கணக்கான உயிர்களைப் பறித்துள்ளது; வீட்டில் சம்பாதிக்கும் ஒரே நபர்களாக இருந்தவர்கள் இதற்குப் பலியாகியுள்ளார்கள், இதனால் அவர்களுடைய குடும்பத்தினர் தடுமாற்றத்தில் உள்ளார்கள். இறுதிச் சடங்குகளைச் செய்ய அனுமதிக்கப் படாத உறவினர்கள் வேதனையான நேரத்தைச் சந்திக்கிறார்கள்.

மூன்றாம் அலையைத் தவிர்க்க இயலாது என்று Dr V ராமசுப்ரமணியன் எச்சரிக்கிறார்; உடற்தகுதியோடும் நலனோடும் இருக்கவேண்டும் என்கிற அவருடைய அறிவுரையை ரோட்டரியன்கள் பின்பற்றவேண்டும்.

ராஜ் குமார் கபூர்
RC ரூப்நகர் — D 3080

### ஒரு துடிப்பான தலைவர்

கொல்கத்தாவில் நடைபெற்ற நூற்றாண்டுக் கொண்டாட்டங்களின் போது, RI தலைவர் மேத்தா, PRID கமல் சங்வி ஆகியோருடன் நெருங்கிப் பணியாற்றும் நல்ல வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. முன்னணி வெளியீடுகளில் விளம்பரக் கட்டுரைகள், செய்திகளின் வழியாக ரோட்டரியின் தோற்றத்தை முன்னிறுத்துவதற்கு அவர் தொடர்ந்து உழைத்தார். மிகச் சிறந்த, ஊக்கம் அளிக்கும் யோசனைகள், பெரிய கனவுகள், மிகப் பெரிய சமூக சேவை இலக்குகளின் தொகுப்பாக நான் மேத்தாவைக் கண்டேன். அவருடைய ஆளுமைக்கு, வாழ்க்கைகளை மாற்றச் சேவை புரியுங்கள் என்ற குறிக்கோள் நன்கு பொருந்துகிறது.

பியுஷ் தோஷி, RC பேளூர் — D 3291

நோய்ப்பரவலுக்குப் பிந்தைய உலகத்தில் நாம் சந்திக்கக்கூடிய சவால்களை PRIP ஹோல்கர் நாக் தன்னுடைய செய்தியில் விவரிக்கிறார். ஆசிரியர் குறிப்பு நெடுந்தொலைவுத் துக்கத்தைப்பற்றியும், வெளி நாடுகளில் வாழும் உறவினர்கள் உணரும் அதிர்ச்சி யைப்பற்றியும் நன்கு பேசுகிறது.

S முனியாண்டி, RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

கோயம்பத்தூர் ரோட்டரியன்களுடைய கோவிட் உதவித் திட்டங்கள் (ஜூன் ’21) கட்டுரை நன்கு எழுதப்பட்டுள்ளது. இந்த விரிவான கட்டுரை மிகச் சிறந்த பாராட்டாகும், சஞ்சீவனி குழு மற்றும் ஒட்டுமொத்த 3201 மாவட்டமும் இதை எண்ணிப் பெருமைப்படலாம். ரோட்டரியின் தோற்றம் ஒரு பொலிவேற்றத்தைப் பெற்றுள்ளது.

P P லட்சுமணன்
RC கோயம்பத்தூர் வெஸ்ட் — D 3201

We welcome your feedback. Write to the Editor:
**rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.**
Mail your project details, along with hi-res photos,
to **rotarynewsmagazine@gmail.com.**

Messages on your club/district projects, information and links on zoom meetings/ webinar should be sent only by e-mail to the Editor at **rushbhagat@gmail.com** or **rotarynewsmagazine@gmail.com.** WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus** on our website **www.rotarynewsonline.org** to read about more Rotary projects.

# இன்னும் பல நல்ல உள்ளங்களை ரோட்டரியில் இணைப்போம்

SERVE TO CHANGE LIVES

இந்த மாதம் நாம் ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கையில் கவனம் செலுத்துகிறோம். இந்த ஆண்டில் நாம் வரலாறு படைக்கவேண்டும். அதற்கு நான் உங்கள் உதவியைக் கோருகிறேன். 20 ஆண்டுகளுக்கு மேலாக, நம் உறுப்பினர் எண்ணிக்கை 1.2 மில்லியனாக உள்ளது.

என்னுடைய தொலைநோக்குப் பார்வை, ஜூலை 2022க்குள் ரோட்டரியின் உறுப்பினர் எண்ணிக்கையை 1.3 மில்லியனாக உயர்த்துதல். இதற்கான செயல்திட்டம் மிக எளியது: ஒவ்வொருவரும் ஒவ்வொரு வரை அழைத்து வாருங்கள். இந்த ஆண்டு, ஒவ்வொரு ரோட்டரியனும் ரோட்டராக்டரும் ஒரு புதிய நபரைத் தங்கள் சங்கத்துக்கு அறிமுகப் படுத்தவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

நாம் உறுப்பினர் எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்கிற இந்த ஆண்டில், இளைஞர்களை, குறிப்பாகப் பெண்களை அணுகு வோம், அதன்மூலம் பன்முகத் தன்மையில் கவனம் செலுத்துவோம். ஒவ்வொரு சங்கமும் தன்னுடைய புதிய உறுப்பினர்களைக் கொண்டாட வேண்டும், ஓர் உறுப்பினரை ஆதரிக்கும் ஒவ்வொரு ரோட்டரியனையும் நான் தனிப்பட்ட முறையில் அங்கீகரிப்பேன். 25 அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களை அழைத்துவரும் வெற்றியாளர்கள் நம்முடைய புதிய உறுப்பினர் எண்ணிக்கைக் குழுவில் பங்குபெறுவார்கள்.

நாம் ரோட்டரியின் பரிசைப் பிறருடன் பகிர்ந்துகொள்கிற இந்த நேரத்தில், இந்தப் புதிய உறுப்பினர்களுடன் தொடர்ந்து உரையாடுவோம்.

புதிய சங்கங்களை உருவாக்கவும் நாம் தயாராக இருப்போம், குறிப்பாக, நெகிழ்வான சங்கங்களை. மெய்நிகர் அல்லது கலப்புக் கூட்டங்களை நடத்துகிற சங்கங்களை நான் மிகவும் நம்புகிறேன், துணைக்கோள் சங்கங்கள் மற்றும் நோக்கம் அடிப்படையிலான சங்கங்கள் ஆகியவையும் ரோட்டரியை வளர்ப்பதற்கு மிகச் செயல்திறன் வாய்ந்த வழிகளாக இருக்கலாம்.

நீங்கள் மேலும் வளரும்போது, இன்னும் நிறையச் செய்யலாம். நாம் ஒவ்வொரு கவனப் பகுதியிலும் நம்முடைய பணியின் வழியாகப் பெண்களுக்குத் தொடர்ந்து ஆற்றல் அளிப்போம். பெண்களுக்கான கல்வி உதவித்தொகைகள், பள்ளிகளில் கழிப்பறைகள், நலன் மற்றும் தூய்மைக் கல்வி நாம் செய்யக்கூடியவை நிறைய உண்டு. சுற்றுச்சூழலில் கவனம் செலுத்தும் திட்டங்களும் உலக அளவில் ஆர்வத்தை ஈர்க்கின்றன. உள்ளூரிலும் உலக அளவிலும் இந்தத் திட்டங்களில் கலந்துகொள்ளுங்கள்.


நீங்கள் ஒவ்வொருவரும் ரோட்டரியின் பிராண்ட் தூதுவர்கள்; உலகெங்கும் ரோட்டரியன்கள் செய்கிற மிகச் சிறந்த பணிகள் அனைத்தையும் ரோட்டரி சமூகத்துக்கு வெளியில் பகிர்ந்துகொள்ளவேண்டும். சமூக ஊடகங்களைப் பயன்படுத்தித் தன்னை மீறிய சேவையின் கதைகளை உங்கள் நண்பர்கள், சக ஊழியர்கள், உறவினர்களுக்குச் சொல்லுங்கள்.

நிறைவாக, ஒவ்வொரு சங்கத்துக்கும் நான் விடுகிற ஒரு சவால், வரும் ஆண்டில் குறைந்தது ஒரு ரோட்டரி சேவை நாளைத் (Rotary Days) திட்டமிடுங்கள். உங்கள் சங்கத்தின் பணியை உங்கள் சமூகத்துக்குக் காட்சிப்படுத்துங்கள்.

இந்த முன்னெடுப்புகள் அனைத்தைப்பற்றியும் கூடுதலாகத் தெரிந்துகொள்ள, வாழ்க்கைகளை மாற்றச் சேவை புரிவதற்கான பிற வழிகளை அறிந்துகொள்ள, *rotary.org* இணையத்தளத்துக்கு வாருங்கள்.

Shekhar Mehta

**சேகர் மேத்தா**
**RI தலைவர்**





# பன்முகத்தன்மை சமஉரிமையை நோக்கி பயணிப்போம்!

ஒவ்வொரு முறையும் உலகில் ஒரு ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள், குறிப்பாக இந்தியாவில் பள்ளிகளில் பாலின ரீதியாக கழிப்பறை கட்டுகிறார்கள். மாதவிடாய் சுகாதாரம் பற்றி எடுத்துரைக்கிறார்கள். பெண்களுக்கு எளிதாகப் பயன்படுத்தக்கூடிய நிலையான மாதவிடாய் சுகாதார கிட்டுகளை வழங்குகிறார்கள். மகன்கள் போல மகளுக்கும் கல்வி கற்பித்தலின் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார்கள். குழந்தைத் திருமணத்துக்கு எதிராக பிரசாரம் செய்து வருகின்றனர் அல்லது பெண்களுக்கு உதவித்தொகை வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். இப்போது ரோட்டரி தலைவர் சேகர் மேத்தாவின் பட்டியலில் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் நன்றாக நடைபெற்று வருகிறது.

கராத்தே போன்ற தற்காப்புக் கலைக்கான வகுப்புகள், நல்ல எண்ணத்தில் தொடுதல், கெட்ட நோக்கத்தில் தொடுதல் குறித்து சிறுவர்கள், சிறுமிகளுக்கு கற்பித்தல், தவறான நோக்கத்தால் யாராவது செயல்பட்டால் எதிர்த்து குரல் கொடுப்பது, அவர்கள் மீது புகார் கொடுப்பதற்கான நம்பிக்கையை ஏற்படுத்துவது, பெண்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளிப்பது, சுயதொழில் செய்ய அழகுக்கலை பயிற்சி அளிப்பது, உள்ளிட்ட நடவடிக்கைகளை ரோட்டரி சங்கங்கள் மேற்கொண்டுள்ளது. ஒடிஸாவில், ஊரகப் பகுதியில் உள்ள சிறுமிகளுக்கு பயிற்சி அளிக்க ஹாக்கி அகாடமியை ஏற்படுத்துவது (இந்த இதழில் வெளிவந்துள்ள V முத்துக்குமரனின் கட்டுரை) என எல்லாத் திட்டங்களும் ரோட்டரியின் தாரக மந்திரம் பன்முகத்தன்மை-சமஉரிமை-சேர்த்தல் ஆகியவற்றில் அடங்கியுள்ளது.

இந்த தாரக மந்திரத்தை ரோட்டேரியன்கள் பின்பற்ற வேண்டும் என்று முன்னாள் தலைவர் ஹோல்கர் நாக் வலியுறுத்த ஒரு முறைகூட தவறியதில்லை. நீண்ட காலமாக பெண்கள் மீது பாகுபாடு காட்டப்பட்டு வந்த நிலை மாற வேண்டும். அவர்களை ஆண்களுக்கு சமமாக நடத்த வேண்டும் என்றும் கூறிவருகிறார். இந்த ரோட்டரி ஆண்டில் அதற்கு ஒரு வழிபிறக்கும் என்று எதிர்பார்க்கலாம். RIPE ஜென்னிஃபர் ஜோன்ஸ் ஏற்கெனவே பன்முகத்தன்மை-சம உரிமை மற்றும் சேர்த்தல் ஆகிய மூன்று தாரக மந்திரத்தையும் முன்னெடுத்துச் செல்வதற்கான தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.


இந்த விஷயத்தில் ரோட்டரிக்குள் தற்போதுள்ள நிலைமையை மதிப்பிடவும், இதை வெற்றிகரமாகச் செயல்படுத்த விரிவான ஒரு செயல் திட்டத்தை உருவாக்கவும் DEI பணிக்குழு கூட்டத்தை நிர்வாகக்குழுவினர் கூட்டியுள்ளனர். வரும் அக்டோபர் மாதம் சேகர் மேத்தா தலைமையில் நடைபெறும் நிர்வாகக்குழு கூட்டத்தில் இத்திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

ரோட்டரியின் DEI அறிக்கை உண்மையில் 2019ம் ஆண்டிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது எத்தனை ரோட்டேரியன்களுக்குத் தெரியும்? பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் அளிக்க வேண்டிய அவசியத்தை இந்தியா அறியாததும் அல்ல, அலட்சியமாகவும் இல்லை. ஆனால், கடந்த காலங்களில் ஆண்-பெண் பாலின விகிதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதாவது 2001 ஆம் ஆண்டு 1,000 ஆண்களுக்கு 927 பெண்கள் இருந்தனர். ஆனால், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி ஆண்-பெண் பாலின விகிதம் 1000த்துக்கு 918ஆக குறைந்துவிட்டது.

2014 ஆம் ஆண்டு சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தன்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பெண் சிசுக் கொலை என்ற கொடூரமான நடைமுறைக்கு முடிவு கட்ட வேண்டும் என்றார். அடுத்த ஆண்டு ஜனவரியில் இந்த பிரச்னைக்குத் தீர்வுகாண 'Beti Bachao, Beti Padhao' திட்டத்தைத் தொடங்கினார்.

பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் அளித்தல் என்ற ரோட்டரி தலைவர் சேகர் மேத்தாவின் முன்முயற்சிகளுக்கு உலகெங்கிலும் உள்ள ரோட்டரியின் மூத்த தலைவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதுடன், அவருடன் ஒருங்கிணைந்து செயலாற்றவும், அவரது தலைமையை வரவேற்று நடைபெற்ற மெய்நிகர் சந்திப்பு கூட்டத்தில் உறுதியேற்றதை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் பார்த்தேன்.

உலகம் முழுவதிலும் குறிப்பாக இந்தியாவில் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் தொடர்பான உறுதியான செயல்திட்ட நடவடிக்கைகள் குறித்த செய்திகளை ரோட்டரி நியூஸ் வெளியிடும் என்று இந்த தருணத்தில் நான் உறுதியளிக்கிறேன். பன்முகத்தன்மை-சமஉரிமை-சேர்த்தல் என்னும் தாரக மந்திரத்தை உங்கள் சங்கங்கள் எப்படி செயல்படுத்துகிறது என்று பார்ப்போம். உடனே தயாராகுங்கள்!



ரஷீதா பகத்

## Governors Council

RID 2981 S Balaji
RID 2982 K Sundharalingam
RID 3000 R Jeyakkan
RID 3011 Anup Mittal
RID 3012 Ashok Aggarwal
RID 3020 Rama Rao M
RID 3030 Ramesh Vishwanath Meher
RID 3040 Col Mahendra Mishra
RID 3053 Sanjay Malviya
RID 3054 Ashok K Mangal
RID 3060 Santosh Prdhan
RID 3070 Dr Upinder Singh Ghai
RID 3080 Ajay Madan
RID 3090 Parveen Jindal
RID 3100 Rajiv Singhal
RID 3110 Mukesh Singhal
RID 3120 Samar Raj Garg
RID 3131 Pankaj Arun Shah
RID 3132 Dr Omprakash B Motipawale
RID 3141 Rajendra Agarwal
RID 3142 Dr Mayuresh Warke
RID 3150 K Prabhakar
RID 3160 Thirupathi Naidu V
RID 3170 Gaurishkumar Manohar Dhond
RID 3181 A R Ravindra Bhat
RID 3182 Ramachandra Murthy M G
RID 3190 Fazal Mahmood
RID 3201 Rajasekhar Srinivasan
RID 3203 Shanmugasundaram K
RID 3204 Dr Rajesh Subash
RID 3211 Srinivasan K
RID 3212 Jacintha Dharma
RID 3231 Nirmal Raghavan W M
RID 3232 Sridhar J
RID 3240 Dr Mohan Shyam Konwar
RID 3250 Pratim Banerjee
RID 3261 Sunil Phatak
RID 3262 Santanu Kumar Pani
RID 3291 Prabir Chatterjee

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions — original content — is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.

# RI இயக்குனர்

## ரோட்டரியின் புதிய கவனம் சுற்றுச்சூழலை பாதுகாப்போம்

அன்பு நண்பர்களே!

சுற்றுச்சூழலை ஆதரிக்க நாம் தயாராகும் போது இது ஒரு அருமையான தருணம் என்று நீங்கள் நினைக்கவில்லையா? ரோட்டரி அறக்கட்டளை இப்போது சேவைத் திட்டங்களுக்கு நிதியளிப்பதன் மூலம் சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் ரோட்டேரியன்களுக்கு உதவுகிறது. இது 1990களில் பூமியை பாதுகாப்போம் என்பதிலிருந்து ஒருபடி முன்னோக்கிச் செல்கிறது. கடந்த காலங்களில் நமது சங்கங்கள் மற்றும் மாவட்டங்கள் குடிநீர், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. எனினும் நம்மிடம் போதிய வளங்கள் உள்ளன. எனவே ரோட்டேரியன்கள் நம்மைச் சுற்றியுள்ள சமூகங்களில் சுற்றுச்சூழல் மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் கவனம் செலுத்தலாம்.

பசுமை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றி நாம் சிந்திக்கும் போதெல்லாம் மரங்கள், நதிகளில் மாசுபடியாத நீர், சுற்றுப்புறங்களில் கழிவுகள் தேங்காமல் தூய்மையாக வைத்திருப்பது ஆகியவை குறித்தும் நாம் கனவுகாண வேண்டும்.

நாம் மரக் கன்றுகளை நடுவதுடன் நின்று விடக்கூடாது. அவை ஓரளவு செழித்து வளரும் வரை அதை பராமரிக்க வேண்டும். சமூகங்களை ஈடுபடுத்தி நீர்வளங்களைப் பெருக்கினால் அவை நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்கும்.

பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைப்பது, அவற்றை மறுசுழற்சி செய்து பயன்படுத்துவதில் ஆர்வம் காட்ட வேண்டும். பிளாஸ்டிக் மறுசுழற்சி நடவடிக்கைகளில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வதுடன் ரோட்டரி சங்கங்கள் பிளாஸ்டிக் பயன்பாடு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பள்ளிகளிலும், சமூகத்திடம் மேற்கொள்ள வேண்டும்.

மகிழ்ச்சியின் முதல் நிபந்தனைகளில் ஒன்று "மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான தொடர்பு அறுந்துவிடக்கூடாது" என்று லியோ டால்ஸ்டாய் கூறுகிறார். ரோட்டேரியன்கள் தங்கள் செயல்பாட்டின் மூலம் அத்தகைய இணைப்பாக இருக்க முடியும். மரக்கன்றுகள் நடுவது, பிளாஸ்டிக் பயன்பாடு வேண்டாம் என சமூக மக்களிடம் எடுத்துக்கூறி விழிப்புணர்வை ஏற்படுத்துவது, திடக்கழிவு மேலாண்மை இவற்றில் இளைய தலைமுறையினரை ஈடுபடுத்துவதன் மூலம் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான மகிழ்ச்சியான சூழலை நாம் இணைந்து உருவாக்க முடியும்.



**Dr மகேஷ் கோட்பாகி**
RI இயக்குனர், 2021–23

# களின் செய்திகள்

## பன்முகத்தன்மையுடன், முழுமனதுடன் செயல்படுவோம்!



ஒரு சமயத்தில் இளம் பெண் ஒருவருக்கு மறதி அதிகம் இருந்தது. அவருடைய தாயார் மற்ற எல்லா தாய்மார்களையும் போல எப்போதும் கவனமாக இருக்குமாறு அடிக்கடி கூறிக்கொண்டே இருப்பார். ஒரு நாள் அவரது உடையில் உள்ள பையில் ஓட்டை இருப்பதை சுட்டிக்காட்டி அதை சரி செய்யுமாறு கூறினார். அதற்கு அப்பெண் “பின்னர் செய்கிறேன்” என்று பதில் கூறிவிட்டு விளையாடச் சென்றுவிட்டாள். அன்று மாலை வீட்டிற்கு வந்த அவளது மாமா, சாக்லேட்டுகளை வாங்கிக் கொள்ளுமாறு கூறி அவரிடம் சில நாணயங்களைக் கொடுத்தார். அதை பையில் போட்டுக் கொண்ட அவள், இனிப்பு கடையை நோக்கிச் சென்றாள். ஆனால், அவள் கடையை அடைந்தபோது அவள் பையில் காசுகள் இல்லை. பை ஓட்டை என்பதால் வழியில் எங்கோ விழுந்துவிட்டது.

நாம் ஒன்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் புதிதாக சேர்க்கும் உறுப்பினர்களை கட்டிக் காப்பதுடன் அவர்களைச் சிறந்த ரோட்டேரியன்களாக உருவாக்க வேண்டும். நாம் ஓட்டைகளை சரி செய்வதுடன், புதிய உறுப்பினர்களை இழந்துவிடவும்கூடாது.

புதிய உறுப்பினர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் ரோட்டரி நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் செய்ய வேண்டும். நாம் சங்கத்தை வலுப்படுத்த வேண்டுமானால் பாலின வேறுபாடு பார்க்காமல் இருக்க வேண்டும். ரோட்டரி என்பது ஒரு மனிதநேய அமைப்பாகும். ஆண் உறுப் பினர்களுக்கு ஆதரவாகச் செயல் படுவதன் மூலம் நமது சங்கம் பெரிய வாய்ப்புகளை இழந்து வருகிறது. பெண்களின் பிரதிநிதித்துவம் இருந்தால் புதிய யோசனகள் உருவாகும், சங்கம் பலப்படும், பணிக்குழு திறன் வலுப்படும். எனவே பெண் உறுப்பினர்களை சங்கத்தில் சேர்க்குமாறு அழைப்பு விடுக்கிறேன். இந்த ரோட்டரி ஆண்டின் இறுதியில் ரோட்டரி இந்தியாவில் ஒரு சங்கம்கூட ஆண்கள் மட்டும் உறுப்பினர்களாக இருக்கும் சங்கமாக இருக்கக்கூடாது.

பெண் உறுப்பினர்களை நமது சங்கத்தில் ஒருங்கிணைத்து அவர்களின் பங்களிப்பை ஊக்குவிப்போம். அவர்களின் யோசனைகளுக்கும் மதிப்பளிப்போம். அதைவிட முக்கியமானது அவர்களுக்கு தலைமைப்பதவிக்கான பாதையை திறந்துவிடுவோம். இதைச் செய்ய வேண்டுமானால் நாம் பன்முகத் தன்மைக்கு அழைப்புவிடுத்து ஒருங்கிணைந்து முழுஈடுபாட்டுடன் செயலாற்ற வேண்டும்.

A S வெங்கடேஷ்
RI இயக்குனர், 2021–23


## Board of Trustees

Shekhar Mehta RID 3291
**RI President**

Dr Mahesh Kotbagi RID 3131
**RI Director & Chairman, Rotary News Trust**

AS Venkatesh RID 3232
**RI Director**

Gulam A Vahanvaty RID 3141
**TRF Trustee**

Rajendra K Saboo RID 3080
Kalyan Banerjee RID 3060
Panduranga Setty RID 3190
Sushil Gupta RID 3011
Ashok Mahajan RID 3141
P T Prabhakar RID 3232
Dr Manoj D Desai RID 3060
C Basker RID 3000
Dr Bharat Pandya RID 3141
Kamal Sanghvi RID 3250

### Executive Committee Members (2021–22)

Gaurish Dhond RID 3170
**Chairman Governors Council**

Anup Mittal RID 3011
**Secretary Governors Council**

Ramesh Meher RID 3030
**Secretary Executive Committee**

V Thirupathi Naidu RID 3160
**Treasurer Executive Committee**

Jacintha Dharma RID 3212
**Member Advisory Committee**




**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

**Rotary News Trust**
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Now share articles from
*rotarynewsonline.org*
on WhatsApp.

## கூடுதல் உறுப்பினர்களின் ஆதரவு இருந்தால் உலகுக்குக் கூடுதல் நன்மைகளைச் செய்யலாம்



ஆகஸ்டில் நாம் உறுப்பினர் எண்ணிக்கையில் கவனம் செலுத்துகிறோம். நாம் புதிய சங்கங்களை உருவாக்கி, RI தலைவர் சேகர் மேத்தாவின் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அழைத்துவாருங்கள் என்ற அழைப்புக்குப் பதில் அளிக்கும் போது, இந்த முயற்சிகள் நம் அமைப்பின் ஒவ்வொரு நிலையிலும் எப்படி நேர்விதத் தாக்கத்தைக் கொண்டிருக்கும் என்று சிந்திப்போம்.

ரோட்டரியின் இரண்டு மிகப் பெரிய சொத்துகள், அதன் உறுப்பினர்களும், ரோட்டரி அறக்கட்டளையும்தான். இவை இரண்டும் தொடர்புள்ளவை. நம்முடைய அமைப்பில் 48,000க்கும் மேற்பட்ட ரோட்டரி, ரோட்டராக்ட் சங்கங்கள் உள்ளன, நம் அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட சங்க உறுப்பினர்கள் இல்லாவிட்டால், நாம் சேவை செய்ய இயலாது. நம் உறுப்பினர்கள், அடித்தட்டுத் திட்டங்களில் பணியாற்றுகிறார்கள், பல அறக்கட்டளைத் திட்டங்கள், நல்கைகளை ஆதரிக்கும் பங்களிப்புகளைச் செய்கிறார்கள்.

ரோட்டரியில் கூடுதல் உறுப்பினர்கள் இருந்தால், அறக்கட்டளை உலகில் இன்னும் கூடுதல் நன்மையைச் செய்யலாம். இன்று, நம்முடைய உறுப்பினர்களில் சுமார் மூன்றில் ஒரு பங்குப் பேர் ஆண்டு வழங்கல் அல்லது பிற வழிமுறைகளின் வழியாக அறக்கட்டளையைச் சுறுசுறுப்பாக ஆதரிக்கிறார்கள். அந்தப் பங்களிப்பை நாம் சிறிதளவு கூடுதலாக்கினால்கூட, ரோட்டரியின் வீச்சை நாம் எப்படி நீட்டிக்கலாம் என்று கற்பனை செய்யுங்கள். ரோட்டரியன்கள் கூடுதல் பங்களிப்புகளை வழங்கும்போது, ரோட்டரி அமைதி மையங்களுக்குக் கூடுதல் நிதி கிடைக்கும், பில் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையுடனான நம்முடைய கூட்டுப்பணியால், இளம்பிள்ளைவாதத்தை அகற்ற உதவும்.

ரோட்டரி அறக்கட்டளை ஆற்றல்மிக்க விசையாகும், அது உலகெங்கும் தாக்கம் மிகுந்த மற்றும் நீடித்திருக்கிற திட்டங்களைச் செயல்திறனுடன் நடத்துகிறது; சாரிட்டி நாவிகேட்டர் அமைப்பு, தொடர்ந்து 13 ஆண்டுகளாக TRFக்கு ஆண்டு தோறும் நான்கு-விண்மீன் மதிப்பீட்டை வழங்கி அங்கீகரித்துள்ளது. அனைத்து ரோட்டரி உறுப்பினர்களும் இதை எண்ணிப் பெருமைப்படலாம்.

உங்களுடைய அடுத்த சங்கக் கூட்டத்தின் போது 10 நிமிடங் களை எடுத்துக்கொண்டு, இந்த ஆண்டு அறக்கட்டளையில் கூடுதலானவர்களைப் பங்கேற்கச் செய்வதற்கான வழிகளை விவாதியுங்கள். நீங்கள் எதைச் செய்தாலும், ஒரு விஷயத்தை நினைவில் வையுங்கள், ரோட்டரியின் முயற்சிகளை இயக்குவதும் நம் அறக்கட்டளையை நீடிக்கச்செய்வதும் நம் உறுப்பினர்கள் தான், அதாவது, நாம் அனைவரும்தான்.

**ஜான் F ஜேர்ம்**
TRF அறக்கட்டளை தலைவர்.



## TRFக்கு ஒவ்வொரு ரோட்டரியனும் $100 அளியுங்கள்



நம் சேகர் மேத்தா ரோட்டரிக்குத் தலைமை தாங்கும் நேரத்தைத் தொடர்ந்து பெருமையுடன் கொண்டாடுவோம். வாழ்க்கைகளை மாற்றச் சேவை புரியுங்கள் என்னும் அவருடைய உரத்த அழைப்பு, நலிந்த பின்னணி கொண்டோருக்கான நம் அர்ப்பணிப்பைப் பல மடங்காக்கும் வினையூக்கியாகச் செயல்படவேண்டும்.

2020–21 DGகளுடைய வாழ்க்கையை நோய்ப்பரவல் மிகக் கடினமாக ஆக்கியது. எனினும், அவர்களும் அவர்களுடைய TRF தலைமைக் குழுக்களும் கூடுதலாக உழைத்து 2019–20 மொத்தப் பங்களிப்பைத் தாண்டிச் சென்று நம்மைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள்.

நிறைவுத் தொகை இன்னும் கணக்கிடப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது என்றாலும், சமீபத்திய கணக்கின்படி நான்கு பகுதிகளுக்கும் சேர்ந்து மொத்தத் தொகை $23.5 மில்லியன், அதில் இந்தியாவின் பங்களிப்பு $22.3 மில்லியன். இந்த இரு எண்களும் புதிய சாதனை களாகும். இது உண்மையில் மிகச் சிறந்த செய்தி.

மொத்தப் பங்களிப்பு 3.5 மில்லியனுடன் DG சுன்னில் மெஹ்ரா தலைமையிலான D 3141தான் உலகின் முதல் மாவட்டமாக முன்னணியில் உள்ளது. வேறு ஆறு இந்திய மாவட்டங்கள் (3131, 3232, 3090, 3201, 3060 மற்றும் 3011) உலக அளவில் சிறந்த 50ல் இடம் பெற்றுள்ளன. IPDGகள், அவர்களுடைய TRF குழுக்கள், தாராளமாக நன்கொடை வழங்கிய நம் நன்கொடை யாளர்கள் மற்றும் அனைத்துப் பிராந்திய ஒருங்கிணைப் பாளர்களையும் (RRFCகள், EMGAகள் மற்றும் EPNCகள்) நான் பாராட்டுகிறேன். அத்துடன், மொத்த AF பங்களிப்புகள் முந்தைய ஆண்டைவிடக் கிட்டத்தட்ட 18% கூடியுள்ளன, இது மிகவும் குறிப்பிடக்கூடிய ஒன்றாகும்.

நான் TRF அறங்காவலராகப் பணியாற்றும் நிறைவு ஆண்டு இது. ஒவ்வொரு ரோட்டரியனும் TRFக்குக் குறைந்தது $100 பங்களிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன், சராசரியாக இல்லை, தனித் தனியாக. இதன் மூலம், நான்கு பகுதிகளுக்குமான 2021–22 இலக்கான $30 மில்லியனை நாம் இன்னும் எளிதில் எட்டலாம். ஒவ்வொரு சங்கத் தலைவர், DGயிடமும் நான் கூற விரும்புவது, இது உங்கள் கணம். நாம் நம்முடைய மிகச் சிறந்த பணியைச் செய்வோம், வாழ்க்கைகளை மாற்றுவதற்காகச் சேவை புரிவோம்.



**குலாம் வாஹன்வதி**
TRF அறங்காவலர்

## Unaudited Interim TRF Contributions as on June 2021

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus | Endowment Fund | Other Funds | Total Contributions |
|---|---|---|---|---|---|
| | | | India | | |
| 2981 | 197,182 | 8,037 | 22,231 | 2,058 | 229,509 |
| 2982 | 157,849 | 19,308 | 20,770 | 109,312 | 307,240 |
| 3000 | 221,823 | 37,784 | 492 | 74,464 | 334,563 |
| 3011 | 339,664 | 17,593 | 65,653 | 596,775 | 1,019,684 |
| 3012 | 110,704 | 2,780 | 0 | 42,321 | 155,806 |
| 3020 | 213,466 | 166,771 | 153,471 | 45,907 | 579,615 |
| 3030 | 222,792 | 5,407 | 39,408 | 167,057 | 434,663 |
| 3040 | 66,519 | 3,546 | 0 | 182,456 | 252,521 |
| 3053 | 77,915 | 8,642 | 24,961 | 230,147 | 341,665 |
| 3054 | 112,356 | 7,918 | 0 | 622,200 | 742,473 |
| 3060 | 371,823 | 3,759 | 207,164 | 615,999 | 1,198,745 |
| 3070 | 63,184 | 2,760 | 0 | 74,797 | 140,741 |
| 3080 | 154,704 | 17,062 | 1,097 | (13,280) | 159,583 |
| 3090 | 62,869 | 603 | 0 | (736) | 62,736 |
| 3100 | 72,466 | 252 | 0 | 15,885 | 88,603 |
| 3110 | 104,698 | 300 | 0 | 0 | 104,999 |
| 3120 | 64,642 | 2,378 | 0 | 9,659 | 76,679 |
| 3131 | 506,073 | 44,852 | 172,872 | 1,035,650 | 1,759,448 |
| 3132 | 82,501 | 7,335 | 15,000 | 8,451 | 113,287 |
| 3141 | 1,081,701 | 52,184 | 427,101 | 1,963,778 | 3,524,764 |
| 3142 | 345,152 | 37,852 | 1,451 | 111,320 | 495,776 |
| 3150 | 240,891 | 22,687 | 207,804 | 55,026 | 526,408 |
| 3160 | 160,306 | 21,109 | 12,085 | 440 | 193,940 |
| 3170 | 513,558 | 31,464 | 5,554 | 411,534 | 962,111 |
| 3181 | 225,769 | 12,613 | 0 | 9,385 | 247,767 |
| 3182 | 133,331 | 7,804 | 0 | 41,729 | 182,864 |
| 3190 | 395,810 | 129,555 | 121,058 | 577,930 | 1,224,353 |
| 3201 | 306,596 | 50,148 | 0 | 935,423 | 1,292,167 |
| 3202 | 116,506 | 34,071 | 1,135 | 244,718 | 396,430 |
| 3211 | 110,445 | 4,554 | 1,300 | 179,795 | 296,094 |
| 3212 | 27,466 | 69,801 | 10,153 | 497,876 | 605,295 |
| 3231 | 20,891 | 2,145 | 0 | 23,767 | 46,804 |
| 3232 | 152,178 | 62,690 | 50,199 | 1,471,981 | 1,737,047 |
| 3240 | 278,481 | 54,172 | 0 | 48,935 | 381,588 |
| 3250 | 102,571 | 6,225 | 7,195 | 150,793 | 266,784 |
| 3261 | 154,709 | 3,441 | 50,000 | 114,300 | 322,450 |
| 3262 | 122,689 | 5,051 | 2,562 | 950 | 131,253 |
| 3291 | 218,366 | 18,522 | 58,758 | 72,592 | 368,238 |
| 3220 Sri Lanka | 247,012 | 38,685 | 42,000 | 49,406 | 377,103 |
| 3271 Pakistan | 80,601 | 102,291 | 0 | 308,125 | 491,017 |
| 3272 Pakistan | 87,460 | 25,578 | 0 | 1,168 | 114,205 |
| 3281 Bangladesh | 298,038 | 90,958 | 90,894 | 544,889 | 1,024,779 |
| 3282 Bangladesh | 79,560 | 13,119 | 0 | 8,270 | 100,949 |
| 3292 Nepal | 343,542 | 17,196 | 0 | 461,654 | 822,392 |

Source: RI South Asia Office

Rotary

## Service above Self Award recipients for 2020–21

1. Amjad Ali
2. Ashis Kumar Roy
3. Ashok Kantoor
4. Chouth Mal Birla
5. Devdas Rai Badur
6. Dineshkumar Sharma
7. Dipti Ranjan Patnaik
8. Dr Pijush Kanti Roy
9. Jagadeeswara Rao Maddu
10. M Arun
11. Madhukar Malhotra
12. Manoj Agarwal
13. Nitin Dafria
14. Raj Kumar Bhutoria Raj
15. Rajendra Ruia
16. Ranjeet Singh
17. Ratna Prabhakar Anne
18. Ravi Deshpande
19. Saleem M
20. Salim Batada
21. Sushil Saini
22. Vasu Rajaram
23. Vijay Purwar
24. Y Janardhan Rao
25. Yashwant Jejurikar
26. Dr Aruna Tantia

# ராஜஸ்தானில் தடுப்பணை கட்டிய இரு தில்லி ரோட்டரி சங்கங்கள்

ரஷீதா பகத்

கோவிட் தொற்று காலத்தில் சவால்கள் இருந்தபோதிலும் பிரதிபலிக்கக்கூடிய மற்றும் நிலையான நீர் திட்டங்கள் மூலம் ராஜஸ்தானை பசுமையாக்குவதில் இந்திய ரோட்டரி சங்கங்கள் ஆர்வமாக செயல்பட்டுள்ளன. இந்த ஆண்டு ஜூன் மாதம், தில்லியைச் சேர்ந்த இரண்டு ரோட்டரி சங்கங்கள் இணைந்து, ராஜஸ்தான் மாநிலம், ஆல்வார் மாவட்டத்தில், தண்ணீர் சேமிப்புத் திட்டத்தின் கீழ் சட்டன்வாலா தடுப்பணையை கட்டி யுள்ளது. தில்லி மந்தன் ரோட்டரி சங்கம் மற்றும் தில்லி வெஸ்ட் ரோட்டரி சங்கம் இரண்டும் சேர்ந்து இந்த தடுப்பு அணையைக் கட்டியுள்ளன. இதன் கொள்ளளவு 72,000 கன அடியாகும். இதன் மூலம் 200 ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

தில்லி மந்தன் ரோட்டரி சங்கத்தின் தலைவராக இருக்கும் போது இந்த தண்ணீர் சேமிப்புத் திட்டத்தை செயல்படுத்தும்



*RCs தில்லி மந்தன் மற்றும் தில்லி வெஸ்ட் உறுப்பினர்கள் கிராம மக்களுடன்.*

யோசனை எனக்கு வந்தது. நான் PETS கூட்டத்தில் கலந்துகொண்டபோது எங்கள் மாவட்ட ஆளுநர் (RID 3011) சஞ்சீவ் மெஹ்ரா, தமது பதவிக் காலத்தில் மாவட்டத்தில் 1,000 தடுப்பணைகள் கட்டப்படவேண்டும் என்பது தமது குறிக்கோள் என குறிப்பிட்டார். உடனே, "எனது பதவிக்காலத்தில் சங்கத்தின் மூலம் பொருத்தமான இடத்தில் ஒரு தடுப்பணை கட்டுவது என்று எனக்கு நானே உறுதிமொழி எடுத்துக் கொண்டேன்" என்றார் சங்கத்தின் தலைவர் N K லம்பா.



சமூகத் தேவைகளின் அடிப்படையில் தடுப்பணை கட்டுவதற்கான சாத்தியமான இடங்களை நான் ஆராயத் தொடங்கினேன். இன்னும் சொல்லப்போனால் எனது பதவிக்காலம் தொடங்குவதற்கு முன்னரே அதாவது கடந்த 2020 பிப்ரவரி மாதமே நான் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டேன். PHDRDF என்னும் ஊரகப் பகுதி வளர்ச்சி அறக்கட்டளையை கூட்டாளராகச் சேர்த்துக் கொண்டேன். விவசாயி களின் நலனில் அக்கறை செலுத்தி வரும் அந்த அறக்கட்டளையின் பரிந்துரையின் பேரில் சட்டன்வாலா தடுப்பணைக்கான இடம் தேர்வு செய்யப்பட்டது. அந்தப் பகுதியில் நீர் மட்டம் குறைந்து காணப் பட்டது. மேலும் மழைப் பொழிவும் குறைவு. தண்ணீர் பற்றாக்குறை இருந்து கொண்டே இருந்தது. PHDRDF அறக்கட்டளை பரிந்துரைத்த தடுப்பணைக்கான இடம் ஆல்வார் மாவட்டம், ஹாஜிபூர் மற்றும் உம்ரென் கிராம மக்களின் பயன் பாட்டுக்கும், விவசாய நிலங்களில் பாசனம் செய்வதற்கும் ஏற்றவாறு நிலத்தடி நீர் ஆதாரங்களை பெருக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டது.

திட்டச் செலவு ரூ.6 லட்சம். ஆனால், எங்கள் சங்கம் மிகச் சிறியது. தொடங்கப்பட்டு மூன்றாண்டுகளே ஆகிறது. மேலும் அதில் 25 உறுப்பினர்களே உள்ளனர். RIக்கு செலுத்த வேண்டிய நிதி போக மீதம் ரூ.4.5 லட்சம் தான் கையில் இருந்தது. அதில் ரூ.3 லட்சத்தை இத்திட்டத்திற்காக ஒதுக்கினோம். மிகப்பெரிய அளவிலான சங்கமான தில்லி வெஸ்ட் ரோட்டரி சங்கத்தை எங்களுடன் இணைந்து செயல்பட அழைத்தோம். அவர்களும் அதற்கு உடன்பட்டதுடன் தங்கள் பங்களிப்பாக ரூ.3 லட்சம் கொடுத்தனர் என்றார் லம்பா.

DGE அசோக் கன்டூர் (2022–23) தில்லி வெஸ்ட் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராக உள்ளார்.

### தொற்று சவால்கள்

இந்த திட்டத்தின் முதல் சவாலாக நாங்கள் சந்தித்தது தேர்ந்தெடுக் கப்பட்ட இடத்தை ஆய்வு செய்து அது பொருத்தமான இடம்தானா என்று நேரில் சென்று தீர்மானிப்பது. மக்கள் வீட்டைவிட்டு வெளியே வருவதற்கே பயந்த நேரம் அது. ஆனால், கடந்த 2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நாங்கள் 6 பேர் ஒரு குழுவாக தில்லியிலிருந்து 175 கி.மீ பயணம் செய்து அந்த இடத்தை ஆய்வு செய்தோம்.

எங்களின் கூட்டு ஆய்வின்படி அந்த இடத்தில் தடுப்பணை கட்டப்பட்டால் கிராமத்தில் உள்ள 710 குடும்பங்களைச் சேர்ந்த 4,500 பேர் மற்றும் 218 ஹெக்டேர் நிலம் மற்றும் 4,800 கறவை மாடுகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று தீர்மானிக்கப் பட்டது. இந்த கிராமத்தில் உள்ளவர்கள் பெரும் பாலும் சிறு மற்றும் குறு விவசாயிகள் தான். அதாவது அவர்களிடம் ஒன்று முதல் மூன்று ஏக்கர் வரைதான் நிலம் இருந்தது. பெரும்பாலான விவசாயிகள் வெங்காயம் சாகுபடி செய்து வந்தனர். சிலர் காய்கறிகள் பயிரிட்டு வந்தனர். எனினும் பணப் பயிரான வெங்காயம் தான் அவர்களின் முக்கிய சாகுபடியாக இருந்தது. அதிர்ஷ்டவசமாக இந்த விவசாயிகள் தொற்றினால் பாதிக்கப்படவில்லை.

ஆனால், தண்ணீர்த் தேவைகளுக்கு விவசாயிகள் மழை நீரையே நம்பியிருந்தனர். வேறு எந்த நீர்ப்பாசன முறையும் இல்லை. நாங்கள் தடுப்பணை கட்டப்போகிறோம் என்று சொன்னதும் கிராம மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். ஏனெனில் இதற்கு முன் யாரோ அருகிலேயே அணையை உருவாக்கியுள்ளனர். இதனால் அப்பகுதியில் 100 அடியில் தண்ணீர் மட்டம் உயர்ந்தது. கிராமங்களில் வறண்டு கிடந்த கிணறுகளிலும் தண்ணீர் ஊறத் தொடங்கியிருந்தது.

ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த நாங்கள் கிராம மக்களிடம் பேசினோம். தடுப்பணை கட்ட இருப்பதாகவும் அதற்கு அவர்களின் உடலுழைப்பு தேவை என்றும் கோரினோம். அதற்கு அவர்கள் உடன்பட்டனர். நாங்கள் பஞ்சாயத்து தலைவர் மற்றும் உறுப்பினர் களிடமும் பேசினோம். அவர்களும் தடுப்பணை அமைத்துக் கொடுத்தால் அதை பராமரிப்பதாக உறுதியளித்தனர் என்று லம்பா மேலும் கூறினார்.

பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் பயனாளிகள் மிகுந்த ஈடுபாட்டுடன் தங்கள் உடலுழைப்பின் மூலம் திட்டச் செலவில் 10 சதவீத




*சட்டன்வாலா தடுப்பணை திறப்பு விழாவில் ரோட்டரியினர் மற்றும் கிராமத்தினர்.*

பங்களிப்பைச் செய்தனர். தடுப்பணை 75 நாள்களில் கட்டி முடிக்கப்பட்டது. PHDRDF தனது பங்காக ரூ.50,000த்தை இத்திட்டத்திற்காக வழங்கியது.

பருவமழையை பெறும் வகையில் சட்டன்வாலா தடுப்பணை இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் தேதி கட்டி முடிக்கப்பட்டது. இப்பிராந்தியத்தைச் சேர்ந்த விவசாயிகள் பாசன நீர் பெறவும், கிராம மக்களின் கிணறுகளில் தண்ணீர் மட்டம் அதிகரிக்கவும் செய்யும் இந்த திட்டத்தை செயல்படுத்துவதில் கூட்டாளராக இருந்த தற்காக நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம் என்று தில்லி வெஸ்ட் ரோட்டரி சங்கத் தலைவர் ஆரூன் ருங்தா கூறினார்.

இந்த அணை கடந்த ஜூன் மாதம் 22ஆம் தேதி திறக்கப்பட்டது. இரண்டு சங்கங்களின் தலைவர்கள் லம்பா மற்றும் ருங்தா தலைமையில் ரோட்டேரியன்களும், உள்ளூர் முக்கியப் பிரமுகர்களும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.■




*தடுப்பணையை ஒட்டி மரங்கள் நடப்படுகின்றன.*

# நம் மருத்துவர்களை வணங்குவோம்

ராஜேந்திர சாபூ



இப்போதைய நோய்ப்பரவல் நேரத்தில், மருத்துவர்கள் முன்களத்தில் உள்ளார்கள், தங்கள் உயிருக்கு ஆபத்து இருந்தபோதும் ஓய்வின்றிச் சேவை புரிகிறார்கள். இவர்களில் சிலர் தங்கள் உயிரையும் தியாகம் செய்துள்ளார்கள். இவர்கள் அனைவரையும் நாம் வணங்க வேண்டும்.

நோய்ப்பரவலுக்கு வெளியிலும், மருத்துவர்கள் தங்களுடைய கடமைக் கோட்டைத் தாண்டி உழைக் கிறார்கள், பெரிய சவால்களை எதிர்கொள்கிறார்கள். நம் மருத்துவர் களுடைய அசாதாரணத் திறனை, அர்ப்பணிப்பு உணர்வை, துணிவை நான் பலமுறை கண்டுள்ளேன்.

1998ல் உகாண்டாவில் தொடங்கி, ஆப்பிரிக்கா மற்றும் இந்தியாவில் 20க்கும் மேற்பட்ட நாடுகளில் பல மருத்துவப் பணிகள் நடை பெற்றுள்ளன, இதில் மருத்துவர்கள் கடுமையாக உழைத்துள்ளார்கள், தங்கள் உயிருக்கு விடுக்கப்பட்ட மிரட்டல்களையும் பொருட்படுத்தாமல் சேவை புரிந்துள்ளார்கள்.

நம்முடைய அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள், தன்னார்வலர்கள் குழு கம்பாலாவுக்கு வந்தபோது, குண்டு வெடிப்பு ஆபத்து மிகுதியாக இருந்தது. எனினும், Dr S P S க்ரெவால் மற்றும் Dr உமா பிரதான் என்ற இரண்டு அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் ஒரு சிறு விமானத்தில் கிளர்ச்சியின் மையமான குலு-வுக்குப் பறந்தார்கள். அவர்கள் ஐந்து நாட்களுக்கு 250 பேருக்கு கண்புரை அறுவைச் சிகிச்சை களைச் செய்தார்கள்.

நைஜீரியாவின் தேவை மிகுதியாக இருந்ததால், நாங்கள் மூன்று முறை அங்கு சென்றோம். நெடுஞ்சாலை களில் கடத்தப்படுவது ஓர் இயல்பாக ஆகியிருந்தது. அபுஜாவில், பொகோ ஹராம்பற்றிய அச்சம் எப்போதும் இருந்தது. நைஜீரிய அரசு எங்கள் குழுவுக்கு எப்போதும் மிகச் சிறந்த பாதுகாப்பை அளித்தது.

இந்த மருத்துவர்கள் எந்தப் பொருளாதார நன்மையும் இன்றிப் பணியாற்றினார்கள்; அவர்களுக்குக் கிடைத்த ஒரே சம்பளம் அல்லது பரிசு, மனித குலத்துக்குச் சேவை புரிகிறோம் என்ற மன நிறைவுதான்.

இந்த நாயகர்கள் எல்லாருடைய பெயரையும் குறிப்பிடவேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால், சில முன்னோடிகளுடைய பெயர்களுக்குதான் இங்கு இடம் உள்ளது: Dr G S கொச்சார், Dr R S பர்மர்,Dr P S சாரி, Dr ராஜீவ் பிரதான், Dr மாதவ் பொராடெ. 25க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு நாங்கள் சென்றுள்ளோம்.

இன்னொரு பெரிய அச்சம், HIV/AIDS வெளிப்பாடு. லெசொதோவில், எங்கள் அறுவைச் சிகிச்சை மருத்துவர்களான Dr பர்மர் மற்றும் Dr தபோஷி பட்னாயக் ஆகியோர் ஓர் HIV/AIDS நோயாளிக்கு அறுவைச் சிகிச்சை செய்யும் போது, ஊசி குத்தல்களைப் பெற்றார்கள். அவர்கள் ஆன்ட்டிரெட்ரோவைரல் சிகிச்சையை எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

நோயாளி ஒப்புதல் படிவத்தில் முறையாகக் கையொப்பம் இட்டிருந்தபோதும், உறவினர்கள் எங்கள் அறுவைச் சிகிச்சை மருத்து வர்களைத் தாக்க முயன்றார்கள், நல்லவேளையாக, மாவட்ட நீதிபதி பிரச்சனையைத் தீர்த்துவைத்தார்.

இந்தியாவுக்குள் எங்கள் மருத்துவப் பணிகள் 2006ல் தொடங்கின. 2007ல், மாவோயிஸ்ட் களின் மையமாகிய ஒடிஷா மாநிலத்தைச் சேர்ந்த பரிபடாவுக்கு ஒரு குழு சென்றது. நாங்கள் உதாம்பூரில் இருந்தோம், அங்கு, எல்லை தாண்டிய தாக்குதல்களின் அச்சம் எப்போதும் இருந்தது. எங்கள் குழு, நக்சலைட் களுடைய இல்லமாகிய சத்திஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த ஜக்தால்பூரில் பணியாற்றியது.

நாகாலாந்து மாநிலத்தில் உள்ள திமாபூரில், உள்ளூர் அறுவைச் சிகிச்சை மருத்துவர் ஒருவர் ஒரு முக்கியமான அறுவைச் சிகிச்சையைச் செய்தார். அவர்கள் எங்கள் மருத்துவர்களுடைய உதவியைக் கோரினார்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக, நோயாளி அறுவைச் சிகிச்சை மேசையில் இறந்துவிட்டார். நோயாளி ஒப்புதல் படிவத்தில் முறையாகக் கையொப்பம் இட்டிருந்தபோதும், உறவினர்கள் எங்கள் அறுவைச் சிகிச்சை மருத்துவர்களைத் தாக்க முயன்றார்கள், நல்லவேளையாக, மாவட்ட நீதிபதி பிரச்சனையைத் தீர்த்துவைத்தார்.

கோவிட் நோயாளிகளுக்கான மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்கள் பல சவால்களைச் சந்திக்கிறார்கள். எனினும், அவர்கள் கொரோனா வைரஸ் என்ற எதிரியை எதிர்த்துத் துணிவுடன் உழைக்கிறார்கள். இவை அனைத்தும், மனித குலத்துக்காகதான்.

*எழுத்தாளர் RI*
*முன்னாள் தலைவர்*
*(நன்றி: The Tribune)*

Rotary PEOPLE OF ACTION

# மலிவு விலை ரோட்டரி உணவகம்

ஜெய்ஸ்ரீ



*திருப்பூரில் ஒரு குளத்தை சீரமைக்கும் பணியில் RC திருப்பூர் வெஸ்ட்.*

இந்த ரோட்டரி உணவகத்தில் இட்லி, வடை, போண்டா மற்றும் தேநீர் ரூ.5க்கும், தக்காளி, எலுமிச்சை போன்ற கலந்து சாதங்கள் ஒரு பிளேட் ரூ.20க்கும் விற்பனை செய்யப்படுகிறது. அது என்ன உணவகம் என்று கேட்கிறீர்களா? அதன் பெயர் ரோட்டரி வள்ளலார் மக்கள் உணவகம். RID 3203க்கு உட்பட்ட RC திருப்பூர் வெஸ்ட் தான் நடத்தி வருகிறது. 6 மாதங்களுக்கு முன்னர் இதை RID A S வெங்கடேஷ் திறந்துவைத்தார். எந்தவித லாபநோக்கும் இல்லாமல் அடக்கவிலைக்கே பொருள்கள் விற்கப்படுகின்றன. கல்லூரி மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் அலுவகம் செல்வோர் என பலதரப்பட்ட மக்களும் இங்கு வந்து செல்கின்றனர், என்கிறார் இரண்டாவது முறையாக சங்கத்தை தலைமையேற்று நடத்தி வரும் V ரகுபதி.



*சங்கத் தலைவர் ரகுபதி சேமிப்பு சான்றிதழை ஒரு பெண் குழந்தையிடம் அளிக்கிறார். உறுப்பினர்கள் பாலசுப்ரமணியம் மற்றும் நடராஜ் ஆகியோரும் உடன் உள்ளனர்.*

2006ம் ஆண்டு சாசனம் செய்யப்பட்ட தினத்திலிருந்து இன்று வரை சங்கம் செயல்படுத்தியுள்ள திட்டங்களை உணவகத்தில் விளம்பரப்படுத்தியுள்ளனர். கோவிட் இரண்டாவது அலையின் போது எங்கள் உணவகத் திலிருந்து வீட்டுத்தனிமையில் இருக்கும் நோயாளிகள், கோவிட் முன்களப் பணியாளர்களான் போலீஸார், மருத்துவக் குழுவினர் உள்ளிட்டோருக்கு உணவுகள் வழங்கப்பட்டுள்ளன என்கிறார் ரகுபதி.

திருப்பூரில் 15,000 சதுர அடியில் ரூ.5 கோடி மதிப்பில் ரோட்டரி சங்கத்தின் சார்பில் மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது. இதற்கு ரகுபதி, ரூ.2 கோடி மதிப்புள்ள 55 சென்ட் நிலத்தை நன்கொடையாக கொடுத்துள்ளார். மூன்று சர்வதேச மானிய உதவிகள் மூலம் 7 அரசுப் பள்ளிகளில் கழிப்பறைகள், பல்லடம் அரசு மருத்துவமனைக்கு உயிர்காக்கும் கருவிகள், 5 பொது சுகாதார நிலையங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை சீரமைப்பது ஆகிய பணிகளும் நடைபெற்று வருகின்றன.

## ஒரு ஆடம்பரமற்ற திருமணம்



*புதுமணத் தம்பதிகள் அருள் பிரானேஷ் மற்றும் அனு TRFக்கு திருமண சேமிப்பிலிருந்து ஒரு பகுதியை அளிக்கின்றனர்.*

*பொதுவாக இந்தியாவில் திருமணங்கள் ஆடம்பரமாக பெரும் பொருட்ச் செலவில் நடத்தப்படுகின்றன. ஆனால், ரோட்டேரியன் அருள் பிரானேஷ்-அனு இருவரின் திருமணம் மிக எளிய முறையில் நடைபெற்றது. இதன் மூலம் சேமிக்கப்பட்ட ரூ.38 லட்சத்தை அவர்கள் கோவிட் நிவாரண உதவிக்கு வழங்கியுள்ளனர். நாங்கள் திருமணத்துக்காக ரூ.50 லட்சம் செலவிட திட்டமிட்டிருந்தோம். ஆனால் கோவிட் தொற்று காரணமாக இரு வீட்டாரும் திருமணச் செலவை ரூ.13 லட்சமாக குறைக்க முடிவு செய்தோம். எங்கள் திருமணம் உள்ளூர் கோயில் ஒன்றில் எளிமையாக நடந்து முடிந்தது என்று கூறிய பிரானேஷ், திருப்பூர் வெஸ்ட் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராக இருக்கிறார். இவரது தந்தை அருள் செல்வம், திருப்பூர் ஸ்மார்ட் சிட்டி ரோட்டரி சங்க உறுப்பினராக இருக்கிறார்.*

*ஈரோடு பெருந்துறை அரசு மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டு வரும் ரோட்டரி மருத்துவமனைக்கு ரூ.11 லட்சம், திருப்பூர் வெஸ்ட் ரோட்டரி சங்கம் சார்பில் பல்லடம் அரசு மருத்துவ மனையில் ICU பிரிவு ஏற்படுத்தும் திட்டத்துக்கு ரூ.8 லட்சம், திருப்பூர் ரோட்டரி கோவிட் சிகிச்சை மையத்துக்கு ரூ.5 லட்சம் புஞ்சை புளியம்பட்டி ரோட்டரி சங்கம் நடத்தி வரும் முதியோர் இல்லத்துக்கு ரூ.2 லட்சம் வழங்கியுள்ளனர். மேலும் கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட 8 குடும்பங்களுக்கு ரூ.7 லட்சம் வழங்கியுள்ளனர்.*

நீர் நிலைகளை மீட்டெடுப்பதிலும் சங்கம் கவனம் செலுத்தி வருகிறது. ரூ.2 கோடியில் இரண்டு குளங்கள் தூர்வாரப்பட்டு வருகின்றன. இந்த பணிகள் முடிவடைந்ததும், அப்பகுதி முழுவதும் உள்ள மக்களின் தண்ணீர்த் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் மற்றும் பறவைகளின் புகலிடமாக அந்த இடம் மாறிவிடும். இந்த மறுசீரமைப்பு பணிகளை நிறைவேற்ற ரோட்டரி நொய்யல் நீர்வள மேம் பாட்டு அறக்கட்டளையை சங்கம் உருவாக்கியுள்ளது. இதற்காக சங்க உறுப்பினர்கள் தாராளமாக நிதியுதவியுள்ளனர். இரண்டு ரோட்டரி உறுப்பினர்கள் தலா ரூ.25 லட்சம் கொடுத்துள்ளனர். தற்போது அறக்கட்டளைக்கு ரூ.75 லட்சம் நிதி சேர்ந்துள்ளது. திருப்பூரில் நொய்யல் ஆற்றைச் சுற்றி 100 குளங்கள் மற்றும் ஏரிகள் உள்ளன என்றார் அவர்.

கடந்த ஆண்டு இரண்டு புதிய ரோட்டரி சங்கங்கள் நிறுவப்பட்டன. புதிதாக 156 உறுப்பினர்கள் சேர்ந்தனர். TRFக்கு 1,10,000 டாலர் நிதி பங்களிப்பு செய்யப்பட்டது. சங்க உறுப்பினர் சுவாமி மனோஜ் குமார் 32,000 டாலர் நேரடி பங்களிப்புச் செய்தார். தவிர வேறு 6 பெரிய கொடையாளர்களும் பங்களித்துள்ளனர். இந்த ஆண்டு மேலும் 100 உறுப்பினர்களை புதிதாக சேர்க்க முடியும் என்று நம்புகிறோம். TRFக்கு 1,00,000 டாலர் நிதி திரட்டவும் திட்டமிட்டுள்ளோம் என்றார் ரகுபதி.



RID A S *வெங்கடேஷ் ரோட்டரி உணவகத்தை துவக்கி வைக்கிறார்.*

நீர்நிலைகளுக்கு குழாய்கள் மூலம் மழைநீரை கொண்டு சேர்க்கும் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு சர்வதேச மானிய உதவி கேட்டு விண்ணப்பித்துள்ளோம். இத்திட்டத்துக்கு மாவட்ட ஆட்சியரின் அனுமதிக்காக காத்திருக்கிறோம் என்று தெரிவித்த அவர், கார்ப்பொரேட் நிறுவனங்கள் பல இத்திட்டத்துக்கு நிதியுதவி அளிக்க ஆர்வமாக உள்ளன என்றார். பள்ளி செல்லும் 2,500 மாணவிகள் உயர்கல்வியைத் தொடர வழிவகுக்கும் வகையில் அவர்களின் கணக்கில் மாதம் ரூ.250 சங்கத்தின் சார்பில் போடப்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.■



# பருவநிலை மாற்ற நெருக்கடி ஆப்பிரிக்கா மீதும் கவனம் செலுத்துங்கள்: வனேஸ்ஸா நகாடே

ரஷீதா பகத்

'இது வானிலை பற்றியது அல்ல, மக்கள் பற்றியது. பல ஆப்பிரிக்கர்கள் தங்கள் வாழ்க்கையை இழந்து விட்டனர். மேலும் சிலர் வீடுகளை, பண்ணைகளை, தொழில்களை இழந்து தவிக்கின்றனர். பூமி தொடர்ந்து வெப்பமயமானால் ஆப்பிரிக்காவில் நிலைமை இன்னும் மோசமாகக் கூடும்.' கடந்த ஜூன் மாதம் நடைபெற ரோட்டரி மெய்நிகர் மாநாட்டில் இப்படி உணர்ச்சிவூர்வமான வேண்டுகோளுடன், இளம் ஆப்பிரிக்க சூழலியல் ஆர்வலர் வனேஸ்ஸா நகாடே ஆர்வத்துடனும் உறுதியுடனும் பேசி பங்கேற்பாளர்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார்.

கடந்த 2017ம் ஆண்டு கம்பாலாவில் உள்ள புகோலோபி ரோட்டரி சங்கத்தின் தலைவராகவும், எழுச்சி இயக்கத்தின் நிறுவனருமான ஒரு ரோட்டேரியனின் மகளான இளம் சூழலியல் ஆர்வலரான வனேஸ்ஸா பேசுகையில், அந்தக் காலத்திலிருந்தே தமது தந்தை உகாண்டாவில் பல்வேறு சமூகத்துடன் இணைந்து ரோட்டரி பசுமை இயக்கத் திட்டத்தின் கீழ் மரச் செடிகளை நடுவதை நான் பார்த்திருக்கிறேன். அவர் விதைத்த விதைதான் மாற்றத்திற்கான குரல் எழுப்ப நான் முடிவெடுத்தது. அவரது துணிச்சலும், செயல்பாடுகளும் என்னை வெகுவாக ஈர்த்தன.

அது நான் பசுமை ஆர்வலராக என்னைத் தூண்டியது. எனது குழந்தைப் பருவத்தில் எனது தந்தையும் மற்றவர்களும் மழையைப் பற்றி பேசுவதையும், விவசாயிகள் தங்கள் நிலத்தை தக்கவைத்துக் கொள்ள மழை எப்போது வரும் என்று காத்திருப்பதையும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், சமீபகாலங்களாக நிலைமை மாறிவிட்டது. எங்கள் தந்தையின் தலைமுறையினர் மழை குறைவாக பெய்வதையும், எப்போதாவது மழை பெய்வதால் பயிர்கள் பாதிக்கப்படுவதையும் கண்டதுண்டு. இறுதியில் மழை கொட்டித் தீர்த்து வயல்கள் வெள்ளக்காடாகி பயிர்களை சாய்த்துவிடும். என் தந்தைக்குத் தெரிந்த விவசாயிகள் பண்ணை களையும் வாழ்வாதாரத்தையும் இழந்தனர். உணவு தானியப் பற்றாக்குறை ஏற்பட்டது.

உணவுப் பொருள்களின் விலை உயர்வு மக்களிடம் பதற்றத்தை ஏற்படுத்தியது. நிலைமை மேலும் மோசமாகியது. எனக்கு அப்போது வயது 21. ஆனால், அவரது குரலில் உள்ள அவசரத்தை என்னால் உணர முடிந்தது. நிலைமை சீராக ஏதாவது ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதை உணர்ந்தேன் என்றார்.

உடனடியாக அவர், சூழல் மாற்றம் பற்றிய ஆராய்ச்சியைத் தொடங்கினார். உலகில் பருவநிலை அடிக்கடி மாறிவரும் நாடான உகண்டாவில் கம்லாலாவைச் சேர்ந்தவர் அவர். பருவநிலை மாற்றங்கள் ஆப்பிரிக்க கண்டத்தை எவ்வாறு அழித்துக் கொண்டிருக்கிறது என்பதை நகாடே அறிந்துகொண்டார். அண்டார்டிகா தவிர உலகில் உள்ள கண்டங்களில் ஆப்பிரிக்காதான் குறைந்த அளவில் கரியமில வாயுவை வெளியிடுகிறது. அதாவது அமெரிக்கா வெளியிடும் கரியமிலவாயுவில் மூன்றில் ஒரு பங்கு அளவே ஆப்பிரிக்கா வெளியிடுகிறது. வரலாற்று ரீதியாக கூறினால் சர்வதேச அளவில் வெளியிடப்படும் கரியமில வாயுவில் ஆப்பிரிக்காவின் பங்கு 3 சதவீதம்தான். ஆனாலும், வெப்பநிலை மாற்றம் காரணமாக அதன் தாக்கத்தை அனுபவிப்பது ஆப்பிரிக்கர்கள்தான். இதனால் புயல், சூறாவளி, பேரழிவை ஏற்படுத்தும் வெள்ளம் மற்றும் வறட்சி ஏற்படுகிறது. இடாய் புயல் ஆப்பிரிக்க கண்டத்தை பாதிக்கும் மிக மோசமான சூறாவளியாகும். இதனால் ஜிம்பாப்வே, மொஸாம்பிக் மற்றும் மலாவியின் பெரும் பகுதிகள் வெள்ளத்தால் சூழ்ந்தன. பலத்த காற்று மற்றும் மழைக்கு 1,300 பேர் பலியானார்கள். நூற்றுக்கணக்கானவர்களை காணவில்லை. அதுமட்டுமல்ல, பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டது.

கடந்த ஆண்டு கிழக்கு ஆப்பிரிக்காவில் அதிக மழை பெய்ததன் விளைவாக விக்டோரியா




ஏரியில் தண்ணீர் நிரம்பி வழிந்ததால் அப்பகுதியில் வெள்ளம் ஏற்பட்டது. வீடுகள் நீரில் மூழ்கின. வயல்களில் பயிர்கள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டன. ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டார்கள். எங்கும் கழிவுநீர் கலந்ததால் சுத்தமான தண்ணீருக்கு நெருக்கடி ஏற்பட்டது. அதிக மழை மற்றும் அசாதாரண வெப்பத்தால் வெட்டுக்கிளிகள் ஆப்பிரிக்காவின் கிழக்கு பகுதியில் படையெடுத்தன. வெட்டுக்கிளிகள் பயிர்களை நாசம் செய்தன. இதனால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை உருவானது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் சூடானில் ஏற்பட்ட வெள்ளத்தில் 100 பேர் உயிரிழந்தனர், மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளை இழந்தனர். வழக்கமாக நைல் நதி கரையை உடைத்துக் கொண்டு ஓடும். அதன் வெள்ள நீரைத்தான் விவசாயிகள் நம்பியுள்ளனர். ஆனால், நைல் நதிக்கரையோரம் வசிப்பவர்கள், கடந்த ஆண்டு வெள்ளம் போல் வாழ்க்கையில் பார்த்ததில்லை என்கின்றனர்.

ஆப்பிரிக்காவின் தெற்கு பகுதிகளில் கடும் வறட்சி ஏற்பட்டதால் உணவுக்கும் தண்ணீருக்கும் தட்டுப் பாடு ஏற்பட்டது. ஜம்பேஸி நதி, சாத் ஏரி மற்றும் விக்டோரியா நீர்வீழ்ச்சி ஆகியவற்றில் பல ஆண்டுகளுக்குப் பிறகு தண்ணீர் குறைவாகவே இருந்தது. கடந்த 50 ஆண்டுகளில் சாத் ஏரி தனது வழக்கமான அளவில் பத்தில் ஒரு பங்காக சுருங்கிவிட்டது. சோமாலியாவில் கடந்த ஐந்து ஆண்டு களாக ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக மொத்த மக்கள் தொகையில் பாதி பேர் உணவு, தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். நைஜீரியாவில் பெரும்பாலான பகுதிகளில் தண்ணீர் பற்றாக்குறை உள்ளது.

ஆக்ஸ்ஃபாம் ஆய்வுப்படி எத்தியோப்பியா, கென்யா மற்றும் சோமாலியாவைச் சேர்ந்த 12 மில்லியன் மக்கள் உணவு கிடைக்காததால் பட்டினி கிடக்க நேரிடுகிறது. இந்தச் சூழலில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் கோளாறுகளால் நிலைமை இன்னும் மோசமடையவே செய்யும் என்கிறார்

வனேஸ்ஸா. வறட்சியும், வெள்ளமும் மக்களுக்கு சொல்லொண்ணா துயரத்தையும் வலியையும் ஏற்படுத்துகிறது. இதனால் பட்டினிச்சாவுகளும் அதிகரிக்கின்றன. வறட்சி 1 சதவீதம் அதிகரித்தால் வேளாண் உற்பத்தி 2.4 சதவீத சரிவை சந்திக்கிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஆப்பிரிக்காவில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பேரிடர்கள் அதிகம் என்றாலும் அவற்றை அதிகம் செய்திகளில் பார்க்க முடியாது. ஆப்பிரிக்காவில் பருவநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள நெருக்கடி உலகில் முன்னிலை வகித்தாலும் அது பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் இடம்பெறுவதில்லை. கலிபோர்னியா அல்லது ஆஸ்திரேலியாவில் வனப்பகுதிகளில் ஏற்படும் காட்டுத் தீ அல்லது ஐரோப்பாவில் ஏற்படும் வெள்ளம் இவற்றுக்கு ஊடகங்கள் கொடுக்கும் முக்கியத்துவம் ஆப்பிரிக்காவின் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பேரிடர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை அவர் ஆவேசமாகக் குறிப்பிட்டார்.

ஆப்பிரிக்காவில் இயற்கை எரிபொருள்களை எரிப்பதால் ஏற்படும் சமூக பொருளாதார நெருக்கடிக்கு வளர்ந்த நாடுகளின் பதில் என்ன என்று அவர் கேள்வி எழுப்பினார். நிலக்கரி அல்லது இயர்கை எரிபொருளை தோண்டியெடுக்க அதிக முதலீடுகள் செய்யப்படுகின்றன. இதற்கு வங்கிகளும் நிதியுதவி அளிக்கின்றன. நாங்கள் நிலக்கரியை சாப்பிடவும், எண்ணெய்யை குடிக்கவும் சாப்பிட முடியாது. உனக்கு ஒரு விஷயம் சரியானது என்று தோன்றினாலும், ஒரு விஷயத்தில் உனக்கு நம்பிக்கை இருக்கிறது என்றாலும் நீ எழுந்து நிற்க வேண்டும் என்று என் தந்தை சொல்லுவார். இப்போது தலைவர்கள் என்று கூறிக்கொள்பவர்களுக்கு அதைச் செய்யும் நேரம் வந்துவிட்டது. அவர்கள் பருவநிலை மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை, நெருக்கடியாக பார்க்க வேண்டும். பொய்யான, வெற்று வாக்குறுதிகள் அளிப்பதை நிறுத்திவிட்டு பொறுப்புகளை சுமக்க தயாராக வேண்டும். என் தந்தையைப் போன்று அவர்களும் துணிச்சலுடன் எழுந்து நிற்கவேண்டும். இதைத்தான் RI ‘மக்கள் செயல்பாடு ‘ என்கிறது.■

# வளர்வோம், சேவை செய்வோம்: சேகர் மேத்தா

ரஷீதா பகத்

'ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பதவியை எட்டிப்பிடிக்க அவர் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. இன்று அவர் பொறுப்பேற்கும் போது எனது கண் முன்பு பல்வேறு நினைவுகள் நிழலாடுகின்றன. அவரது சிறப்பு குணம் என்னவென்றால் அவர் ஒரு அணி வீரர். தன்னுடன் இருப்பவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து ஊக்குவிப்பார். அவர் எந்த ஒரு விஷயத்திலும் ஆழ்ந்த கவனம் செலுத்துவார் அதே நேரத்தில், எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பதையும் உறுதிசெய்கிறார். அதனால்தான் அவரை சக ரோட்டேரியன்கள் விரும்புகிறார்கள் என்று தலைவராக பதவியேற்ற சேகர் மேத்தாவுக்கு நடைபெற்ற மெய்நிகர் பாராட்டு விழாவில் கூறினார் ராஷி மேத்தா.

இந்த சந்திப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவர், எழுத்தறிவு இயக்கம், பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தங்குமிடம் வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களில் மேத்தாவுடன் நெருங்கிப் பணி யாற்றிய PRID கமல் சங்வி. முன்னணியில் இருந்து ஒரு விஷத்தை அவர் தலைமையேற்று நடத்தினாலும் எல்லோராலும் எளிதில் அணுகக்கூடியவர் என்றார் ராஷி. அவரிடம் உள்ள மற்றொரு சிறப்பு என்னவெனில் அவர் எதையும் நேர்மறையாக சிந்திக்ககூடியவர். சவாலான நேரங்களில்கூட மிகவும் அரிதாகவே மன அமைதியை இழப்பார். அவர் எப்போதும் துடிப்புடன் இருப்பார். தெருவோர உணவுகளை விரும்பி வாங்கிச் சாப்பிடுவார். பெரும்பாலான பிரச்னைகளுக்கு எளிதில் தீர்வுகாண்பார்.

வீட்டு விஷயங்களிலும் அவர் அக்கறை செலுத்துவார். பல்வேறு அலுவலகளுக்கு நடுவிலும் குழந்தைகள் என்ன செய்கிறார்கள் என்று கேட்டு விசாரிப்பார். அவர்கள் எங்கு சென்றாலும் அவர்கள் பத்திரமாக சென்றுவிட்டார்களா என்று கேட்பார். அதுதான் சேகர். 100 சதவீதம் முழுமையான மனிதர். அவர் நகைச்சுவையுடனும், வேடிக்கையாகவும் பேசினாலும் ஒரு சிறந்த நலைவர். நல்ல கூட்டாளர். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் மனிதநேயம் உள்ள மனிதர். அதனால்தான் அவரது தகுதிக்கும், கடின உழைப்புக்கும் ஏற்ற ஒரு பதவி அவரைத் தேடிவந்துள்ளது.

பிரபலங்கள் பங்கேற்ற மெய்நிகர் சந்திப்பில் அவருக்கு மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, முன்னாள் தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவ்டேகர், முன்னாள் சுகாதார அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் உள்ளிட்டோர் வாழ்த்துத் தெரிவித்தனர், முன்னாள் தலைவர்கள் ராஜேந்திர சாபூ, கல்யாண் பானர்ஜி, K R ரவீந்திரன், மார்க் மலோனி மற்றும் ரோட்டரி இன்டர்நேஷனில் முக்கிய தலைவர்களான பொதுச் செயலர் ஜான் ஹ்யூகோ, TRF அறங்காவலர்கள் குலாம் வாஹன்வதி மற்றும் அஜீஸ் மேமன், PRIDs கமல் சங்வி, பரத் பாண்ட்யா மற்றும் முன்னாள் இயக்குநர்கள் ஆகியோரும் சேகர் மேத்தாவுக்கு பாராட்டுக்களையும்



வாழ்த்துக்களையும் தெரிவித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

ரோட்டரி இன்டர்நேஷனல் தலைமைப் பதவியில் இருக்கும் பலரும் மகளிர்க்கு அதிகாரம் அளிப்பதில் கவனம் செலுத்தப்படும் என்று பிரகடனப்படுத்தியுள்ளதை வரவேற்றனர். மேலும் இந்த குறிக்கோளை எட்டுவதில் மேத்தாவுடன் இணைந்து செயலாற்ற ஆர்வமாக இருப்பதாகக் குறிப்பிட்டனர். ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் சேகர் மேத்தா உரையாற்றுகையில், 'ரோட்டரியில் நடைமுறை மாற்றம் வானவில் போல இருப்பதாக கூறி வியப்பு தெரிவித்தார். வானவில்லின் ஏழு வண்ணங்கள் மட்டுமல்ல, அவை ஒவ்வொன்றும் பின்னிப் பிணைந்திருக்கிறது. ஒரு நாளில் அந்தி மாலை, இரவு மற்றும் விடியலைக் குறிப்பதுபோல் ரோட்டரி என்னும் சக்கரம் ஆண்டுதோறும் சுழன்று கொண்டே இருக்கிறது' என்று குறிப்பிட்டார்.

பதவி விலகிச் செல்லும் தலைவர் ஹோல்கர் நாக் மற்றும் அவரது மனைவி இருவரும் பலத்த கைத்தட்டலுக்கு உரியவர்கள். ஏனெனில் ஹோல்கர் நாக்கைப் போல வேறு எந்த தலைவரும் கடுமையான காலங்களை சந்தித்ததில்லை.



அவர் எந்த ஒரு விஷயத்திலும் ஆழ்ந்த கவனம் செலுத்துவார் அதே நேரத்தில், எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பதையும் உறுதிசெய்கிறார். அதனால்தான் அவரை சக ரோட்டேரியன்கள் விரும்புகிறார்கள்.

**ராஷி மேத்தா**

இருப்பினும் அவர் ஒருமுறைகூட தளர்ந்துபோகவில்லை. அவர் எப்போதும் சிரித்த முகத்துடனும், நேர்மறையான எண்ணங்களுடனும் செயல்பட்டு வந்தார். பாதகமான சூழ்நிலையிலும் ரோட்டேரியன்கள் அவரைப் போல் செயல்பட வேண்டும் என்றார் மேத்தா.

RI நிர்வாகக்குழுவிலிருந்து வெளியேறும் இயக்குநர்களில் குறிப்பாக டாக்டர் பரத் பாண்ட்யா மற்றும் கமல் சிங்வி இருவரும் சிறப்பாகச் செயல்பட்டதாக் கூறி மேத்தா பாராட்டினார். அதேபோல புதிய இயக்குநர்களையும் அவர் வரவேற்றார். எனக்குப் பிறகு ஜென்னிஃபர் ஜோன்ஸ் தலைவராகப் பணியாற்ற இருப்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அவருடன் பொதுவான எண்ணங்களையும், குறிக்கோளையும் பகிர்ந்து கொண்டுள்ளதாகவும் மேத்தா தெரிவித்தார்.

தம்மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளதற்காக ரோட்டேரியன் களுக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார். கமல் நடந்திய இந்த விழா என்னை நெகிழவைத்தது என்றாலும் எனக்கு சங்கடத்தையும் ஏற்படுத்தி விட்டது. இந்த பாராட்டுக்களுக்கு நான் தகுதியானவனா என்று என்னை நானே கேட்டுக் கொள்கிறேன். நான் கனவுகளை பெரிதாக்கி இன்னும் உறுதியுடன் செயல்பட வேண்டியிருக்கும் என்றார்.

தனது பெற்றோர்களுக்கு நன்றி தெரிவித்த மேத்தா, மகன் RI தலைவரான செய்தியைக் கேட்டதாகவும் ஆனால், அந்த பதவியில் இருப்பதை பார்க்க முடியவில்லை என்றும் கூறினார்.

# அவர் எப்போது கனவு காண்கிறார்?



RI இயக்குனர்
மகேஷ் கோட்பாகி

*RI இயக்குநர்களான A S வெங்கடேஷ் மற்றும் மகேஷ் கோட்பாகி, மேத்தாவின் ரோட்டரி நிர்வாகக்குழுவில் பணியாற்றுபவர்கள். தங்களது வேடிக்கையான பேச்சுகள் மூலம் பங்கேற்பாளர்களை மகிழ்வித்தனர்.*

**கோட்பாகி:** *ஏய் வெங்கி, இப்போது சேகர் RI தலைவராகிவிட்டார். அவரை நாம் எப்படி அழைப்பது சார், சேகர்டா, பாஸ் அல்லது உலகத் தலைவர்?*

**வெங்கடேஷ்:** *நீங்கள் அவரை அழைக்க வேண்டாம். அவர் உங்களை அழைப்பார். குறிப்பாக இரவிலும் அழைக்கலாம். பிறகு அவர்கள் மேத்தா இரவில் சாதாரணமாக அழைக்கும் குறிப்புகளை பரிமாறிக் கொண்டனர். இது உண்மையில் இரவு அல்ல காலை என்று சொன்ன கோட்பாகி, அதிகாலை 2 மணிக்கு அழைத்த பிறகு, மீண்டும் காலை 7 மணிக்கு அழைப்பார். எதற்காக என்றால், அவருடைய முந்தைய அழைப்பை பின்தொடர்ந்தோமா என்று கேட்பதற்கு.*

*பல ஆண்டுகளாக மேத்தா இரவு நேரத்தில் அழைப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தார் என்றார் வெங்கடேஷ். அவர் ஈவன்ஸ்டன் நேரத்தில் வேலை செய்கிறாரோ என்றுகூட நான் நினைப்பதுண்டு. ஒருநாள் அவர் இந்திய நேரப்படி காலை 9 மணிக்கு அழைத்தார். ராஷியிடம் அவர், தூங்குகிறாரா என்று கேட்க நினைத்தேன்.*

உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த எனது தாய்க்கு நன்றி கூறுகிறேன். நான் அவரைப் பார்த்த போதிலும் அவர் என்னை பார்க்க முடியவில்லை என்றார். (மேத்தாவின் தாய் அடுத்த நாளே காலமானார்.)

எனது ரோட்டரி பயணத்திற்கு ராஷி மற்றும் குழந்தைகள் தவிர முன்னாள் தலைவர்கள் ராஜேந்திர சாபூ, கல்யாண் பானர்ஜி மற்றும் K R ரவீந்திரன் உள்ளிட்டோரிடமிருந்து பல விஷயங்களை கற்றுக்கொண்டுள்ளேன். எனக்கு புதிய பதவியை கொடுத்து நான் இன்னும் சிறப்பாகச் செயல்பட வாய்ப்புக் கொடுத்த அனைவருக்கும் நன்றி. எனது குடும்பமாக கருதும் கொல்கத்தா மாநகர ரோட்டரி சங்க உறுப்பினர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நான் இன்று உங்கள் முன் உயர்நிலையில் நிற்கிறேன் என்றால் அதற்கு எனது சங்கம் கொடுத்த வலுவான அடித்தளம்தான் காரணம். எனது கனவுகள் அனைத்தையும் நான் அங்கு முயற்சிக்கலாம். நான் தோல்வி அடைந்தாலும் அவர்கள் எனக்கு ஆதரவாக இருப்பார்கள். நான் வெற்றிபெற்றால் என்னை மேலும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வார்கள்.

உலகெங்கிலும் உள்ள ரோட்டேரியன்களுக்கும் எனது நன்றி. நான் உங்களுடன் சேர்ந்து பணியாற்றுவதால்தான் எனக்கு உந்துதலும், கனவுகளும் ஏற்படுகின்றன. என் மீது நம்பிக்கை வைத்துள்ள உங்கள் நட்புறவுக்கு நன்றி. என்னை கனவுகாண வைத்ததற்கும் என்னுடைய கனவு

> நான் இன்று உங்கள் முன் உயர்நிலையில் நிற்கிறேன் என்றால் அதற்கு எனது சங்கம் கொடுத்த வலுவான அடித்தளம்தான் காரணம்.
>
> சேகர் மேத்தா
> RI தலைவர்

*கோட்பாகி, மேத்தா பற்றிய ரகசியத்தை பகிர்ந்துகொண்டார். நாற்காலியில் அமர்ந்து சிறிது கண்ணயரும்போதோ அல்லது காரில் செல்லும்போது மேத்தா தூக்கத்தை பறித்துவிடுவார் என்று குறிப்பிட்டார். பின்னர் அவருக்கு பிடித்தமான "டயட் கோக்" மற்றும் மசால் தோசை பற்றிய விவாதத்துக்குச் சென்றுவிட்டார்.*

*அதற்கு வெங்கடேஷ், இந்த மனிதர் டயட் கோக் மற்றும் மசால் தோசை காம்பினேஷன் பற்றி யோசித்திருக்கிறார். அதன் தயாரிப்பாளர்களுக்கு கூட தோன்றாத யோசனை இவருக்குத் தோன்றியுள்ளது. மசால் தோசைக்கு பெயர் பெற்ற இடம் சென்னை தான். ஆனால், சேகர் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார். சென்னையைவிட சிறந்த வகையில் மசால்தோசை கொல்கத்தாவில் கிடைக்கும் என்பார். இப்போது அவர்கள் தலைவரின் காம்போவான மசால் தோசை வித் கோக் அறிமுகப்படுத்தி யுள்ளனர்.*



RI இயக்குனர்
A S வெங்கடேஷ்

*சேகர் மேத்தாவிடம் உள்ள சிறப்பு குணம் என்னவென்றால், அவரை யாராலும் எப்போது வேண்டுமானாலும் அணுக முடியும் என்பதுதான் என்றார் கோட்பாகி. உலகம் முழுவதிலும் அவருக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். ஒரு தலைவருக்கு இருக்க வேண்டிய குணம் அவரிடம் இருக்கிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.*

*நான் அவருடன் பல ஆண்டுகள் சேர்ந்து பணியாற்றி இருக்கிறேன். பல நிகழ்ச்சிகளில் பங்கேற்று இருக்கிறேன். சரியான வேலைக்கு சரியான நபரைத் தேர்ந்தெடுப்பார். அதுவரை ஓயமாட்டார் என்றார் வெங்கடேஷ்.*

*எல்லோருமே தங்களுக்கு ஒரு பெரிய கனவு இருப்பதாகக் கூறுவார்கள். ஆனால், தூங்காத ஒருவருக்கு கனவு எப்படி வரும்? என்று நான் வியப்பதுண்டு. அது பற்றி நான் சேகரிடம் கேட்டபோது, "நீங்கள் தூங்கும்போது காண்பது , கனவு அல்ல, உண்மையில் கனவு என்பது உங்களைத் தூங்கவிடாது" என்பார் என்று கூறி தனது பேச்சை முடித்தார் வெங்கடேஷ்.*

தோல்வியடைந்தபோது கூட நின்றவர்களுக்கும் நன்றி. 'வளர்வோம், சேவை செய்வோம்' என்பதைவிட மிகப்பெரிய கனவு இருக்க முடியாது.

ரோட்டரியின் பலத்தை, அதாவது உறுப்பினர்கள் எண்ணிக்கையை 13 லட்சமாக உயர்த்த வேண்டும் என்பதே எனது நீண்டநாள் கனவாகும். போலியோவை ஒழிக்க வேண்டும் என்பதுபோல ஒரு விநோதமான கனவு. அந்தக் கனவு நிறைவேற 35 ஆண்டுகள் ஆனது. ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் நாம் கண்ட இரண்டு போலியோ சம்பவங்கள்தான் உலகில் கடைசியாக இருக்கக்கூடும். யாருக்குத் தெரியும்?

நாம் அதிகம் வளர்ந்தால் மட்டுமே அதிகம் சேவை செய்ய முடியும் என்று கூறிய மேத்தா, இதற்கு தன்னையே உதாரணமாகக் குறிப்பிட்டார். நான் நட்புக்காகவும், கூட்டுறவுக்காகவும் மட்டுமே ரோட்டரியில் சேர்ந்தேன். ஆனால், என்னை சங்கம் ஒரு திட்டத்துக்காக எனது வீட்டிலிருந்து 50 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு கிராமத்துக்கு அழைத்துச் சென்றது. அங்கு கிராம மக்கள் குடிசையில் வாழ்ந்ததை பார்த்த போதுதான் ரோட்டரியின் சேவை நோக்கம் எனக்கு புரிந்தது. சொகுசு வாழ்க்கையில் இருந்த எனக்கு அப்போதுதான் கிராம மக்களின் வாழ்க்கை நிலை புரிந்தது. வீடுகளில் கழிப்பறை இல்லாமல், நீர்நிலைகளில் எருமைமாடுகள் குளிக்கும் தண்ணீரை அவர்கள் குடிநீராய் பயன்படுத்தியது எனது மனதை உருக்கியது. அன்று முதல் எனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு ரோட்டரி சேவை மூலம் மற்றவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறேன் என்றார். ஒவ்வொருவரும் ஒரு நபரை ரோட்டரிக்கு கொண்டு வந்தால் சமூகத்தில் உள்ள மக்களின் வாழ்க்கையை மாற்றியமைப்பதில் பங்களிக்க முடியும் என்றார் சேகர் மேத்தா.■

# கோவிடை ரோட்டரி வெல்லும்: புரூஸ் ஐல்வார்ட்

ஜெய்ஸ்ரீ

இந்த நோய்ப்பரவலின் பாதையை மாற்றுவதில் நீங்கள் ஒரு முக்கியப் பங்கை ஆற்றவேண்டும். பல பத்தாண்டுகளாக இளம்பிள்ளைவாதத்தை எதிர்த்துச் சிறப்பாகப் போரிட்டவர் நீங்கள். அந்த அறிவும் அனுபவமும் உங்களிடம் உள்ளது. கோவிட்பற்றிய பல விஷயங்கள் எங்களுக்கு இன்னும் தெரியாது. ஆனால், இந்த வைரஸை ரோட்டரியால் வெல்ல இயலும் என்பது எங்களுக்குத் தெரியும் என்றார் WHO பொது இயக்குநருக்கான மூத்த அறிவுரையாளர் Dr புரூஸ் ஐல்வார்ட். மெய்நிகர் ரோட்டரி மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியின்போது, உலகெங்கிலுமிருந்து அதில் கலந்து கொண்ட பங்கேற்பாளர்களிடம் அவர் இவ்வாறு கூறினார்.

கோவிட் தடுப்பு மருந்துகள் நாடுகளிடையே சமமான முறையில் வழங்கப்படவேண்டும் என்பதற்காகக் குரல் எழுப்பும்படி அவர் ரோட்டரியன்களை ஊக்குவித்தார். கால் நூற்றாண்டுக்கு முன்னால், இதேபோன்ற ஒரு சமநிலையின்மையை நீங்கள் கண்டீர்கள், உலகில் எங்கும் எந்தக் குழந்தையும் இளம்பிள்ளைவாதத்தால் முடங்கிப்போகக்கூடாது என்று சொன்னீர்கள். வரலாற்றின் மிகப் பெரிய, பன்னாட்டு அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட இந்த முயற்சிக்கு நிதி வழங்கும்படி உலகத் தலைவர்களை வலியுறுத்தி வென்றீர்கள். இப்போது, உங்கள் சேவை உலகத்துக்குத் தேவை. கோவிட் தடுப்பு மருந்துகள், அவற்றைத் தயாரிக்கும் முறை ஆகியவை சமமான முறையில் பகிர்ந்து கொள்ளப்படவேண்டும் என்று நீங்கள் குரல் எழுப்பவேண்டும். பணக்கார உலகத்தில் கோவிட் 19 தடுப்பு மருந்துகள் நிரம்பி வழிகின்றன; ஆனால், உலகின் ஏழை நாடுகளில் நலப் பணியாளர்கள் இன்னும் நோய்வாய்ப்படுகிறார்கள், உடல் நலம் சரியில்லாத, முதிய மக்கள் இன்னும் இறந்துகொண்டிருக்கிறார்கள். இதை ஏற்க இயலாது. இதுதான் நாம் வெல்லவேண்டிய சவால். சமூகநீதி என்பதன் உண்மைப் பொருளை உலகுக்குக் கற்றுக் கொடுங்கள், எங்கும் எல்லாரும் தடுப்பு மருந்துகள், பரிசோதனைகள், சிகிச்சைகளைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக உலகுக்குச் சவால் விடுங்கள்'' என்றார் அவர்.



*WHO பொது இயக்குநருக்கான மூத்த அறிவுரையாளர் Dr புரூஸ் ஐல்வார்ட்*


கோவிட்–19 தடுப்பு மருந்துகளின் பன்னாட்டு அணுகல் (சுருக்கமாக, COVAX) என்பது, கோவிட் தடுப்பு மருந்துகளைச் சமமான முறையில் கிடைக்கச்செய்யும் நோக்கத்துடன் செயல்படுகிற ஓர் உலகளாவிய முன்னெடுப்பு. கோவாக்ஸ், ஏழை நாடுகளுக்குக் கோவிட் பரிசோதனைகள், சிகிச்சைகள், தடுப்பு மருந்துகள் சமமான முறையில் கிடைப்பதை உறுதிசெய்வதற்காகப் பன்னாட்டு வளங்களை ஒருங்கிணைக்கிறது.

நம்முடைய சவாலை விளக்கும் இரண்டு எண்கள்: உலகெங்கும் 1.5 பில்லியன் கோவிட் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன, ஆனால், அதில் 5 மில்லியன் தான் (0.5%ஐவிடக் குறைவு) உலகின் ஏழை நாடுகளுக்குச் சென்றுள்ளன. இது சரியில்லை; இது சமநிலை இல்லை என்றார் ஐல்வார்ட்.

Gavi, the Vaccine Alliance அமைப்பின் CEOஆன டாக்டர் சேத் பெர்க்லி பேசுகையில், பணம் உள்ளவர்கள்மட்டுமின்றி, உலகில் அனைவரும் பாதுகாக்கப்படும்வரை இந்த வைரஸ் தொடர்ந்து பரவிக்கொண்டுதான் இருக்கும் என்றார். இதற்குமுன் எப்போதும் இல்லாத பன்னாட்டு ஒற்றுமையைக் காண்பிக்கும்வகையில், உலக

மக்கள் தொகையில் 9%ஐப் பிரதிநிதித்துவப்படுத்தும் 192 அரசுகள், பகுதிகள் கோவாக்ஸ் வசதியை ஆதரிப்பதற்காக ஒன்றுதிரண்டுள்ளன. இப்போது, 14 தடுப்பு மருந்துகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன, 1.4 பில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் தடுப்பு மருந்து பெற்றுள்ளார்கள், இதன் பொருள், உலக வரலாற்றின் மிகப் பெரிய மற்றும் மிகச் சிக்கலான தடுப்பு மருந்து முன்னேற்றம் இப்போது நன்கு செயல்பட்டுவருகிறது.

அடுத்த ஆண்டின் தொடக்கத்தில், குறைந்த வருவாய் கொண்ட 92 நாடுகளில் வாழும் மக்களுக்குக் குறைந்தது 1.8 பில்லியன் கோவிட் தடுப்பு மருந்துகளைக் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற இலக்குடன் கோவாக்ஸ் செயல்படுகிறது. இந்த மருந்துகள் முதலில் கிடைக்கத் தொடங்கியபோது, உயர் வருவாய் நாடு ஒன்றில் முதல் தடுப்பு மருந்து வழங்கப்பட்டு வெறும் 39 நாட்களுக்குள் இந்தியாவில் முதல் தடுப்பு மருந்தை நம்மால் வழங்க இயன்றது. அப்போதிலிருந்து நாம் 124 நாடுகளில் உள்ள மக்களுக்குக் கிட்டத்தட்ட 70 மில்லியன் தடுப்பு மருந்துகளை வழங்கியுள்ளோம்''



Dr *சேத் பெர்க்லி,* CEO,
Gavi, the Vaccine Alliance

என்றார் டாக்டர் பெர்க்லி. ஆனால், இது போதாது. சமநிலையின்மை இன்னும் தொடர்கிறது. உயர் வருவாய் நாடுகள் தங்களுடைய மக்கள் தொகையில் சுமார் 30% பேருக்குத் தடுப்பு மருந்து வழங்கிவிட்டார்கள், குறைந்த வருவாய் உள்ள நாடுகளில் இது 1%ஐவிடக் குறைவு.

கோவிட் நெருக்கடியால் வழக்கமான தடுப்பு மருந்து வழங்கல் திட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன, இளம்பிள்ளைவாதத் தடுப்புப் பரப்புரைகள் தாற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன என்றார் அவர். குறைந்தது 80 மில்லியன் குழந்தைகள் முக்கியமான தடுப்பு மருந்துகளைப் பெறாததால், அவர்களுக்குத் தட்டம்மை, மஞ்சள் காய்ச்சல் அல்லது இளம்பிள்ளைவாதம் போன்ற தடுக்கக் கூடிய பிற நோய்களின் ஆபத்து உள்ளது. இவை அனைத்தும், நல அமைப்பில் கோவிட் கொண்டிருந்த தாக்கத்துடன் சேர்ந்து, பல ஆண்டுகளாக நிகழ்ந்த மிகச் சிறந்த முன்னேற்றத்தைப் பின்னடையச் செய்துவிடும், நாடுகளைச் சில பத்தாண்டுகள் பின்னுக்குத் தள்ளிவிடும் என்ற அச்சுறுத்தல் உள்ளது. கோவிட் உண்டாக்கிய தொந்தரவுகளிலிருந்து மீளவேண்டுமென்றால், நோயெதிர்ப் பாற்றலை வழங்குவதன் மூலம் சிரமப்பட்டுப் பெற்ற லாபங்களைப் பராமரிப்பது முக்கியம். இளம்பிள்ளை வாதத்தை ஒழிப்பதற்கு இது ஒரு முக்கியமான கணம், என்றார் அவர். ■

# மகாராஷ்டிரத்தில் நக்சல் பாதிப்புள்ள கிராம மாணவர்களுக்கு மிதிவண்டிகள்

ரோட்டரி செய்திக்குழு

மகாராஷ்டிரத்தில் சந்திராபூர் மாவட்டத்திலும் அதைச் சுற்றியும் நக்சல் வன்முறையால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக் கிடையில் நல்லுறவை முன்னிறுத்தும் நோக்கத்துடன், யார்காட் கிராமத்திலுள்ள காவல்துறை உதவி மையத்துடன் இணைந்து, இந்தக் கிராமங்களைச் சேர்ந்த, நலிந்த பின்னணியிலிருந்து வரும் 10 மாணவர்களுக்கு மிதி வண்டிகளை நன்கொடையாக அளித்தது RC சந்திராபூர், RID 3030. மிதிவண்டி வழங்கும் விழாவைத் தொடர்ந்து கிராமவாசிகள் சுவையான மதிய உணவுடன் ரோட்டரியன்கள், CRPF குழுவினருடைய இந்த முயற்சியை வரவேற்றார்கள். ■



# 2021–22 RI Board of Directors



## Shekhar Mehta

Rotary Club of Calcutta-Mahanagar, West Bengal
India

*President*



**Vicki Puliz**


Rotary Club of Sparks
Nevada, USA



**Jennifer E Jones**

Rotary Club of Windsor-Roseland
Ontario, Canada

*President-elect*




**Urs Klemm**

Rotary Club of Aarau
Switzerland



**Nicki Scott**

Rotary Club of The North Cotswolds
Gloucestershire, England



**Valarie K Wafer**

Rotary Club of Collingwood-South Georgian Bay
Ontario, Canada

*Vice President*



**Mahesh Kotbagi**

Rotary Club of Pune Sports City
Maharashtra, India



**Julio César A Silva-Santisteban**

Rotary Club of El Rímac
Lima, Peru



**Virpi Honkala**

Rotary Club of Raahe
Finland

*Treasurer*



**Aikaterini Kotsali-Papadimitriou**

Rotary Club of Pendeli
Greece



**Katsuhiko Tatsuno**

Rotary Club of Tokyo-West, Tokyo, Japan



**Jessie Harman**

Rotary Club of Wendouree Breakfast
Victoria, Australia



**Peter R Kyle**

Rotary Club of Capitol Hill (Washington, DC)
District of Columbia
USA



**Elizabeth Usovicz**

Rotary Club of Kansas City-Plaza
Missouri, USA



**Susan C Howe**

Rotary Club of Space Center (Houston)
Texas, USA



**Roger Lhors**

Rotary Club of Pont-Audemer
Eure, France



**A S Venkatesh**

Rotary Club of Chennai Mambalam
Tamil Nadu, India



**Won-Pyo Kim**

Rotary Club of Gyeongju
South Gyeongsangbug
Korea



**Chi-Tien Liu**

Rotary Club of Yangmei
Taiwan




**John Hewko**

Rotary Club of Kyiv
Ukraine

*General Secretary and CEO*


# 2021–22 Rotary Foundation Trustees

**John F Germ**

Rotary Club of
Chattanooga
Tennessee, USA

*Chair*



**Ian HS Riseley**

Rotary Club of
Sandringham
Victoria, Australia

*Chair-elect*



**Hsiu-Ming Lin**

Rotary Club of Taipei
Tungteh
Taiwan



**Akira Miki**

Rotary Club of Himeji
Japan



**Sangkoo Yun**


Rotary Club of Sae
Hanyang
Seoul, Korea

*Vice Chair*



**Larry A Lunsford**

Rotary Club of Kansas
City-Plaza
Missouri, USA



**Barry Rassin**

Rotary Club of
East Nassau
Bahamas



**Jorge Aufranc**

Rotary Club of
Guatemala Sur
Guatemala



**Mark Daniel Maloney**

Rotary Club of Decatur
Alabama, USA



**Hendreen Dean Rohrs**

Rotary Club of
Langley Central
British Columbia, Canada




**Marcelo Demétrio Haick**

Rotary Club of
Santos-Praia
São Paulo, Brazil



**Geeta Manek**

Rotary Club of Muthaiga
Kenya




**Gulam A Vahanvaty**

Rotary Club of Bombay
Maharashtra, India




**Per Høyen**

Rotary Club of Aarup
Denmark



**Aziz Memon**

Rotary Club of Karachi
Pakistan



**John Hewko**

Rotary Club of Kyiv
Ukraine

*General Secretary and CEO*

# ஒடிஸாவில் கண் மருத்துவமனை உருவாக வழிவகுத்த திருமண வரவேற்பு

ரஷீதா பகத்

இவை அனைத்தும் கடந்த 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் தேதி ஒடிஸாவில் உள்ள ஒரு கிராமத்தில் இளம் புகைப்பட நிருபர் சத்யபதியின் திருமணத்துடன் தொடங்கியது. நாங்கள் அன்று பிற்பகல் 3 மணி அளவில்தான் பெங்களூரிலிருந்து புவனேசுவர் திரும்பினோம். நாங்கள் மிகவும் சோர்வாக இருந்தோம். ஆனால், சுப்ரதோ (பாக்சி) மணமகன் சத்யா வுக்கு வாக்கு கொடுத்திருந்ததால் திருமண வரவேற்பில் கலந் கொள்ள வேண்டும் என்று நான் வற்புறுத்தினேன். அவர், புவனேஸ்வரிலிருந்து இரண்டரை மணி நேர பயணத்தில் உள்ள குவான்ர்பூர் கிராமத்தைச் சேர்ந்தவர் என்று "மோ ஸ்கூல் அபியான் பரிச்சாலனா சங்காதன்" என்ற அமைப்பின் தலைவர் சுஷ்மிதா பாக்சி நினைவுகூர்ந்தார். "மைண்ட் ட்ரீ" நிறுவனர்களில் ஒருவரான சுப்ரதோ பாக்சி, இப்போது ஒடிஸா அரசு சார்பில் இளைஞர்களுக்கு திறன்வளர்ப்பு பயிற்சி அளித்து வருகிறார்.

குவான்ர்பூர் கிராமம் ஜஜ்பூர் மாவட்டத்தில் உள்ளது. எங்களின் மூதாதையர் வாழ்ந்த கிராமம் தலிஹாவும் அங்குதான் உள்ளது. சத்யாவின் கிராமத்திலிருந்து புறப்பட்ட 25 நிமிடத்தில் நாங்கள் ராம்பாக் என்ற சிறிய நகரத்தை கடந்து சென்றோம். அப்போது சுப்ரதோவிடம், எங்கள் கிராமம்கூட இந்த இடத்தின் அருகில் இருக்கிறது. எங்கள் குடும்பத்தினர் யாரும் அங்கு இல்லை. ஆனால், எனது தந்தையின் உறவினர் இன்னும் அங்கு வசித்து வருகிறார் என்று சுஷ்மிதா கூறினார்.

ஒரு காலத்தில் சுஷ்மிதாவின் தாத்தா ஜமீன்தாராக வாழ்ந்தார். கிராமத்தில் பெரும்பாலான நிலங்கள் அவருக்குச் சொந்தமாக இருந்தது. ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்ட போது அவர், தனக்குச் சொந்தமான நிலங்களை கொஞ்சம் கொஞ்சமாக விற்றுவிட்டார். என் தந்தையும் உடன் பிறந்தவர்களும் புவனேஸ்வருக்கு குடிபுகுந்துவிட்டனர். என் தந்தையும், அவரது சகோதரிகளும் தங்களுடைய நிலத்தை விற்றுவிட்டனர். ஆனால், எனது மாமா மட்டும் கொஞ்சம் நிலம் வைத்திருந்தார்.

திருமணத்தில் கலந்துகொண்டு திரும்பியபோது, எனது கிராமமான தலிஹாவை பார்ப்பதற்காக ராம்பாகில் காரை நிறுத்தினர். நான் கடைசியாக 1972ம் ஆண்டு எனது தாத்தா இறந்தபோது இந்த கிராமத்துக்கு வந்தேன். பலரிடம் விசாரித்த பின்பு எங்கள் குடும்பத்துக்கு சொந்தமான நிலத்தை அடைந்தோம். அது சுஷ்மிதாவின் மாமா துர்கா சரண் பண்டாவுக்கு சொந்தமானது. நாங்கள் அங்கு 15 நிமிடங்கள் இருந்துவிட்டு புறப்பட்டுவிட்டோம். அப்போது சுப்ரதோ எங்களிடம், அந்த கிராமத்துக்கு ஒரு மருத்துவமனை வேண்டும் என்றார். பார்வையிழப்பை தடுக்கும் பணியில் நாங்கள் ஈடுபட்டிருந்ததால், அங்கு ஒரு கண் மருத்துவமனை அமைக்கலாம் என்று நான் கூறினேன்.

பாண்டாவிடமிருந்து மருத்துவ மனைக்காக நிலம் வாங்க முற்பட்ட போது, அவர் நிலத்தை விற்க மாட்டேன், மருத்துவமனைக்காக நிலத்தை நன்கொடையாக அளிக்க விரும்புகிறேன் என்று தெரிவித்தார்.

இங்குதான் ரோட்டரி பற்றிய பேச்சு வருகிறது. சுஷ்மிதா கட்ட விரும்பும் மருத்துவமனையை நடத்த ஒரு அமைப்பு தேவைப்பட்டது. அப்பகுதியில் உள்ள நான்கு மாவட்டங்களில் கண் மருத்துவ வசதி இல்லாததால் கட்டாக்கில் உள்ள JPM ரோட்டரி கண் மருத்துவக்





*திருமண நிகழ்ச்சியில் சுப்ரதோ மற்றும் சுஷ்மிதா தம்பதியினர்.*

கழகம், சிறிய கண் மருத்துவமனை அமைப்பதற்கான இடத்தை தேடிவந்தது.

2018ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ரோட்டரி கண் மருத்துவக் கழகத்துடன் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. கண் மருத்துவ மனை திட்டத்துக்காக சுஷ்மிதா மற்றும் சுப்ரதோ பாக்சி இருவரும் ரூ.3 கோடி நிதியுதவி அளித்தனர். JPM ரோட்டரி அதிகண்டா பாண்டா நினைவு கண் மருத்துவமனை 2021ம் ஆண்டு ஜூன் மாதம் திறக்கப்பட்டது.

கட்டாக் JPM ரோட்டரி சங்கம் மற்றும் கண் மருத்துவ ஆராய்ச்சி கழகம் 1992ம் ஆண்டு RID 3262க்கு உட்பட்ட கட்டாக் ரோட்டரி சங்கத்தால் உருவாக்கப்பட்டது.

கட்டாக் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவரும், JPM ரோட்டரி கண் மருத்துவக் கழகத்தின் தலைவருமான சுஷாந்த் மொஹந்தி, இந்த மருத்துவக் கழகம் Sight Savers International (முன்னர் இது இங்கிலாந்தின் Royal Society for the Blind என்று அழைக்கப் பட்டது.) என்ற அமைப்புடன் இணைந்து கட்டப்பட்டது.

கிழக்கு இந்தியாவின் முன்னணி மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு சிறப்பு கண் மருத்துவர்கள் மூலம், விழித்திரை, விழிவெண்படலம் பாதிப்பு, பார்வையிழப்பை ஏற்படுத்தும் க்ளூகோமா உள்ளிட்ட பல்வேறு கண் நோய்களுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றன என்றார் மொஹந்தி. குழந்தைகளுக்கு ஏற்படும் விழித்திரை நரம்பு மண்டலம் பாதிப்பு நோய்க்கு இங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த மருத்துவமனையில் ஆண்டுதோறும் 65,000 பேர் வெளிப்புற நோயாளிகளாகச் சிகிச்சை பெறுகிறார்கள். இது தவிர மருத்துவமனை சார்பில் கிராமப்புற பகுதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. அப்போது அறுவைச்சிகிச்சை தேவைப் படுவோர் பட்டியலிடப்பட்டு இங்கு அழைத்துவரப்பட்டு இலவசமாக அவர்களுக்கு அறுவைச்சிகிச்சை நடத்தப்படுகிறது.

2020 ஆண்டில் 292 கண்புரை நோய் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டு, 7,182 பேருக்கு கண்புரை நோய் அறுவைச் சிகிச்சையும் இலவசமாக செய்யப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த சிறிய கண் மருத்துவமனை பத்ரக், கேந்திரபாதா மற்றும் ஜஜ்பூர் மாவட்டத்தில் உள்ள கிராமப்புற மக்கள் சமூகத்தினரின் தேவைகளை பூர்த்தி செய்யும் என்றார் மொஹந்தி. ■



*தலிஹா கிராமத்தில் JPM மருத்துவமனை துவக்க விழா.*

Rotary PEOPLE OF ACTION

# ஒடிஷா பெண்கள் ஹாக்கிக் குழுவின் வெற்றிக் கதை

V முத்துகுமரன்

நான்கு ஆண்டுகளுக்குமுன், ஒடிஷா மாநிலத்திலிருக்கும் தொலைதூரக் கிராமங்களைச் சேர்ந்த 16 வயதுப் பெண்களான கம்லா சிங், மேரி கொன்டர்ல்னா இருவரும் தாங்கள் புபனேஸ்வரில் உள்ள மதிப்பு மிக்க நேவல் டாடா ஹாக்கி அகாடமியால் இயக்கப்படும் விளையாட்டு விடுதியில் பயிற்சி பெறுவோம் என்று கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்கள்.

இவர்கள் இருவரும் பிரமாதமாக விளையாடுகிறார்கள். எங்கள் அகாடமி நடத்தும் ஹாக்கிப் போட்டிகளில் நல்ல சாதனை புரிந்துள்ளார்கள். இவர்களுக்குத் தேசியப் பெண்கள் ஹாக்கி அணியில் இடம் கிடைக்கும் என நம்புகிறோம் என்கிறார் ரோட்டரி ஹாக்கி அகாடமி (RHA)யின் தலைமைப் பயிற்சியாளர், நிறுவனரான Rtn ஜதீந்தர் குமார் சர்மா.





*ரோட்டரி ஹாக்கி அகாடமி தலைவர் ஜதீந்தர் சர்மா, கம்லா சிங் மற்றும் மேரி கொன்டர்ல்னா ஆகியோருடன்.*



*பயிற்சியாளர் ஜதீந்தர் சர்மா தன் ஹாக்கி குழுவுடன்.*

முன்னாள் தேசிய ஹாக்கி வீரரான ஜதிந்தர் சர்மா, ஒடிஷா மாநிலத்தின் கிராமங்களைச் சேர்ந்த பெண்களுக்குக் கள ஹாக்கியில் பயிற்சி அளித்து அவர்களுடைய சாத்தியத்தை வெளிக்கொண்டுவர விரும்பினார். திறமையுள்ள இந்த ஏழைப் பெண்களை வறுமையின் பிடியிலிருந்து மீட்டு, முறையான பயிற்சி, ஊட்டச்சத்து மிக்க உணவு, நலமான வாழ்க்கை முறையை வழங்க நான் விரும்பினேன், அதற்காக, 2017ல் நான் RC சம்பல்பூர் சிட்டி தலைவராக இருந்தபோது RHAஐத் தொடங்கினேன் என்கிறார் இவர்.

எனினும், தான் தொடங்கியிருப்பது ஒரு கடினமான சவால் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. ஜம்மு மாவட்டத்தைச் சேர்ந்த இவர், சம்பல்பூர் மாவட்டத்திலுள்ள கெத்ராஜ்பூர் நகரத்தில் வசித்தார், 2016ல் தன்னுடைய பட்டயக் கணக் காளர் நண்பரான Rtn சந்திரசேகர் ஷா அவர்களுடைய உதவியுடன் ரோட்டரியில் சேர்ந்தார். 2019ல் சர்மா RC வீர்பூமி சம்பல்பூர், RID 3261க்கு நகர்ந்தார், அதன் சங்க ஆலோசகராக ஆனார். மெதுவாக, தன்னுடைய தனித்துவமான, கிராமப் பெண்களுக்கான ஹாக்கி அகாடமியின் நுணுக்கமான தகவல்களை அவர் திட்டமிடத் தொடங்கினார்.

விளையாட்டுச் செயல்பாட்டாளர், சம்பல்பூரில் உள்ள பம்ப்ரா தொகுதியைச் சேர்ந்த அம்லிகமன் மிஷன் உயர் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியரான ஃபாதர் ராஜேந்திர குஜுரஸ், முன்னாள் ராணுவ வீரர், உடற்கட்டு வல்லுனர், உடற்பயிற்சிக் கூடங்களை வைத்திருப்பவராகிய Rtn அனில் மிஷ்ரா மற்றும் நியூசிலாந்தைச் சேர்ந்த தம்பதியரான டேனியல் மற்றும் அனா வில்கின்சன் ஆகியோர் ஹாக்கி அகாதெமிக்கு உருவம் கொடுப்பதற்கு சர்மாவுடன் இணைந்தார்கள்.

தற்போது, கெத்ராஜ்பூர், குகுடா (சுந்தர்கர்) மற்றும் அம்லிகமன் ஆகிய மூன்று மையங்களில் நாங்கள் 200 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம், அவர்களுக்கு இலவசக் கருவிகள், விளையாட்டு ஆடைகள், காலணிகள், நன்கு பராமரிக்கப்பட்ட விளையாட்டு மைதானங்களை வழங்குகிறோம்'' என்று விளக்குகிறார் சர்மா. உடற்பயிற்சி மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றை மிஷ்ரா கவனித்துக் கொள்கிறார், இந்தப் பெண்களுடைய தகவல் தொடர்புத் திறன்களை மேம்படுத்துவதற்கு டேனியல் உதவுகிறார்.

### மிக மோசமான நிலை

எந்தப் பணமோ வசதிகளோ இல்லாத இந்த ஒடிஷா மாநிலப் பெண்களிடம் உள்ளவையெல்லாம், தேசிய ஹாக்கிக் களத்தில் பெரிய அளவில் முன்னேறுவோம் என்ற கனவுகளும், மன உறுதியும்தான்.

இங்கு பயிற்சி பெறுவோர் எந்தக் கட்டணமும் செலுத்தவேண்டியதில்லை. நாங்கள் அவர்களுக்குத் தீவிரப் பயிற்சி அளிக்கிறோம், உடற்பயிற்சி ஒழுங்கைக் கொண்டுவருகிறோம், ஊட்டச்சத்துமிக்க உணவு, வசிப்பிடத்தை அளிக்கிறோம். ஒவ்வோராண்டும், மதிப்பு மிக்க ஹாக்கி அகாடமிகளில் மாநில அளவிலான பயிற்சி பெறுவோரைத் தேர்ந்தெடுப்பதற்காக விளை யாட்டு விடுதிகளில் நடைபெறும்

சோதனை ஆட்டங்களுக்கு நாங்கள் அவர்களை அழைத்துச் செல்கிறோம். இப்போது, RHAஐச் சேர்ந்த 25 பெண்கள் நேவல் டாடா ஹாக்கி அகாடமி, SAI ஹாக்கி அகாடமி, சுந்தர்கர் மற்றும் பன்போஷ் அகாதெமி, ரூர்கேலா-வில் பயிற்சி பெறுகிறார்கள்.

RHAன் இன்னொரு சிறப்பம்சம், ஒவ்வோராண்டும் அது ரோட்டரி பெண்கள் கிராமப்புற ஹாக்கிப் போட்டியை நடத்துகிறது, ஒடிஷா மாநிலம் முழுவதிலுமிருந்து 300க்கும் மேற்பட்ட பெண்களைக் கொண்ட 20க்கும் மேற்பட்ட அணிகள் இதில் பங்கேற்கிறார்கள். போட்டியிடும் அணிகளுக்குப் பயணக் கட்டணம், உணவு, தங்குமிடம், கருவிகள் என அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இந்தப் பெண்களில் சுமார் 25 பேரைத் தேர்ந்தெடுத்து, 15 நாள் சோதனை முகாமில் நாங்கள் அவர்களுக்குப் பயிற்சியளிக்கிறோம். இந்த முகாமிலிருந்து 16 பேர் RHAன் தேசிய அணிக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்'' என்று விவரிக்கிறார் சர்மா.

### திருப்புமுனை

தன்னுடைய பெண்களைப் புபனேஸ்வரில் உள்ள கலிங்கா மைதானத்தில் ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பையை (2018) பார்ப்பதற்கு அழைத்துச் சென்றார் ஜதீந்தர் சர்மா. இந்த இளம் பெண்களுடைய ஆர்வத்தைக் கண்டு மகிழ்ச்சியுடன் வியந்த ஒடிஷா மாநிலத்தைச் சேர்ந்த திரைக்கலைஞர்களான அவினாஷ் பிரதான் மற்றும் தெபசிஷ் மொஹாபாத்ரா ஆகியோர் இவர்களுடைய பின்னணியை அறிந்து நெகிழ்ந்தார்கள். ஹாக்கியில் பேரார்வம் கொண்ட கிராமப்புறப் பெண்களுக்கு ஒரு மிகப் பெரிய தளத்தைத் திறக்கும் RHA பற்றி ஓர் ஆவணப்படத்தை உருவாக்க விரும்பினார்கள்.

RHA இந்தப் பெண்களுடைய ஒட்டுமொத்தப் பயிற்சி



வகுப்புக்கும் நிதியளிக்கிறது, அவர்களுக்கு மிகச் சிறந்த வெளிப்படுத்தலை வழங்குகிறது, அதன்மூலம், தேசியப் பெண்கள் ஹாக்கி அணிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவர்களுக்கு உதவுகிறது என்று இந்த இயக்குநர்கள் தெரிந்து கொண்டார்கள்.

தி மவுன்டெய்ன் ஹாக்கி என்ற தலைப்பிலான அந்த 40 நிமிட ஆவணப்படம் 2019ல் எடுக்கப்பட்டது, இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் டிஸ்னி ஹாட்ஸ்டார் OTT தளத்தின் வழியாக வெளியிடப்பட்டது'' என்று பெருமையுடன் கூறுகிறார் சர்மா.

பெண்களுக்கான பொழுது போக்கு வாய்ப்புகளைப்பற்றி அவர் பேசுகையில், சம்பல்பூர் போட்டிகளின்போது நாங்கள் அவர்களைத் திரை அரங்குகளுக்கு அழைத்துச்செல்கிறோம், எங்கள் வளரும் வீராங்கனைகளுக்கு ஊக்கம், தூண்டுதலை அளிக்கிறோம். ஷாருக்கான் நடித்த *சக் தே! இந்தியா* (2007) அம்லிகமன் வளாகத்தில் இவர்களுக்குத் திரையிடப் பட்டது. இந்தப் படம், இந்தியப் பெண்கள் ஹாக்கி அணி 2002 காமன்வெல்த் விளையாட்டுகளை வென்ற கதையை அடிப்படையாகக் கொண்டது என்றார்.

முந்தைய நான்கு ஆண்டுகளில், ரோட்டரி அகாடமியில் உள்ள 200 பெண்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகத் தலைமைப் பயிற்சியாளர் ரூ.20 லட்சத்துக்கு மேல் தன்னுடைய சொந்தப் பணத்தைச் செலவழித் துள்ளார். உள்ளூர்ப் பள்ளிகளில் படிக்கும் தன்னுடைய இரண்டு மகள்களுக்காக அவருக்கு நிதி தேவைப்பட்டபோதும், அகாதெமியில் பயிற்சி பெறும் பெண்களுக்காகச் செலவு செய்வதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சிதான். இனி வரும் ஆண்டு களில் அவர்கள் பெரிய அளவில் முன்னேறுவார்கள்'' என்கிறார்.

நெஞ்சைத் தொடும் பணிவுடன் கம்லா கூறுகிறார், என் பயிற்சியாளர் இல்லாவிட்டால், நான் இல்லை. அவர் என் வாழ்க்கையை முற்றிலும் மாற்றிவிட்டார்.

மேரி இன்னொரு படி முன்னே செல்கிறார்: அவர்தான் எனக்குக் கடவுள். என் கடவுள் என்னைப் பாதுகாப்பார், என்னைக் கவனித்துக் கொள்வார் என்று எனக்குத் தெரியும்.

வாழ்த்துகள் ஜதீந்தர் சர்மா, உங்கள் படை வளரட்டும்!■

# கோவிட் உதவிச் சேவைக்காக DGகள், ரோட்டரியன்கள் கௌரவிக்கப்படுவர்

அசோக் மகாஜன்

இந்தியாவில் கோவிடுக்கு எதிரான தடுப்பு மருந்து வழங்கல் திட்டம் இதுவரை 38 கோடி எண்ணிக்கையை எட்டியுள்ளது. அதே நேரம், சில மாநிலங்களில்தான் 2 கோடிக்கு மேற்பட்ட மக்கள் தடுப்பு மருந்தைப் பெற்றுள்ளார்கள் என்பதால், இந்தியாவிலிருந்து கோவிடை நீக்க வேண்டுமென்றால், நாம் ஒவ்வொருவரும் இன்னும் நிறைய உழைக்கவேண்டும்.

2021–22ன் நிறைவில், தடுப்பு மருந்து வழங்கல் திட்டத்தை முன்னிறுத்தியதற்காகவும், கோவிட் தொடர்பான நல உள் கட்டமைப்பை அமைக்கச் சங்கங்களை ஊக்குவித்ததற்காகவும் மூன்று DGகளை ரோட்டரி இந்தியாவுக்கான கோவிட் செயல்படை பெருமைப்படுத்தும்.

DGக்கள் தங்கள் மாவட்டத்தில் கோவிடை அழிக்கும் திட்டங்களுக்கான மாவட்ட ஒருங்கிணைப்பாளராக ஒரு ரோட்டரியனை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். ஆண்டின் நிறைவில், இவர்களில் முன்மாதிரியாகப் பணியாற்றிய மூன்று மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பாராட்டப்படுவார்கள். மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுடைய பெயர்கள், மின்னஞ்சல் முகவரிகளை ஆளுநர்கள் விரைவாக எனக்கு அனுப்பவேண்டும்.

மாவட்டக் கோவிட் தடுப்பு மருந்து வழங்கலை முன்னிறுத்தும் குழு ஒன்றை அமையுங்கள், இவர்களில் மூன்று தலைவர்கள் அவர்களுடைய சாதனைகளின் அடிப்படையில் கௌரவிக்கப்படுவார்கள். குழுத் தலைவர்களுடைய பெயர்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளை ஆளுநர்கள் விரைவாக எனக்கு அனுப்பவேண்டும். அத்துடன், தடுப்பு மருந்து வழங்கலைப் பெரிய அளவில் முன்னிறுத்திய, கோவிட் தொடர்பான திட்டங்களை நன்கு செயல்படுத்திய மூன்று சங்கங்கள் ரோட்டரி ஆண்டின் நிறைவில் பாராட்டப்படும். இந்தச் செய்தியை உங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்துச் சங்கங்களுக்கும் பரப்புங்கள். கோவிட் இனிமேலும் பரவாமல் தடுக்கப்பாடுபடுவோம்.

*கட்டுரையாளர் ரோட்டரி இந்தியாவின் கோவிட் செயல் படைத்தலைவர், RI கோவிட் செயல்படை உறுப்பினர்.*

---

TRF உதவியுடன் நற்பணி

# மருத்துவமனையில் ரோட்டரியின் புதிய அறுவைச்சிகிச்சை அரங்கம்

ரோட்டரி செய்திக்குழு



ஹரியாணா மாநிலம், பல்வலில் உள்ள ஸ்ரீ சத்ய சாய் சஞ்சீவனி சர்வதேச குழந்தைகள் இதயநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் RID 3011-க்கு உட்பட்ட பரீதாபாத் ஆரவல்லி ரோட்டரி சங்கம், தீவிர சிகிச்சை பிரிவுடன் கூடிய அறுவைச் சிகிச்சை அரங்கை சர்வதேச மானிய உதவியுடன் ரூ.2.5 கோடியில் திறந்துள்ளது. அமெரிக்காவில் ரோட்டரி மாவட்டம் 6540க்கு உட்பட்ட ஃபோர்ட் வைன் ரோட்டரி சங்கம் கூட்டாளராகச் செயல்பட்டுள்ளது.

இதையும் சேர்த்து மருத்துவ மனையில் மொத்தம் மூன்று அறுவைச் சிகிச்சை அரங்குகள் உள்ளன. மேலும் செயற்கை சுவாசக்கருவி, அறுவைச்சிகிச்சை உபகரணங்கள் உள்ளிட்ட நவீன மருத்துவ கருவிகள், கண்காணிப்பு நிலையம், பராமரிப்பாளர் உள்ளிட்ட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக ரோட்டரி தலைவர் சேகர் மேத்தா, மெய்நிகர் சந்திப்பில் பாராட்டுத் தெரிவித்தார். கடந்த மார்ச் மாதம் முதல் செயலுக்கு வந்துள்ள இந்த அறுவைச் சிகிச்சை அரங்கில் இதுவரை 100-க்கும் மேலான அறுவைச் சிகிச்சைகள் நடத்தப்பட்டுள்ளன என்று முன்னாள் தலைவர் சாகேத் பாட்டியா தெரிவித்தார்.

சத்யசாய் மருத்துவமனையில் ரோட்டரி சார்பில் நிறுவப்பட்டுள்ள இரண்டாவது அறுவைச்சிகிச்சை அரங்கமாகும் இது. இதற்கு முன்னர் பரீதாபாத் மெயின் ரோட்டரி சங்கம், சர்வதேச மானிய உதவி மூலம் முதல் அறுவைச் சிகிச்சை அரங்கத்தை நிறுவியது என்றார் அவர். ஜோதி கார்ப் நிறுவனத்தின் நிறுவனரும், ஃபோர்ட் வைன் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினருமான Dr பிரவீன் கொல்லிபாரா இத்திட்டத்துக்கு 49,000 டாலர் நிதியுதவி வழங்கியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார். ■

# நடிப்பில் திலீப் தனி ரகம்!

ரஷீதா பகத்

எனக்கு அப்போது 10 வயது இருக்கும். நான் மும்பையில் உள்ள என் அக்கா வீட்டிற்கு சென்றேன். அப்போது என் அக்காவின் கணவர் என்னிடம், உனக்கு மும்பையில் என்ன பிடிக்கும், எங்கு போகவேண்டும் என கேட்டார். நான் திலீப் குமார் நடித்த படங்கள் என்றால் பிடிக்கும என்றேன். அவரும் திலீப் ரசிகர் என்பதால், உடனடியாக செய்திப் பத்திரிகையில் திலீப் நடித்த படங்கள் எங்கு திரையிடப்படுகிறது என்று பார்க்க ஆரம்பித்துவிட்டார். அந்த வாரம் முழுக்க காலைக் காட்சி, பிற்பகல், இரவுக் காட்சி என திலீப் நடித்த படங்களையெல்லாம் பார்த்தோம்.

ஆன், ஆஸாத், தேவதாஸ், மதுமதி, அந்தாஸ், கோஹினூர், யாஹூதி என 10 திரைப்படங்களை 7 நாள்களில் பார்த்து முடித்தோம். ஆண்டுகள் பல உருண்டோடிவிட்ட போதிலும் இன்றும் பாலிவுட்டில் எனது அபிமான நடிகர் திலீப்குமார்தான். அவரது நடிப்பு, வசன உச்சரிப்பு, உணர்ச்சி களின் வெளிப்பாடு தனி ரகம். அவரது லட்சக்கணக்கான ரசிகர்களில் நானும் ஒருவள். அவருக்கு இணையான ஒரு நடிகரை நான் பார்த்த தில்லை.

அவருக்கு என்று தனி நடிப்பு உள்ளது. அவர் திட்டமிட்டு செயல்படும் ஒரு நடிகர் என்று சத்யஜித்ரே கூறியுள்ளார். தான் நடிக்கும் திரைப்படத்தில் அந்த கதாப்பாத்திரமாகவே அவர் மாறிவிடுவார். கோஹினூர் படத்தில் சிதார் வாசிக்கும் வேடத்தில் நடிப்பதற்காக சிதார் கருவியை இசைக்க அவர் கற்றுக்கொண்டார். வெள்ளித்திரையில் எந்த ஒரு வேடமானாலும் அதை ஏற்று நடிக்க அவர் தயங்கியதில்லை.

ஆனால், பிரபலமாகிவிட்டோம் என்பதற்காக அவர் வருகிற எல்லா படங்களிலும் நடிக்க ஒப்புக் கொள்வதில்லை. நல்ல கதையம்சம் கொண்ட படங்களிலேயே அவர் நடித்து வந்தார். புகழ் இருக்கும்போதே பல படங்களில் நடித்துவிட வேண்டும் என்றில்லாமல் ஆண்டுக்கு ஒருபடம் நடித்தாலும் போதும், அதை நன்றாகச் செய்ய வேண்டும் என்பதுதான் அவரது எண்ணமாக இருந்தது. இதை அவரே ஒருபேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஒரு முறை விமல்ராய், தேவதாஸ் படத்தில் நடிக்க திலீப்பை அழைத்தார். ஒரு குடிகாரனாக படத்தில் நடிக்க வேண்டுமா என முதலில் யோசித்தார். ஆனால், அந்த இயக்குநர் அவரிடம் சரத்சந்திர சாட்டோபாத்யாய எழுதிய ஒரு புத்தகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பை அவரிடம் கொடுத்து அதை படிக்குமாறும் பின்னர் முடிவு எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

திரையுலகில் திலீப்புக்கு நன்மதிப்பு இருந்தது. தொழில் போட்டி இல்லை. அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டார்கள். இன்று அப்படியில்லை, ஷாரூக்கான், சல்மான்கான், ஆமிர்கான், அக்ஷய் குமார் என பாலிவுட்டில் பெரிய நடிகர்கள் மற்றும் நடிகைகள்





*மீனா குமாரியுடன் யாஹூதி* (1958) *படத்தில்.*

அன்று அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டார்கள். இன்று அப்படியில்லை, ஷாரூக்கான், சல்மான்கான், ஆமிர்கான், அக்ஷய் குமார் என பாலிவுட்டில் பெரிய நடிகர்கள் மற்றும் நடிகைகள் இருந்தாலும் இப்போது தொழில் போட்டி வலுத்துள்ளது.



*மதுமதி* (1958) *படத்தில் திலீப்குமார், வைஜயந்திமாலா.*

இருந்தாலும் இப்போது தொழில் போட்டி வலுத்துள்ளது, அனைவரும் அறிந்ததே. லதா மங்கேஷ்கர், திலீப்பை தனது மூத்த சகோதரர் போலவே பாவித்தார். ஒவ்வொரு வருடமும் அவருக்கு ராக்கி அணிவிப்பார். மகாராஷ்டிரியரான எனக்கு உருது பேச கற்றுக்கொடுத்தார். அதனால் பாடல்களை என்னால் சரியான உச்சரிப்புடன் பாடமுடிந்தது என்கிறார் லதா.

அமிதாப்பச்சன் மற்றொரு பெரிய ரசிகர். சக்தி படப்பிடிப்பின்போது செட்டில் படக்குழுவினர் சத்தம் போட்டுக் கொண்டிருந்தபோது அவர்களை திலீப் விரட்டியடித்ததை அமிதாப் நினைவுகூர்ந்தார். ஒரு பதான் எப்படி சிரமமின்றி ஒரு பழமையான கதாபாத்திரத்தில் போஜ்புரி மொழியில் பேசி நடித்தார் என்பதைப் புரிந்து கொள்ளவதற்காக தாம் மாணவராக இருந்தபோது திலீப் நடித்த ‘‘கங்கா ஜமுனா’’ படத்தை பலமுறை பார்த்ததாக அமிதாப், திலீப்பிடமே கூறியுள்ளார்.

இதுபற்றி திலீப் தனது சுயசரிதையில், நான் கங்கா ஜமுனா படத்தில் நடிக்க கஷ்டப்பட்டேன். எப்படியாவது நன்றாகச் செய்யவேண்டும் என்ற உள்ளுணர்வு, இடைவிடாத ஒத்திகை ஆகியவைதான் எனக்கு கைகொடுத்தது. இந்தப் படத்தை அவர் தயாரித்தது மட்டுமல்லாமல், பல மொழிகளில் திறமைவாய்ந்த நடிகராகவும் அறியப்பட்டார். ஆங்கிலம், உருது, பாரசீக மொழிகளை அவர் சரளமாக பேசுவார்.

திலீப்பும், ராஜ்கபூரும் இணைபிரியாத தோழர்கள். தர்மந்திரா அவரை மூத்த சகோதரரைப் போலவே நினைத்தார். கடும் குளிர் நிலவியபோது திலீப், தர்மேந்திராவுக்கு ஒரு ஸ்வெட்டர் கொடுத்தார். அதை



*திலீப் குமார் கையில் லதா மங்கேஷ்கர் ராக்கி கட்டுகிறார்.*

அவர் திருப்பிதரவேயில்லை. பின்னர் ஒரு முறை திலீப்பிடம் அந்த ஸ்வெட்டரை நான் வைத்துக் கொள்ளட்டுமா என்று கேட்டார். அதற்கு திலீப், “நான் பாரீஸிலிருந்து இரண்டு ஸ்வெட்டர்கள் வாங்கி வந்தேன். ஒன்றை என் சகோதரர் நஸீருக்கு கொடுத்துவிட்டேன். மற்றொன்று உங்களிடம் உள்ளது. அதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்” என்றார்.

திலீப்குமார் மிகவும் கூச்ச சுபாவம் உள்ளவராக இருந்தார். குறிப்பாக அவரது இளமைப் பருவத்தில். கல்லூரி நாட்களில் ராஜ்கபூர் அவரிடம் பல வேடிக்கைகளை நிகழ்த்துவார். கூச்ச சுபாவம் உள்ள அவரை பெண்களிடம் அறிமுகப்படுத்த முயற்சிப்பார். அவரின் இந்த சுபாவத்திற்கு காரணம் இல்லாமல் இல்லை. அவர் சிறுவனாக இருக்கும்போது, ஃபக்கீர் ஒருவர், திலீப் வீட்டில் மற்றவர்களுடன் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். உடனே, அவரின் தந்தையை அழைத்து, அவனை தனிமைப்படுத்துங்கள். நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள். உலகில் தீய சக்திகள் அவன் கண்ணில் படாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அவன் பிற்காலத்தில் பிரபலமாகவும் வருவான், அழகாகவும் இருப்பான். நீங்கள் அதைச் செய்யாவிட்டால் அவனை சீக்கிரத்திலேயே இழக்க நேரிடும் என்று எச்சரித்தார். அல்லாவின் நூர் (ஒளி) எப்போதும் அவரது முகத்தை பிரகாசிக்கச் செய்யும் என்றார். இதன் விளைவாக அவர் தனிமைப்படுத்தப்பட்டதுடன், தலையை மொட்டை அடித்து, நெற்றியில் சூடுவைத்து அவரது அழகை குலைத்து பெஷாவரில் உள்ள பள்ளிக்கு அனுப்பினர்.’ நான் பள்ளியில் தனியொருவனாக இருந்தேன். விளையாட்டும் இல்லை. நேரம் கிடைத்தால் நூலகத்துக்குச் சென்று புத்தகங்கள் படிப்பேன்’ என்று திலீப் தனது சுயசரிதை புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

> சிறுவயதில் எனது நெற்றியில் சூடுவைத்ததால், பள்ளியில் தனிமைப்படுத்தப்பட்டேன். அப்போது நான் பட்ட மனவேதனையை நினைத்து தான் பிற்காலத்தில் சோகமான வேடங்களில் உணர்ச்சி பொங்க நடித்தேன்.

திலீப் கூச்ச சுபாவம் உள்ளவராக இருந்தபோதிலும், வில்ஸன் கல்லூரியில் படித்துவந்த ராஜ்கபூருக்கு பெண்களிடம் நட்பு ஏற்பட்டது. அதனால் மிகவும் பிரபலமானார். விளையாட்டில் அவர் சிறந்து விளங்கினாலும், திலீப் குமாருக்கு ஆங்கிலம், உருது மொழி சரளமாகத் தெரியும் என்பதால் அவர் பெருமிதம் கொண்டார். ராஜ்கபூர், நிச்சயம் நடிகராவார் என்பது எனக்குத் தெரியும். நான் உண்மையில் விரும்பியது ஒரு சிறந்த கால்பந்து வீரராக உருவாக வேண்டும் என்பதுதான் என்கிறார் திலீப். சைராபானுவை திருமணம் செய்துகொண்ட பிறகு வீட்டில் உள்ள குளிர்பதனப் பெட்டியில் எப்போது உணவு வைக்கப்பட்டிருக்கும். கிரிக்கெட் அணியினர் வந்தால் அவர்களுக்கு பதான் விருந்து காத்திருக்கும் என்று திலீப் குறிப்பிடுகிறார்.

சிறுவயதில் எனது நெற்றியில் சூடுவைத்ததால், பள்ளியில் தனிமைப்படுத்தப்பட்டேன். பலரும் என்னை கேலி செய்வார்கள். அப்போது எனக்கு அழுகையாக வரும். அப்போது நான் பட்ட மனவேதனையை நினைத்துதான் பிற்காலத்தில் சோகமான வேடங்களில் உணர்ச்சி பொங்க நடித்தேன் என்று திலீப் கூறியுள்ளார்.

அவருடைய தந்தை, திலீப் ஒரு பெரிய அரசு அதிகாரியாக வரவேண்டும் என்று கனவுகண்டார். அவர்கள் மும்பை நாகதேவி தெருவில் வசித்து வந்தனர். அவரது தந்தை கிராஃபோர்டு மார்க்கெட்டில் பழ வியாபாரம் செய்து வந்தார். இரண்டாவது உலகப் போரின்போது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால் பழ வியாபாரம் குறைந்ததால் குடும்பத்தில் கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டது.

பதின் பருவ வயதில் தந்தையுடன் சிறிய மனக்கசப்பு ஏற்பட்டதால் கையில் இருந்த 40 ரூபாயுடன் வீட்டை விட்டு வெளியேறி ரயில்மூலம் புணேவுக்கு சென்றார் திலீப். நல்ல உயரத்தில், அனைவரையும் ஈர்க்கக் கூடிய இளைஞராகவும், ஆங்கிலம் மற்றும் உருது மொழி பேசத் தெரிந்திருந்ததால் முதல் நாளே அவருக்கு பிரிட்டிஷ் ராணுவ கிளப்பில் அவருக்கு வேலை கிடைத்தது. அங்கு மேலாளர் மற்றும் இதர அதிகாரிகளின் நம்பிக்கைக்குரியவரானார். அதன்

மூலம் அங்கு சாண்ட்விச் ஸ்டால் அமைத்தார். அதில் நல்ல வருமானம் கிடைத்தது.

பின்னர் ரூ.5,000 சேமிப்புடன் வீடுதிரும்பினார். அந்த நாளில் அது ஒரு பெரிய தொகையாகும். அதை தாம் பெரிதும் மதிக்கும் தாயாரிடம் கொடுத்தார். அதற்கு அவர், இது நேர்மையான வழியில் சம்பாதித்தது தான் என்று குரான் மீது சத்தியம் செய்துகொடுக்குமாறு திலீப்பிடம் கூறினாராம்.

பாம்பே டாக்கீஸின் உரிமையாளரான தேவிகா ராணியின் நன்மதிப்பை திலீப் பெற்றது அனைவருக்கும் தெரிந்ததே. தேவிகா ராணி, அவருக்கு மாதம் ரூ.1,250 ஊதியம் கொடுத்து வந்தார். நடிப்பு பற்றி அவருக்கு எதுவும் தெரியாததால் தேவிகா அவரிடம் போகப்போக கற்றுக்கொள்வாய் என்றார். அப்போது தான் திலீப்புக்கு நடிகர் அசோக் குமாரின் தொடர்பு கிடைத்தது. அவர், திலீப்புக்கு நடிப்புக்கலையில் உள்ள நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்தார். இதையடுத்து அவர்களுக்கு இடையே நட்புறவு வலுப்பட்டது.

ஒருமுறை அசோக் குமாருடன் உள்ளூர் ரயிலில் பயணம் செய்தபோது ரசிகர்கள் பலரும் அவரை அடையாளம் கண்டு சூழ்ந்துகொண்டனர். ஒரு பிரபல நடிகருக்கு இத்தனை வரவேற்பா? என்று வியந்துபோனேன். அடுத்த நாள் மும்பை டாக்கீஸில் இந்த சம்பவத்தை அசோக்குமார் முன்னலையில் பிரபல இயக்குநர் முகர்ஜியிடம் விவரித்தேன். அவர்

ராஜ்கபூர், நிச்சயம் நடிகராவார் என்பது எனக்குத் தெரியும். நான் உண்மையில் விரும்பியது ஒரு சிறந்த கால்பந்து வீரராக உருவாக வேண்டும் என்பதுதான்.

அப்போது சொன்னார், "எதிர்காலத்தில் உனக்கு ஏற்படப்போகும் அனுபவத்தின் முன்னோட்டம் தான் இது" என்றார். உங்களைப் போன்ற அழகான மனிதர்களுக்கு பெண்களை தவிர்ப்பது சிக்கலானதாக இருக்கும் என்றார். அவர் என் முகத்தை பார்த்துவிட்டு தனக்குள் சிரித்துக்



*மனைவி சைரா பானுவுடன்.*



*அந்தாஸ்* (1949)
*படத்தில் திலீப் குமார்.*

நர்கீஸுடன் ஜோடியாக (மேளா-1948 மற்றும் பாபுல்-1950) நடித்துவிட்டு இப்போது அவரது மகனாக நடிப்பது பொருத்தமாக இருக்காது என்று நினைத்தார்.

திலீப் தனது கதாபாத்திரத்தின் மீதான ஆழமான பதிவு, நடிக்கும் முறை, அதற்கான கடின உழைப்பு ஆகியவற்றை கங்கா ஜமுனா படத்தில் அவர் இறக்கும் காட்சி படமாக்கப்பட்டதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இதை அவரே தனது புத்தகத்தில் விவரித்துள்ளார். அவர் இந்த காட்சியை படமாக்குவதற்கு முன் ஒளிப்பதிவாளர் V பாபா சாஹேப்பை அழைத்து, இந்த காட்சிக்கு ஒத்திகையோ அல்லது இரண்டாவது டேக் இருக்காது என்று கூறி ஒரே ஷாட்டில் படமெடுக்க தயாராக இருக்குமாறு கூறியதுடன் நடிப்புக்கும், கேமரா



கொண்டார். ஏனெனில் நான் மிகவும் கூச்ச சுபாவம் உள்ளவன், பெண்கள் முன்னிலையில் பேசத் தயங்குபவன் என்பது அனைவருக்கும் தெரியும். பின்னாளில் அவர் பிரபலமடைந்தபோது ரசிகர்கள் பட்டாளம் அவரை சூழ்ந்துகொண்டு காரில் வந்த அவரை, தூக்கிச் சென்று நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் இறக்கிவிட்டு தங்கள் அன்பை வெளிப்படுத்தினர்.

லண்டனில் ராணி எலிசபெத்தை சந்திக்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. இதை அவரே தனது சுயசரிதையில் தெரிவித்துள்ளார். அவரது மனைவி சைரா பானு லண்டன் பள்ளியில் படித்தவர். அவர் வாழ்க்கையில் எப்படியும் ராணி எலிசபெத்தை சந்தித்துவிட வேண்டும் என்று விரும்பினார். 1970-களில் குடலில் ஏற்பட்ட பிரச்னைக்காக சைராபானு லண்டன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அப்போது திலீப்பும் கூட இருந்தார். சைரா குணமடைந்த பிறகு ஒருசில நாட்களை அங்கு கழித்தார். அப்போது ராணி எலிச பெத்தின் தேநீர் விருந்தில் கலந்து கொள்ளுமாறு திலீப்-சைரா தம்பதிகளுக்கு அழைப்பு வந்தது. நிகழ்ச்சிக்கு யார் யார் வந்திருக்கிறார்கள் என்பதை பார்வையிட்ட ராணி, ஆசியாவைச் சேர்ந்தவர்கள் அதிகம் பங்கேற்றது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார். அத்துடன் திலீப் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்து, நீங்கள் உண்மையில் பிரபலமான மனிதர். உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்றாராம். இதை தலீப் தனது புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.


நீண்டகாலமாக தனது சொந்தபடமான கங்கா ஜமுனாவை (1961) தயாரிப்பதில் அவர் கவனம் செலுத்திவந்தார். சுதந்திர இந்தியாவில் ஊரகப்பகுதிகள் வளர்ச்சி தொடர்பான முக்கியப் பிரச்னைகளை எழுப்ப அவர் விரும்பினார். விவசாயிகள் அடிமை வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள், நிலப் பிரபுக்களால் சுரண்டப்படுகிறார்கள் என்று கருதினார். முன்னதாக 1950-களில் மெஹ்பூப்கானின், மதர் இந்தியா படத்தில் மகன்களில் ஒருவராக நடிக்க வந்த அழைப்பை அவர் நாசூக்காக மறுத்துவிட்டார்.

மதர் இந்தியா படத்தில் மகன்களில் ஒருவராக நடிக்க வந்த அழைப்பை அவர் நாசூக்காக மறுத்துவிட்டார். நர்கீஸுடன் ஜோடியாக (மேளா–1948 மற்றும் பாபுல்– 1950) நடித்துவிட்டு இப்போது அவரது மகனாக நடிப்பது பொருத்தமாக இருக்காது என்று நினைத்தார்.



ஒளிப்பதிவுக்கும் சரியாக இருக்க வேண்டும் என்றார். படப்பிடிப்பு குழுவினருக்கு இவர்கள் இருவரும் என்ன பேசிக்கொண்டனர் என்பது தெரியாத நிலையிலேயே காட்சி படமாக்கப்பட்டது.

காட்சி படமாக்க படுமுன் கங்காவாக நடிக்கும் திலீப்



*முகல்-இ-அஸம்* (1960) *படத்தில்.*

படப்பிடிப்பு நடக்கும் இடத்தை வேகமாக சுற்றி வந்து, வியர்வை சிந்த அவர் தாயார் வணங்கும் கடவுளிடம் வந்து விழுந்தார். அத்தனை தத்ரூபமாக அந்தக் காட்சி படமாக்கப்பட்டது. திலீப்குமார் மறைவு செய்தியைக் கேட்டதும் அவருக்கு பலரிடமிருந்து புகழாரம் வந்தது. முதலில் கருத்துத் தெரிவித்தவர் பாலிவுட்டின் சிறந்த நடிகர்களில் ஒருவரான நஸிருத்தீன் ஷா. திலீப்பின் நடிப்பை பாராட்டிய அவர், தனது கோபத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். நல்ல படங்களில் நடித்தவர், சமூக காரணங்களுக்கு உதவியவர் என்பது தவிர இந்திய திரையுலகிற்கு அவர் விட்டுச் சென்றது என்ன? என்று அவர் கேள்வி எழுப்பினார்.

ஹிந்தி படஉலகத்திற்கு மகத்தான பங்களிப்பை அவர் செய்துள்ளார் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், ஹிந்தி திரையுலகின் முன்னேற்றத்துக்கு அவர் என்ன செய்தார்? ஒரு கட்டத்தில் தொய்வில் இருந்த ஹிந்தி சினிமா உலகத்தை இன்றைய நட்சத்திர மையமாக்க அவர் செய்தது என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

குல்ஸாரின் அழியாத சீரியல் "மிர்ஸா காலிப்"ல் தலைமை பாத்திரத்தை ஏற்று நஸிருத்தீன் ஷா சிறப்பாக நடித்தார். அவர் அமைதியாகவும், குறைவில்லாமலும் நல்ல தரமான நடிப்பை வெளிப்படுத்தினார். அவரது சிக்கனம் மற்றும் செயல்பாடுகள் பின்னர் வந்த நடிகர்களால் புரிந்து கொள்ளப்படவில்லை. மேலோட்டமான பிரதிபலிப்பு இல்லாவிட்டாலும் திலீப்பின் சாயலை அவர்கள் பின்பற்றி வருவதைக் காணலாம்.

### மனதை தொட்டது

எனது விருப்பமான நடிகர் மறைந்து இரண்டு வாரங்கள் ஆகிவிட்டபோதிலும் திலீப்குமாரின் படங்கள் எந்த ஊடகத்தில் திரையிடப்பட்டாலும் அவற்றை பார்க்கத்தவறவில்லை. இன்றுள்ள சூப்பர் ஸ்டார்கள் அனைவரும் அவருக்கு ஒருவகையில் கடன்பட்டிருக்கிறார்கள். திலீப்பின் நடிப்பை அப்படியே பிரதிபலிக்காவிட்டாலும், கிட்டத்தட்ட ஒவ்வொரு பாலிவுட் நட்சத்திரமும் விதிவிலக்கு இல்லாமல் அவரது முகபாவம், செயல்பாடு, புன்னகை கோபம் போன்றவற்றை தங்கள் நடிப்பில் வெளிப்படுத்தியதை காணமுடியும்.

> காட்சி படமாக்க படுமுன் கங்காவாக நடிக்கும் திலீப் படப்பிடிப்பு நடக்கும் இடத்தை வேகமாக சுற்றி வந்து, வியர்வை சிந்த அவர் தாயார் வணங்கும் கடவுளிடம் வந்து விழுந்தார். அத்தனை தத்ரூபமாக அந்தக் காட்சி படமாக்கப்பட்டது.

அல்பாசினோ எனக்குப் பிடித்த மற்றொரு நடிகர். சமீபத்தில் அவர் நடித்த "டெவில்'ஸ் அட்வோகேட்" திரைப்படத்தை பார்த்து மீண்டும் வியந்துபோனேன். திலீப்-அல் பாசினோ இருவரும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான தோற்றத்தைக் கொண்டிருந்தனர். உடல் தோற்றத்தில் மட்டுமல்ல, நடிப்பிலும்தான்!

திலீப் நடித்த படங்களில் வெளியான பாடல்களில் எனக்குப் பிடித்தவை:

சுஹானஸஃபர் அவுர் யே மௌஸம்ஹஸீன் மற்றும் தில் தடப் தடப் கே கெஹராஹே (மதுமதி), உதே ஜப் ஜப் ஸுல்ஃதேரி (நயா தார்), து கஹே அகர் ஜீவன் பார் மே கீத் சுனாதா ஜாவூன் (அந்தாஸ்), கித்னாஹஸீன் ஹை மௌஸம் (ஆஸாத்), தோ சித்தாரோ கா ஜமீன் பர் ஹெ மிலன் மற்றும் மதுபென் மே ராதிகா நாச்சே ரே (கோஹினூர்), யே மேரா திவானாபன் ஹை (யாஹுதி), மான் மேரா எஹஸான ரே நாதான் (ஆன்) மற்றும் மில்தே ஹை ஆங்கென் தில் ஹுவா திவானா கிஸிகா (பாபுல்).



*தீதர்* (1951) படத்தில் அசோக்குமாருடன்.

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

# PRIP கார்லோ ரவிஜ்ஜா, உங்களின் மறைவு ரோட்டரியிற்கு இழப்பு

சேகர் மேத்தா



*ராஷி மற்றும்* RI *தலைவர் சேகர் மேத்தா (அப்போது* DGE), *கார்லோ ரவிஜ்ஜா (அப்போது* RIPE) *மற்றும் ரோஸ்ஸன்னா* 1999 *ரோட்டரி அசம்ப்ளியில்.*

ரோட்டரியன்களுக்கு நடுவில் சிங்கம்போல் நின்றவர் இப்போது இல்லை என்பதை நம்புவது கடினமாக உள்ளது. நேர்வழியில் நடப்பவர், தொலைநோக்குச் சிந்தனை கொண்டவர், வெளிப்படையாகப் பேசுபவர்... PRIP கார்லோ ரவிஜ்ஜா என்னும் மிகச் சிறந்த ரோட்டரியனுடைய ஆளுமை அதுதான்.

அவர் RI தலைவராக இருந்த ஆண்டில் மாவட்ட ஆளுநராகச் சேவை புரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் அவரை முதலில் சந்தித்தது, என் சொந்த ஊரான கல்கத்தாவில், அவரும் அவருடைய மனைவி ரோஸன்னாவும் கல்கத்தாப் இன்ஸ்டிட்யூட்டிற்கு வந்திருந்தபோதுதான்.

அவர் ரோட்டரியில் மிகப் பெரிய மாற்றங்களைச் செய்ய விரும்பினார், கூர்மையான மனத்தைக் கொண்டிருந்தார், வெளிப்படையாகப் பேசினார். அவருடைய ஆண்டின் கருப்பொருள், நிலைத்தன்மை, நம்பகத்தன்மை, தொடர்ச்சியுடன் செயல்படுங்கள்'' என்பது மிகச் சிறந்த பொருளைக் கொண்டிருந்தது.

அந்த முதல் சந்திப்புக்குப்பிறகு, ராஷியும் நானும் அனாஹெய்மில் பன்னாட்டுச் சந்திப்பின் போது அவரைச் சந்தித்தோம், பின்னர் டாக்கா கருத்தரங்கிலும், அதன்பிறகு எங்கள் ரோட்டரி பயணத்தில் பல சூழ்நிலைகளிலும் நாங்கள் சந்தித்தோம். நாங்கள் சந்தித்த ஒவ்வொருமுறையும் அவருடைய கதகதப்பு ஒரேமாதிரிதான் இருந்தது.

அவருடைய ஆன்மா அமைதியடையட்டும். ரோஸன்னா மற்றும் அவருடைய குடும்பத்தினருக்கு எங்களுடைய உளமார்ந்த வருத்தங்கள்.■

---

2022 ஹூஸ்டன் மாநாடு

# விண்மீன் ஆற்றல்

1960களில் தொடங்கி, அமெரிக்க மனித விண் வெளித்திட்டம் மற்றும் அதன் விண்வெளி வீரர் பயிற்சித்திட்டத்தின் கட்டுப்பாட்டு இல்லமாக ஹூஸ்டன் உள்ளது. ஜூன் 4 முதல் 8 வரை நடை பெறும் RI மாநாட்டுக்கு வரும் போது, கல்வித் திட்டங்கள், அருங்காட்சியகம் ஒன்றைக் கொண்ட ஹூஸ்டன் விண்வெளி மையத்தில் இந்த வரலாற்றை மேலும் அறிவீர்கள், விண்வெளி அறிவியலையும் கற்பீர்கள்.



இங்குள்ள விண்வெளிக் கப்பல் காட்சியகத்தில் நீங்கள் காணக்கூடிய சில விண்கலன்கள்: ஃபெய்த் 7 (1963ல் கார்டன் கூப்பர் 34 மணிநேரம் பூமியைச் சுற்றி வந்த நிறைவு மெர்க்குரி காப்ஸ்யூல்); ஜெமினி V (1965ல் நிலவுக்குச் செல்லும் பயணத்துக்கான NASA ஆராய்ச்சியின் ஒரு பகுதியாகக் கூப்பரும் பீட் கான்ராடும் எட்டு நாள் தங்கியது); அப்போலோ 17ன் (நிலாவுக்குச் சென்ற கடைசி அப்போலோப் பயணம்) கட்டளைத் தொகுப்பு. உலகின் மிகப் பெரிய பொதுக் காட்சி நிலாக்கற்கள் தொகுப்பையும் இங்கு நீங்கள் காணலாம்.

இங்குள்ள விண்வெளி வீரர் கண்காட்சியில் 1960 களின் அழுத்த ஆடைகளில் தொடங்கி, நிலாவில் அல்லது செவ்வாயில் கூட நீண்ட நாள் தங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட முன் மாதிரி ஆடைவரை பல விண்வெளி உடைகளைக் காணலாம்.

விண்வெளியில் கட்டப்பட்ட மிகப் பெரிய கட்டமைப்பும், விண்வெளி வீரர்கள் தொடர்ந்து அறிவியல் ஆய்வுகளைச் செய்து அடுத்த விண்வெளி ஆராய்ச்சி நிலைக்குத் தயாராகும் இடமுமாகிய பன்னாட்டு விண்வெளி நிலையத்துக் காக இங்கு ஒரு தனிக் கண்காட்சி உள்ளது. நீங்கள் NASA டிராம் பயணத்தைக் கண்டிப்பாகக் காண வேண்டும். மேலும் தகவல்களுக்கு, *spacecenter.org/visitor-information* என்ற இணையத்தளத்தைக் காணுங்கள்.

**மாநாடுபற்றி தெரிந்து கொள்ளவும் பதிவு செய்யவும்:** *convention.rotary.org*

# திலீப்: முழுமையான நடிகர்

SR மது

கடந்த ஜூலை 7ம் தேதி திலீப்குமார் சொர்க்கத்தில் நுழைந்த போது பாலிவுட் குழுவினர் ஆச்சர்யமடைந் தனர். தேவ்ஆனந்த், ராஜ்கபூரிடம், நீங்கள் கேட்டீர்களா?, நீங்கள் கேட்டீர்களா? என்று கேட்டார்.

"யூசுப் நம்முடன் இணைகிறார்"

ராஜ்: அப்படியா? 1966ம் ஆண்டு திலீப்-சைரா திருமணத்தின்போது தனது நடனத்தை நினைவுபடுத்தும் வகையில் "திலீப்பைய்யா வாஸ்தவய்யா" பாடலைப் பாடுகிறார்.

திலீப்புக்கு வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது. அவருடன் நடித்த நடிகை பட்டாளம், நுழைவு வாயிலில் அவருக்கு மகிழ்ச்சியுடன் பூங்கொத்து கொடுத்து வரவேற்கின்றனர். இந்த நட்சத்திர பட்டாளத்தில் மதுபாலா, மீனா குமாரி, நர்கீஸ், நூர்ஜஹான், சுசித்ரா சென், நிம்மி, நூதன், நளினி ஜெயவந்த் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

"எனது படங்களின் வெற்றிக்குப் பின்னால் நீங்கள்தான் இருந்தீர்கள்" என்று திலீப் பெருமையுடன் குறிப்பிடுகிறார். 1949ம் ஆண்டில் அந்தாஸ் படத்தில் பிரபல "தூ கஹே அகர் ஜீவன் பார் மே கீத் சுனாதா ஜாவூன்" பாடலை முணுமுணுக்கிறார். அப்போது கைதட்டலுடன் சிரிப்பலையும் எழுகிறது. "இல்லை உங்கள் படத்தில் நடித்ததால்தான் நாங்கள் சினிமா வாழ்க்கையில் பிரபலமாக முடிந்தது" என்று மீனா குமாரி தெரிவிக்கிறார். திலீப் குமார், சுசித்ரா சென்னுக்கு வாழ்த்து தெரிவிக்கிறார். அதற்கு," நான் 60 படங்களில் நடித்திருந்தாலும் மக்கள் "தேவதாஸ்" படத்தை பற்றித்தான் அதிகம் பேசுகிறார்கள்' என்கிறார் சுசித்ரா சென்.

நர்கீஸ்-திலீப் இருவரும் கட்டித் தழுவுகின்றனர். "நான் உங்களுடன் 7 படங்களில் நடித்துள்ளேன். இது எனது சினிமா வாழ்க்கையில் முக்கியமானது. பாபுல், அந்தாஸ், மேளா அல்லது தீதர் ஆக இருக்கட்டும் அனைத்திலும் நீங்கள் தான் ரசிகர்கள் மனதில் இடம் பெற்றீர்கள்" என்கிறார் நர்கீஸ். அதற்கு திலீப், "நம்முடைய அனைத்து படங்களிலும் நான் காதல் தோல்வியையே சந்திப்பேன். நீ என்னிடமிருந்து விலகிவிடுவாய்," என்கிறார். நர்கீஸ் உள்ளுக்குள் சிரித்துக் கொள்கிறார்.

திலீப்பின் கண்டுபிடிப்பான, இந்திய சினிமாவின் முதல் பெண் நட்சத்திரம் தேவிகாராணிக்கு அனைவரும் வழிவிடுகின்றனர். இருவரும் ஒருவரை ஒருவர் ஆரத்தழுவிக்கொள்கின்றனர். "என் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது நீங்கள் தான்" என்று திலீப் சொல்கிறார். "இல்லை பாலிவுட்டில் ஏற்பட்ட மாற்றத்துக்கு நீங்கள் தான் காரணம்" என்கிறார் பதிலுக்கு தேவிகாராணி. "நீங்கள் இதயங்களை வெல்வீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால்,



*மதுபாலாவுடன் திலீப்குமார்.*

இந்தியாவையே வென்றுவீட்டீர்கள்'' என்கிறார்.

அற்புதமான குரலுக்கு பெயர்பெற்ற நடிகை நூர்ஜஹான், மற்றவர்களை புறந்தள்ளிவிட்டு திலீப்பை கட்டித் தழுவுகிறார். 1947ம் ஆண்டு வெளியான ''ஜுக்னு'' படத்தின் திலீப் குமாருக்கு ஹீரோயின் நூர்ஜஹான். பாகிஸ்தானுக்கு குடிபெயர்வதற்கு முன்னதாக 1940களின் இந்தியர்களின் மனம் கவர்ந்த நடிகைகளில் அவரும் ஒருவர். 1982ம் ஆண்டு பாகிஸ்தானிலிருந்து மும்பைக்கு நூர்ஜஹான் விஜயம் செய்ததை நினைவு கூர்ந்தார் திலீப். மும்பைக்கு நூர்ஜஹான் வந்தபோது மும்பை மக்கள் திரண்டு வந்து அவருக்கு வரவேற்பு அளித்தனர். '' அன்மோல் காடி'' படத்தில் வரும் ''ஆவாஸ் தே கஹான் ஹை'' என்ற பிரபலமான பாடலைப் பாடுமாறு நூர்ஜஹானிடம் கேட்கிறார் திலீப். அவரது இனிமையான குரல் பார்வையாளர்களை சொக்க வைத்தது.

''பூமியில் நடந்தது போலவே இங்கும் மக்கள் உங்களைச் சுற்றித் தான் வருகிறார்கள்'' என்கிறார் ராஜ்கபூர்.

அதற்கு திலீப்,' யார் பேசுகிறார் என்று பாருங்கள்' என்று ராஜ்க்கு பதில் கொடுக்கிறார்.

மதுபாலா, திலீப்பை புன்னகை யுடன் வரவேற்கிறார். ''நீங்கள் எப்போதும் போலவே அழகாக இருக்கிறீர்கள்'' என்கிறார் திலீப். அதற்கு மதுபாலா வெட்கத்துடன், ''நீங்கள் இல்லாமல் பாலிவுட் முன்பு போல இருக்காது'' என்கிறார்.

மதுபாலா சொல்வது போல திலீப் இல்லாத பாலிவுட் கலகலப்பாக இருக்காது என்பது உண்மைதான்.

அவர் ஒரு சோக மன்னன். நடிப்பு பல்கலைக்கழகம், எந்த வேடத்தையும் சிறப்பாகச் செய்யும் நடிகர். மேகநாத் தேசாய் அவரை ஆக்டர் இ ஆஸம் என்று அழைத்தார். 1944ம் ஆண்டு முதல் 1998 வரை திலீப் 67 படங்களில் நடித்துள்ளார். ஆனால், அவருக்கு இந்தியா, பாகிஸ்தான் இரண்டு நாடுகளிலும் அவருக்கு செல்வாக்கு இருந்தது. மக்கள் நினைக்கும் விதத்தில் உடையணிந்து, திரையில் உணர்ச்சி

*தேவ்தாஸ்* (1955) *திரைப்படத்தில் வைஜயந்திமாலாவுடன்.*



வசப்பட்டு பேசியவர். இதர நடிகர்களுக்கு அவர் ஓர் உதாரணம். 1982 ஆம் ஆண்டு பிரேம் ராக் ரோக் படத்தை ராஜ்கபூர் இயக்கினார். அதில் நடித்த ரிஷி கபூரின் நடிப்பு அவ்வளவு திருப்தியாக இல்லை. யூசுப்பை மனதில் கொண்டு நடி என்று மகனுக்கு அறிவுரை கூறினார். இறுதியில் அதை புரிந்துகொண்டு ரிஷிகபூர் நடிக்க டேக் சரியாக வந்தது. 1982ல் வெளிவந்த சக்தி திரைப்படத்தில் ரெளடி வேடத்தில் நடிக்கும் மகன் அமிதாப்புக்கு எதிராக போலீஸ் அதிகாரி வேடத்தில் நடிக்கிறார் திலீப். இந்த படத்தைப் பார்த்த ராஜ்கபூர், பின்னர் திலீப்புக்கு தொலைபேசி மூலம் ''நீதான் சிறந்த நடிகர்'' என்று பாராட்டினார்.

சத்யஜித்ரே ஒரு முறை, திலீப் திட்டமிட்ட நடிகர், எந்த கதாபாத்திரம் ஆனாலும், அந்த கதாபாத்திரமாகவே மாறி நடிப்பவர். சோகமான நடிப்பில் அவரை பார்க்கும்போது ரசிகர்கள் அவர் நடிக்கிறார் என்பதையே மறந்து விடுவார்கள். அவ்வளவு தத்ரூபமாக அவர் நடிப்பார் என்று கூறினார். திலீப் ஒரு முழுமையான நடிகர் என்கிறார் அனுபம்கெர்.

கோஹினூர் படத்தில் நடிப் பதற்காக படப்பிடிப்பு தொடங்கு வதற்கு 6 மாதங்கள் முன்பு சிதார் வாசிக்க கற்றுக்கொண்டார். ஏனெனில் அதில் வரும் ''மதுபென் மே ராதிகனாச்சே ரே'' என்னும் பாடலில் அவர் சிதார் இசைக்க வேண்டியிருந்தது. (இந்தப் பாடலை முகமது ரஃபி அனுபவித்து பாடியுள்ளார்.) தீதர் படத்தில் பார்வை இழந்த இளைஞராக நடிப்பதற்காக தாதர் ரயில் நிலையம் அருகில் கண்பார்வையற்ற பிச்சைக் காரருடன் பலநாள்கள் கழித்தார். தனது சொந்த தயாரிப்பான கங்கா ஜமுனா படத்திற்காக உத்தரப்பிரதேச மாநில மக்களின் பேச்சு, பழக்க வழக்கங்களை தெரிந்து கொள்வதற்காக பல மாதங்கள் உ.பி. முழுக்க சுற்றுப்பயணம் செய்தார். போஜ்புரி மொழியிலும் தேர்ச்சி பெற்றார். ஹிந்தி மொழியைக்கூட சரளமாக பேசமுடியாத நடிகை வைஜயந்திமாலாவுக்கு ஹிந்தியை முழுமையாகப் பேச பயிற்சி அளித்தார். ஒருமுறை தனது படம் தணிக்கை சிக்கலில் மாட்டிக் கொண்டபோது அப்போது பிரதமராக இருந்த நேருவிடம் பேசி, அதற்கு ஒப்புதல் பெற்றார்.

''எந்த ஒரு வேடமாக இருந்தாலும் அதைச் சரியாகச் செய்யவேண்டும் என்பதில் திலீப் கண்ணும் கருத்து மாக இருப்பார். அவரின் இந்த குணம் எனக்குப் பிடிக்கும். வசன ஒத்திகைக்காக அவர் பல மணி நேரம் செலவழிப்பார். மூன்று தலைமுறை நடிகர்களை ஈர்த்தவர் திலீப். எந்த ஒரு நடிகர் நடித்தாலும் அதில் திலீப் குமாரின் சாயல் இருக்கும். அமிதாப்பச்சன், மனோஜ்குமார், ராஜேந்திர குமார், தர்மேந்திரா, சஷிகபூர், ஷாரூக்கான், ஆமிர்கான் மற்றும் இர்பான் கான்



*ராஜ்கபூர் மற்றும் தேவ் ஆனந்த் ஆகியோருடன் திலீப்குமார்.*

இவர்கள் எல்லோருமே திலீப்பின் அபிமானிகள். அவருக்கு நன்றிக்கடன் பட்டிருப்பதாகக் கூறுவார்கள் என்பார் வைஜயந்திமாலா''. ''மார்லன் பிராண்டோவுக்கு முன்பே நடிப்புக்கு இலக்கணம் வகுத்தவர் திலீப்குமார்'' என்கிறார் ஜாவித் அக்தர்.

அந்தாஸ், தீதர், பாபுல் மற்றும் சில படங்களில் அவரை சோகமான பாத்திரத்தில் பார்த்து ரசித்த ரசிகர்கள், திலீப் ஆன் படத்தில் குதிரையில் கத்தியை சுழற்றிக்கொண்டு வருவதைப் பார்த்ததும் திகைத்துப் போனார்கள்.

### திலீப்பின் குடும்பம்

குடும்பம்தான் தன் வாழ்க்கையின் மையம் என்று திலீப் கூறியுள்ளார். ஆறு சகோதரர்கள், ஐந்து சகோதரிகள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்காக தன்னால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளார். அவர்கள் தன்னைவிட புகழ்பெற்றவர்களாக இருந்திருந்தால் மகிழ்ச்சி அடைந்திருப்பார். அவர் 67 படங்களில் நடித்துள்ளார் என்றால் அதற்கு முக்கிய காரணம் தேவிகா ராணிதான். அவரைத் தவிர, திரைத்துறையில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் உதவியவர்களுக்கு அவர் நன்றியுடையவராக இருந்தார். கிராந்தி (1981)-மனோஜ்குமார், சக்தி (1982)-ரமேஷ் சிப்பி, விதாதா (1982) - கர்மா (1986), சௌதாகர் (1991) சுபாஷ் கை. இவை அனைத்தும் வெற்றிப்படங்களாக அமைந்தன. 1970-க்குப் பிறகு திலீப்பின் புகழ் மங்கிவிட்டது என்ற கருத்துகளை இவை மாற்றிவிட்டன.

இளைஞராக இருக்கும்போது ஒரு கால்பந்து வீரராக இருக்கவே நான் விரும்பினேன். கிரிக்கெட்டிலும் எனக்கு ஆர்வம் உண்டு. கால்பந்து விளையாட்டு நான் நடிகராக உதவியது. அதற்கான உடல் கட்டை எனக்கு கொடுத்தது என்று 1952ல் ''புட்பாத்'' படத்தின் படப்பிடிப்பின் போது திலீப் நினைவுகூர்ந்தார். இந்த படத்தில் நடித்தபோது ஒரு குறிப்பிட்ட காட்சியில் நடிக்க அவருக்கு மூட் இல்லை. பின்னர் பிராபோன் விளையாட்டரங்குக்குச் சென்று சிறிது நேரம் கிரிக்கெட் விளையாடி இரண்டு பவுண்டரிகள் அடித்த பின்னர்தான் அவருக்கு சுறுசுறுப்பு வந்தது. படப்பிடிப்பில் கலந்துகொண்டார்.

கிரிக்கெட் டெஸ்ட் போட்டி நடக்கும் சமயத்தில் ஸ்டுடியோவுக்கு நடிக்க வரும்போது கையில் பெரிய டிரான்சிஸ்டருடன்தான் திலீப் வருவார் என்று மனோஜ்குமார் குறிப்பிட்டார். போட்டி வர்ணனைகளை ஆர்வமுடன் கேட்பார் என்றார் அவர். (கிரிக்கெட் வர்ணனையாளராக இருந்த விஜய் மெர்ச்சன்ட் அவரு நெருங்கிய நண்பர்.) உலகக்கோப்பை போட்டியில் இந்தியா வெல்லும் என்று திலீப் கணித்தார். 1983லும் 2011லும் அது நடந்த போது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

பாலிவுட் கிரிக்கெட் அணிக்கு திலீப் மற்றும் ராஜ் இருவரும் தலைமையேற்று இரு அணிகளாக அறக்கட்டளைக்கு நிதி சேர்க்க போட்டி நடத்தியதுண்டு. 1962ல் ஒருமுறை திலீப் அணியை ராஜ் அணி வென்றது.

திலீப் குமாருக்கு பெருமளவில் மக்கள் ஆதரவு இருந்தை என்னால் முதலில் நம்பவே முடியவில்லை என்றார் பத்திரிகையாளரும் அவரது வாழ்க்கை வரலாறை எழுதியவருமான பன்னி ரூபன். 1970ல் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக திலீப், தான்ஸானியா சென்றபோது நானும் கூட சென்றேன். அவருக்கு கிடைத்த வரவேற்பை பார்த்து அதிர்ந்துபோனேன். தார்-எஸ்-சலாம் விமானநிலையத்தில் அவரை வரவேற்க மக்கள்கூட்டம் திரண்டிருந்தது. விமான நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளிலும் மக்கள் கூட்டம் இருந்தது. 1957ம் ஆண்டு கொல்கத்தாவில் ''நயா தர்'' படத்தின் பிரத்யேக காட்சிக்காக கிராண்ட் ஹோட்டலில் இருந்து தியேட்டருக்குச் செல்ல அவர் சிறிது தூரம் பயணிக்க வேண்டியிருந்தது. வழிநெடுக திரண்டிருந்த ரசிகர்கள் கூட்டம், அவரை மகிழ்ச்சி, ஆரவாரத்துடன் காரிலிருந்து தூக்கிச் சென்று தியேட்டரில் விட்டனர்.


நிஜ வாழ்க்கையில் திலீப் நகைச் சுவை உணர்வு கொண்டவர் என்கிறார் சைராபானு. மோனிகா ஓ மை டார்லிங் பாடலுக்கு ஹெலன் ஆடும் நடனத்தை அப்படியே பிரதிபலித்து நடித்துக் காட்டுவார். ஜனக் ஜனக் பாயா பாஜேவில் கோபி கிருஷ்ணா நடனத்தை அப்படியே நடித்துக் காட்டுவார். ஒரு சந்தர்ப்பத்தில் கோபி கிருஷ்ணா முன்னிலையே இதை செய்துகாட்டியுள்ளார்.



உறவினர்களிடம் சைரா பானுவைப் போல் நடித்துக்காட்டுவார்.

பஞ்சாபி பதானான திலீப்குமார், நல்ல தரமான உணவுகளை விரும்பிச் சாப்பிடுவார். 1995ம் ஆண்டில் ஸ்கிரீன் பத்திரிகை தனது சொந்த விருதுகளை வழங்க விரும்பியது. விருதுக் குழுவின் தலைவராக திலீப் அழைக்கப்பட்டார். ஒரு நிபந்தனையுடன் அவர் ஒப்புக் கொண்டார். அதாவது அவர் கொடுக்கும் இடைவேளை சிற்றுண்டி பட்டியலை ஏற்கவேண்டும். ஸ்கிரீன் அவர் கொடுத்த பட்டியலை அப்படியே ஏற்றுக் கொண்டது. ஆனால், சிற்றுண்டிகள் திலீப்-சைராபானு சமையலறையிலிருந்து வந்தன.

திலீப் குமார், மற்றவர்கள் நலனில் அக்கறை செலுத்துபவர் என்று திரைப்பிரபலங்கள் பலரும் குறிப்பிடுகின்றனர். ஒருமுறை நான் மனக்கலக்கத்தில் இருந்தபோது திலீப் என்னை ஸ்டுடியோவிலிருந்து நேராக கண்டலாவுக்கு அழைத்துச் சென்று மூன்று நாள்கள் தனிமைப்படுத்தி வைத்திருந்தார். எந்த வேலையும் இல்லை. வேடிக்கையான பேச்சும் கிரிக்கெட்டும்தான் பொழுதுபோக்கு. மூன்று நாள் கழித்து மும்பை வந்தபோது முற்றிலும் மாறுபட்ட மனிதராக பதற்றம் இல்லாமல் இருந்தேன் என்றார் ரிஷிகேஷ் முகர்ஜி.



*இயக்குனர் பிமல் ராயுடன்.*



*தேவ்தாஸ் படத்தில் சுசித்ரா சென்னுடன்.*

1988ல் ராஜ்கபூர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அப்போது தான் திலீப் பாகிஸ்தானிலிருந்து மும்பை வந்திருந்தார். உடனே அவர் தில்லிக்கு சென்று அப்பல்லோ மருத்துவமனையில் ராஜ்கபூரைப் பார்த்து தேம்பி தேம்பி அழுதார் என்று ரிஷிகபூர் தனது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார்.

திலீப்குமாரின் நெருங்கிய நண்பர் சுனீல்தத். அவர் சொல்கிறார். திலீப் மும்பை மாநகர ஷெரீப்பாக இருந்தபோது ஒவ்வொரு ஆண்டும் நிதி திரட்டுவதற்காக ரயில் பயணத்தை நடத்தினார். அப்போது ஒவ்வொரு பெட்டியாகச் சென்று பயணிகளுடன் உரையாடினார். பள்ளிகள், மருத்துவமனைக்குத் தேவையான விலைஉயர்ந்த கருவிகள் வாங்குவது. தோட்டங்கள், பூங்காக்கள் அமைப்பது, ஜாக்கிங் செய்பவர்களுக்கான பூங்கா, பாந்த்ராவில் பாண்ட் ஸ்டாண்ட் என பல நல்ல காரியங்களுக்காக ஷெரீப் என்ற முறையில் நிதி திரட்டித்தந்து உதவியுள்ளார். எல்லையில் காவல் பணியில் இருக்கும் துருப்புகளை நேரில் சந்தித்துடன் அவர்களை மகிழ்விக்க சில நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார் என்றார்.

திலீப், உருது மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேசக்கூடியவர். 1974ம் ஆண்டு லண்டன் ராயல் ஆல்பர்ட் அரங்கில் லதா மங்கேஷ்கர் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசிய திலீப்குமார், லதா ஒரு இசைப் பல்கலைக்கழகம், அவரது இனிமையான பாட்டு, மணம் வீசும் பூக்கள், ஓடையிலிருந்து வழியும் நீர், மலைப்பகுதியில் வீசும் காற்று, சூரியனைப் போன்ற பிரகாசம், குழந்தையின் அழகிய சிரிப்புக்கு ஒப்பானது என்றார். அவரது பேச்சைக் கேட்ட லதா, திகைத்து நின்றார்.

திலீப்குமார் உடல் நலமில்லாமல் இருந்தபோது அவரை சந்தித்த லதா, திலீப்பின் லண்டன் பேச்சை நினைவுபடுத்தினார். திலீப் அதை மகிழ்ச்சியுடன் கேட்டதாக லதா கூறினார்.

கட்டுரையாளர் RC மெட்ராஸ் சவுத் உறுப்பினர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# புதிதாகப் பொறுப்பேற்ற ஆளுநர்கள் சவாலுக்குத் தயார்!

V முத்துகுமரன்

**DG பங்கஜ் ஷா — 3131**

நாம் ஒன்றாகச் சேர்ந்து சக்கரத்தைச் சுழற்றுவோம், மனித குலத்தின் செழிப்புக்காக நம் கைகள், இதயம், ஆன்மாவால் பணி புரிவோம். வாழ்க்கைகளை மாற்றுவதற்குச் சேவை புரியும் ஆற்றல், மந்திரம் நம்மிடம் உள்ளது,'' என்றார் தலைவர் சேகர் மேத்தா. DG பங்கஜ் ஷா, RID 3131ன் பொறுப்பேற்பு நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு பேசினார்.

ஷா, சங்கத் தலைவர்கள் பெரிய இலக்குகளை அமைக்கவேண்டும், மிகப் பெரிய திட்டங்களை நிறை வேற்றவேண்டும், இந்த ஆண்டை அவர்களுடைய வாழ்க்கையின் மிகச் சிறந்த ஒன்றாக ஆக்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். உறுப்பினர் எண்ணிக்கை, சேவைத் திட்டங்கள் ஆகிய இரண்டிலும் நம் பகுதிகள் RIன் வைரங்கள் ஆகும்; ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அழைத்துவாருங்கள் என்பதைச் சங்கங்கள் ஏற்றுக்கொண்டு பணியாற்றினால், இந்த ரோட்டரி ஆண்டில் நாம் குறைந்தது 40-50,000 புதிய உறுப்பினர்களைச் சேர்க்க லாம்'' என்று அவர் தொடர்ந்து கூறினார். ரோட்டரி அறக்கட்டளையின் ஆண்டு வருவாய் சுமார் $10 மில்லியன் ஆகும், ஒவ்வோர் உறுப்பினரும் இன்னொருவரை அழைத்துவந்தால்தான் இதை இருமடங்காக்கலாம்.

இது கண்டிப்பாக மிகச் சிறந்த நேரம் இல்லை. ஆனால், IPDG ராஷ்மி குல்கர்னி ரூ 50 கோடி மதிப்புள்ள சேவைத் திட்டங்களை நிறைவேற்றி இதை மிக நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார். பகுதிகளில் மிகப் பெரிய எண்ணிக்கையிலான மெய்நிகர் இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சிகளை நடத்தியதற்காக மேத்தா அவரைப் பாராட்டினார். RID Dr மகேஷ் கோட்பாகி RIன் சமீபத்திய மந்திரமான DEI (பன்முகத்தன்மை, சமநிலை, உள்ளடக்குதல்) பற்றிப் பேசிய அவர், எந்த வடிவிலான இட ஒதுக்கீட்டையும் தான் ஏற்கவில்லை என்றார்.

TRF வழங்கலைப் பொறுத்தவரை, இவருடைய இலக்கு $2 மில்லியன் (சென்ற ஆண்டு $1.75 மில்லியன்). நாங்கள் கண்டிப்பாகக் குறைந்தது நான்கு AKS உறுப்பினர்கள், 30 Major Donorகளைப் பெறுவோம். இந்த ஆண்டு நிறைவுக்குள் எங்கள் சங்கங்களில் பாதிக்குமேல் 100% அறக்கட்டளை நன்கொடையாளர் சங்கங்களாக ஆகும்'' என்றார் ஷா.

இந்த ஆண்டு, பல திட்டங்களுக் காகச் சுமார் 14 பெருநிறுவனங்கள் ரூ.5 கோடிக்குமேல் CSR நிதியைப் பங்களிக்கும். ஒரு சிறப்பு முன்னெடுப்பின் கீழ், ராணுவத்தின்

*RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் ராஷி DG பங்கஜ் ஷாவிடம் ISO சான்றிதழ் வழங்குகிறார். RID மகேஷ் கோட்பாகி (இடது), அவர் மனைவி அமீதா, PDGs வினய் குல்கர்னி, ராஷ்மி குல்கர்னி, DGE அனில் பர்மர், அவர் மனைவி ஹேமா, PDGs Dr ஷைலேஷ் பலேக்கர் மற்றும் தீபக் ஷிகார்பூர் ஆகியோரும் உடன் உள்ளனர்.*



உதவியுடன் நாங்கள் சியாச்செனில் ஓர் ஆக்சிஜன் உருவாக்க ஆலையை அமைக்கவுள்ளோம் என்றார் ஷா.

IPDG ராஷ்மி குல்கர்ணி பேசுகையில், தான் இப்போது 5,000 ஹெக்டேர் நிலம் நீர்நிலை மேலாண்மையின் கீழ் கொண்டு வரப் பட்டுள்ளன; அவருடைய ஆண்டின் போது 10,000 கண்புரை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன என்றார்.

சென்ற ஆண்டில் 4 மில்லியன் மதிப்புள்ள 50க்கும் மேற்பட்ட GG திட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் முக்கியமாகச் சுட்டிக் காண்பிக்க வேண்டியவை, 35,000 பலன் பெறு வோருக்கான 350 e-RYLAகள் மற்றும் 10 தனி நபர்கள், 15 குழுக்களுடன் RID 3131 நடத்திய e-NGSE.

RID 3131ன் நிர்வாகச் செயல் முறைகள் தணிக்கை செய்யப்பட்டு ஓர் ISO சான்றிதழ் (ISO 9001:2015) வழங்கப்பட்டது, அதை மேத்தா திறந்துவைத்தார். DRR பார்த் ஜாவ்கர், நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய RC புணே சரஸ்பௌக் தலைவர் ராஜேந்திர சடல்கர் ஆகியோர் மேத்தாவிடமிருந்து நிறுவல் கழுத்துப் பட்டையைப் பெற்றார்கள்.



RID 2981 DG S *பாலாஜி மற்றும் அவர் மனைவி ஜெயஸ்ரீ* TRF*க்கு* ₹1 *கோடி* ARFC R *வாசுவிடம் வழங்குகிறார்.* IPDG R *பாலாஜி பாபு மற்றும்* PDG P S *ரமேஷ் பாபு ஆகியோரும் உடன் உள்ளனர்.*

### S பாலாஜி — 2981

உங்கள் வாழ்க்கைக்கு ஒரு பேலன்ஸ் ஷீட் உருவாக்குங்கள், இடப்பக்கம் உங்கள் பெற்றோர், சமூகத்திடமிருந்து நீங்கள் பெற்ற அனைத்து அன்பு, அக்கறை, கல்வி, ஊட்டத்தையும் வையுங்கள், வலப்பக்கம் நீ ங்கள் பதிலுக்குத் திருப்பி அளித்த விஷயங்களைப் பட்டியலிடுங்கள். இரண்டு பக்கங்களும் சமமாக இருக்க வேண்டும். ஆனால், ஒரு பட்டயக் கணக்காளர் என்றமுறையில், என் வாழ்க்கையில் அந்தச் சமநிலை இல்லை என்று நான் உணர்கிறேன். அதாவது, இடப்பக்கம் கூடுதல் விஷயங்கள் உள்ளன, நான் இன்னும் செய்யவேண்டும். உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் நடுவிலான இடைவெளியை நிரப்புவதற்கு ரோட்டரி உழைக்கும் இந்த நேரத்தில், ரோட்டரியன்களும் இதேபோன்ற ஒரு சமநிலைத் தாளைக் காண்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்'' என்றார் RI தலைவர் சேகர் மேத்தா.

DG S பாலாஜி, RID 2981ன் நிறுவலில் ஜூம் தளத்தின் வழியாகப் பேசிய அவர், மாவட்டச் சங்கங்கள் “இன்னும் வளர்ந்து இன்னும் செய்ய வேண்டும்”என்று அறிவுறுத்தினார். பாலாஜி TRFக்கு ரூ.1 கோடி பங்களித்தார். புதுச்சேரியைச் சேர்ந்த, ரோட்டரியன் அல்லாத, 93 வயது Dr N சீதா ராமன், மருத்துவ மனைகளில் நவீன வசதிகளை நிறுவுவதற்காக அறக்கட்டளைக்கு ரூ.50 லட்சம் நன்கொடை அளித்தார். ராசு தேவர் என்ற தனி நபர், தன்னுடைய மறைவுக்குப்பின் ரூ.1 கோடி மதிப்புள்ள தன்னுடைய வீட்டைப் பள்ளிகளுக்குக் கல்வி உதவிப்பொருட்களை வழங்கு வதற்காக RC கும்பகோணத்துக்கு வழங்குவதாக உயில் எழுதினார். 22 AGக்களில் பத்து பேர் மிகப் பெரிய நன்கொடையாளர்களாக ஆகத் தீர்மானித்துள்ளார்கள்.

பாலாஜி பேசுகையில், ஒவ்வொரு சங்கமும் பின்தங்கிய ஒரு கிராமத்தைத் தத்தெடுக்கும், குறைந்தது 128 குக்கிராமங்களில் கிராமப்புறக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் என்றார். நான் எட்டுப் பார்வை மையங்களைத் திறக்கத் திட்டமிடுகிறேன்; இவை 500,000 மக்களுக்குத் தவிர்க்கக் கூடிய பார்வையிழப்புப் பரிசோதனைகளை நடத்தும் என்றார் இவர். DG பாலாஜி, அவருடைய துணைவி ஜெயஸ்ரீ, மகள் Rtr தீபிகா, மகன் இன்டராக்டர் ரோகித் கிருஷ்ணா ஆகியோரை மாவட்ட அலுவலர்கள் பாராட்டினார்கள்.



RID 3232 DG J *ஸ்ரீதர் மற்றும் அவர் மனைவி புனிதா ஆகியோருக்கு* IPDG S *முத்து பழனியப்பன் மற்றும் அவர் மனைவி கமலா மலர் கொத்து வழங்குகின்றனர்.*

### கௌரிஷ் தௌண்ட் — 3170

பனாஜியில் நடைபெற்ற ஒரு பெரிய நிகழ்ச்சியில், பிரபலமான சமூக

ஊழியர் கௌரிஷ் தௌண்ட் அவர்களை RID 3170 ஆளுநராக RID Dr மகேஷ் கோட்பாகி நிறுவினார்.

பல பத்தாண்டுகளாகத் தௌண்ட் சமூகத்துக்கு வழங்கிய சேவையைத் தான் நெருக்கத்திலிருந்து பார்த்துள்ளதாகக் கோட்பாகி கூறினார், அத்துடன், IPDG சங்க்ரம் படீலைச் சென்ற ஆண்டு ஆளுநராக அவருடைய மிகச் சிறந்த பணிக்காகப் பாராட்டினார். ஏழு கவனப் பகுதிகளின்கீழ் தான் நடத்தவிருக்கும் சில முக்கியத் திட்டங்களைத் தௌண்ட் சுட்டிக் காண்பித்தார்.



*RID மகேஷ் கோட்பாகி (இடதிலிருந்து 2வது), RID 3170 DG கௌரீஷ் தௌண்ட் மற்றும் அவர் மனைவி ப்ரதீமா தௌண்ட் ஆகியோருடன் IPDG சங்ராம் பாட்டீல் அவர்களும் உள்ளனர்.*

### DG J ஸ்ரீதர் — 3232

மாநகராட்சி அமைப்புடன் இணைந்து செய்யும் பல முன்னெடுப்புகளின் வழியாகச் சென்னையை ஒரு பெருமை நகரமாக ஆக்குதல், சேவை வாய்ப்புகளின் வழியாக நோய்ப் பரவல் நேரங்களில் சமூகங்களுக்கு அடிப்படைப் பொருட்களை வழங்குதல் மற்றும் நீடித்த திட்டங்களை நடத்துதல் ஆகியவை RID 3232ல் இருக்கும் சங்கங்களுக்கான முக்கியத்துவப் பகுதிகளாக இருக்கும் என்றார் DG J ஸ்ரீதர். ஒரு வண்ண மயமான, சிறந்த நிறுவல் நிகழ்ச்சியில் பொறுப்பேற்ற பின் கூறினார்.

RID A S வெங்கடேஷ் இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார், இப்போதைய ஆண்டின் கருப் பொருளுடன் பொருந்தும் குறிப்புகள் நிறைந்த தன்னுடைய தனித்துவமான பாணியில் பார்வையாளர்களிடையில் பேசினார். அதற்குமுன், IPDG S முத்துப்பழனியப்பன் தன்னுடைய தொடக்க உரையில், தன்னுடைய பதவிக்காலத்தில் தொடங்கப்பட்ட ஆரஞ்சுத் திட்டம், மாவட்டம் முழுவதும் கோவிட் நேர உதவிச் செயல்பாடுகள் போன்ற சில அடையாளத் திட்டங்களை நினைவு கூர்ந்தார். மாவட்ட பயிற்சியாளர் PDG J B காம்தர் மற்றும் மாவட்ட அறிவுரையாளர் PDG Sv Rm ராமநாதன் ஆகியோரும் இந்த நிகழ்ச்சியில் பேசினார்கள். DGE Dr நந்தகுமார் மற்றும் DGN ரவிராமன் ஆகியோரும் கலந்துகொண்டார்கள். மாவட்டச் செயலாளர் R ரவி சங்கர் நன்றி உரை வழங்கினார். ■

---

Rotary
PEOPLE OF ACTION

## RC சுனாமின் புத்தாண்டு துவக்கம்

ரோட்டரி செய்திக்குழு

புதிய ரோட்டரி ஆண்டை நல்ல விதமாகத் தொடங்கும் வகையில், பசுக் காப்பகத்துக்குத் தீவனம், வெல்லத்தை நன்கொடையாக வழங்கியது RC சுனாம், RID 3090. இச்சங்கம் இளைஞர்களுக்கான புதிய ரோட்டராக்ட் சங்கத்தையும் பதிவு செய்துள்ளது. இளைஞர்களிடையே தலைமைப் பண்புகள், தொழில்முறைத் திறமைகளை மேம்படுத்துவது, உறவுகளைக் கட்டமைக்கவும், சேவையின் வழியாக மகிழ்ச்சியைக் கண்டறிந்து உதவுவது ஆகியவற்றை நாங்கள் இலக்காகக் கொண்டுள்ளோம்'' என்று கூறும் இச்சங்கத்தின் தலைவர் ஜக்ஜித் சிங் ஜௌரா, இளம் தொழில்முறை வல்லுனர்கள், சமூகத்தலைவர்கள், தொழில் துறையினர், மாணவர்களை நன்மை செய்வதன் பக்கம் ஈர்த்து ரோட்டரி குடும்பத்தை விரிவாக்க இயலும்'' என நம்புகிறார்.

முன்பை விட இப்போது தான் சமூகத்தில் இளம் தொழில் வல்லுனர்களுக்குப் பெரிய தேவை உள்ளது. அவர்கள் ஒருவரோடு ஒருவர் வலுவான பிணைப்புகளைக் கட்டமைத்துக் கொண்டு, சமூகத்துக்குத் திரும்பத் தர வேண்டும் என்றார் RAC சுனாம் ஷைன் என்கிற இப்புதிய சங்கத்தின் உருவாக்கத்துக்கு முக்கியப் பங்காற்றிய நவீன் கார்க், உறுப்பினர்கள் 21 மருத்துவர்கள், 7 தணிக்கையாளர்களைப் பெருமைப்படுத்தி மருத்துவர்கள் நாள், பட்டயக்கணக்காளர்கள் நாளைக் கொண்டாடினார்கள். ■



# மும்பையில் கொரோனா வீரர்களுக்கு ரோட்டரியின் நினைவுச் சின்னம்

ரோட்டரி செய்திக்குழு

தொற்றுக்காலத்தின் போது, நேரம், காலம் பார்க்காமல் அயராது சேவையாற்றியவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக RID 3141க்கு உட்பட்ட மும்பை ஏர்போர்ட் ரோட்டரி சங்கம், பாந்த்ரா மேற்கில் ஒரு எரிபொருள் விற்பனை நிலையத்தில் நினைவுச் சின்னம் எழுப்பியுள்ளது. ஒரு பீடத்தின் மீது கருப்புநிற கிரானைட் கற்களால் முன்களப் பணியாளர்களான மருத்துவர், செவிலியர், போலீஸ்காரர், சுகாதார ஊழியர், பத்திரிகையாளர் மற்றும் பொறியாளர் ஆகிய 6 பேரின் சிற்பங்களை நிறுவியுள்ளது.



*சங்கத்தலைவர் நிதின் மேத்தா காவல்துறையினர் ஒருவரை கௌரவிக்கிறார்.*

நினைவுச் சின்னம் ஏற்படுத்துவதற்கான கருத்தை உருவாக்கியவர் சங்கத்தின் தலைவர் நிதின் மேத்தா. இதை வடிவமைத்தவர் ரோட்டேரியனும் பிரபல ஓவியருமான மினாலி தக்கர். திட்ட இயக்குநர் ராகுல் படேல், பணிகளை மேற்பார்வையிட்டார். சிற்பத்தில் உள்ள பூகோளம் பூமியைக் குறிக்கும், மனித கைகள் வைரஸை எதிர்க்கும் போராட்டத்தில் ஒற்றுமையுடன் பங்களிப்பதைக் குறிக்கும். ஒவ்வொரு கொரோனா வீரர்களுக்கும் பின்னால் உள்ள இலை, நாங்கள் "வாழ்க்கையின் பாதுகாவலர்கள்" என்று சொல்லாமல் சொல்லுகிறது. கொரோனா வீரர்களின் சிற்பங்களின் கீழே "Thank You" மற்றும் "Salute You" என்று சர்வதேச மற்றும் பிராந்திய மொழிகளில் எஃகு தகடுகளில் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆறுவிதமான வண்ணங்களில் உருவாக்கப்பட்ட கொரோனா வீரர்களின் மீது ஒளிரும் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. 1500 கிலோ எடைகொண்ட சிற்பங்களுக்கு வலுவூட்டும் வகையிலும், அவரை பிரகாசமாக காட்சியளிக்கவும் கண்ணாடி இழையிலான சிமெண்ட் மற்றும் எஃகு தகடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த திட்டம் உருவான நாளிலிருந்து இதை நிறுவுவதற்கு 14 மாதங்கள் ஆயின. உறுப்பினர்களின் பங்களிப்பு மூலம் இதற்காக ரூ.22 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. மாவட்ட ஆளுநர் சுனில் மெஹ்ரா, சங்கத்தின் செயலர் மேத்தா முன்னிலையில் இந்த நினைவுச் சின்னத்தை பாந்த்ரா மேற்கு சட்டப்பேரவை உறுப்பினர் ஆஷிஷ் ஷெலார் திறந்துவைத்தார். அபூர்வா படேல் மற்றும் இதர ரோட்டரி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கொரோனா வீரர்கள் சிலருக்கு சங்கத்தின் சார்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.■



*நினைவுச் சின்னம் முன் DG சுனில் மேஹ்ரா, சங்கத்தலைவர் நிதின் மேத்தா, சட்டப் பேரவை உறுப்பினர் ஆஷிஷ் ஷெலார் மற்றும் சங்கத்தினர்.*

# ரோட்டேரியன்களின் தொடரும் "கோவிட்" நிவாரணப் பணிகள்

V முத்துகுமரன்

கோவிட் தொற்றின் இரண்டாவது அலையின் போது, நான்கு மண்டலங்களைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் நோயாளிகளுக்கு மருத்துவமனையில் படுக்கைகள் கிடைக்க உதவுவது, வீட்டுத் தனிமையில் உள்ளவர்களுக்கு ஆக்சிஜன் செறிவூட்டிகள் வழங்குவது என பல்வேறு கோவிட் நிவாரணப் பணிகளில் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டனர். ஏனெனில் பொது முடக்கம் காரணமாக பல்வேறு மாநிலங்களில் பாதிக்கப்பட்டது ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்கள்தான்.

### RC பாவ்நகர், RID 3060

பாவ்நகர் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த 10 பேர் கொண்ட திட்டக் குழுவினர், ரூ.25 லட்சம் மதிப்பில் 25 நோயாளிகள் சிகிச்சை பெறும் வகையில் கோவிட் சிகிச்சை மையத்தை ஏற்படுத்தினர். மருத்துவ ஆலோசனை, ஆக்சிஜன், உணவு எல்லாமே நோயாளி களுக்கு இலவசம். மருந்து, மாத்திரைகள் மற்றும் பரிசோதனைக் கட்டணத்தை மட்டும் நோயாளிகளிடம் பெற்றுக்கொண்டோம் என்றார் சங்கத்தின் முன்னாள் தலைவர் மணீஷ் கோத்தாரி.

எங்கள் சங்கத்தால் இதைச் செய்ய முடியும். இந்தியா மற்றும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்பெயின் உள்ளிட்ட வெளிநாடு களில் உள்ள ரோட்டரியினர், நன்கொடையாளர்கள் தாராளமாக நன்கொடை வழங்கியதால் இது சாத்தியமாயிற்று என்றார் கோத்தாரி. கோவிட் தொற்று பரவல் வெகுவாகக் குறைந்ததால் சிகிச்சை மையம் கடந்த மே 28 ஆம் தேதி மூடப்பட்டது. இந்த மையத்தில் 130 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். அவர்களுக்கான செலவு ரூ.25 லட்சம். அவையும் தனிப்பட்ட நபர்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடை மூலம் செலவிடப் பட்டது. இந்த மையத்துக்காக 20,000 சதுர அடி பரப்புள்ள இடத்தை பவநகரில் உள்ள ஞானமஞ்சரி கல்லூரிக் குழுமத்தினர் இலவசமாக வழங்கியிருந்தனர்.

மருத்துவர்கள், செவிலியர்கள், நிர்வாகத்தினர், தூய்மைப் பணியாளர்கள், பாதுகாவலர்கள் ஆகியோருக்கு ஊதியமாக மாதம் ரூ.5 லட்சம் செலவானது. அதையும் சங்கம் ஏற்றுக் கொண்டது என்றார் கோத்தாரி.



*RC பாண்டிச்சேரி போர்ட்டின் கோவிட் நிவாரணப் பணி.*



*மாநகராட்சி ஆணையர் கௌரவ் குப்தா ரோட்டரி பெங்களூரு வெஸ்ட்–ன் 100 ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை துவக்கி வைக்கிறார்.*

### RC மைசூர், RID 3181

18 ஆக்சிஜன் செறிவூட்டிகள் மற்றும் ஆக்சிஜன் வசதி பொருத்தப்பட்ட இரண்டு ஆம்புலன்ஸ் வாகனங்கள் ரோட்டரி ஆக்ஸி வங்கி சங்கம்

மூலம் ஏற்படுத்தப்பட்டது. 'மை சேவா டிரஸ்ட்' என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் ஆம்புலன்ஸ் வாகனங்களையும், 15 ஆக்சிஜன் செறிவூட்டிகளையும் நன்கொடையாக வழங்கியது. அமெரிக்காவில், கலிபோர்னியாவில் உள்ள வாஸவி சேவா அறக்கட்டளை, ரோட்டேரியன்கள் சிவப்பிரசாத் மற்றும் ஜாக்கப் ஜேம்ஸ் ஆகியோர் மீதமுள்ள ஆக்சிஜன் செறிவூட்டிகளை வழங்கினார்கள்.



சங்க அலுவலகத்தில் தொலைத்தொடர்பு சாதன இணைப்புகளுடன் கோவிட் தகவல் மையம் ஏற்படுத்தப்பட்டது. இந்த மையத்தில் மருத்து வர்கள் குழுவினரும், தன்னார்வலர்களும் தினமும் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை ஆலோசனைகள் மற்றும் உதவிகளை வழங்கினர்.

அயர்லாந்திலிருந்து மருத்துவர் குழுவினர் எங்களுடன் இணைந்து நோயாளிகளுக்குத் தேவையான ஆலோசனைகளைக் கூறி உதவி னார்கள். ஜூன் முதல் வாரம் வரை 2,500 அழைப்பு களுக்கு மருத்துவர்கள் ஆலோசனைகள் வழங்கினர் என்றார் DG M ரங்கநாத் பட்.

வீட்டுத்தனிமையில் இருந்த நோயாளிகளுக்கு மாநகராட்சி ஆதரவுடன் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மளிகைப் பொருள்கள் அடங்கிய பொதிகள் விநியோகிக்கப் பட்டன. சங்கம் இதர தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து குடிசை வாசிகள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு தினமும் உணவு அளித்து வருகின்றனர். மைசூரை சுற்றி ஏற்படுத்தப்பட்டுள்ள 'கோவிட் மித்ரா'க்களுடன் இணைந்து ரோட்டேரியன்கள் செயல்பட்டனர். நோய் அறிகுறி தென்பட்டவர் களுக்கு இவர்கள் முன்கூட்டியே ஆலோசனைகள் கூறிவந்துள்ளனர்.

மூன்றாவது அலை வரலாம் என்ற சூழலில், தொற்று நோய் பற்றிய விழிப்புணர்வு வீடியோ பிரசாரத்தை கன்னடம் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரித்து வெளியிட்டுள்ளோம். 40,000 குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு தொற்று நோய் பீதியை போக்கும் வகையிலும் அதனை எதிர்கொள்வது எப்படி என்றும் விளக்கியுள்ளோம் என்றார் பட்.

## RC சந்திரபூர், RID 3030

பொது முடக்க காலத்தில் ஒரு மாதத்துக்கு தினசரி சுமார் 100 உணவுப் பொட்டலங்கள் தயாரித்து உள்ளூர் மருத்துவமனைகளில் இருக்கும் நோயாளிகளின் உறவி னர்கள், சாலையோரவாசிகள், குடிசைவாசிகள் மற்றும் ஏழை குடும்பத்தினருக்கு வழங்கினர்.

## RC மாண்ட்வி, RID 3054

மாண்ட்வியில் உள்ள இரு கோவிட் சிகிச்சை மையமங்கள், கத்ஷிஷா கிராமத்தில் உள்ள ஒரு கோவிட் சிகிச்சை மையம் மற்றும் 8 பொது சுகாதார நிலையங்களுக்கு 50 பல்ஸ் ஆக்சிமீட்டர்கள், 500 N-95 முககவசங்கள், 200 சுவாச ஆவியாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. கோவிட் நிவாரணப்பணிகள் திட்டத் தலைவர் தர்ஷணா ஷா தலைமையில் நடை பெற்றது.

தாலுகா சுகாதார அதிகாரி மற்றும் அனைத்து பொது சுகாதார மையங்களைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகளும் கௌரவிக்கப் பட்டனர். அரசு போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்துகளின் குழுவினர், தள்ளுவண்டிக்காரர்கள், ரிக்‌ஷா தொழிலாளர்கள் ஆகியோருக்கு மூன்று லேயர்கள் கொண்ட சுமார் 1,000 முகக் கவசங்கள் வழங்கப்பட்டன.



*இலங்கை அகதிகளுக்கு மளிகை பொருட்களை அளிக்கும் RC நாகர்கோவில் சவத்.*

புஜ்ஜில் செயல்பட்டு வரும் போஃகியா அறக்கட்டளை, வீட்டுத்தனிமையில் இருப்பவர் களுக்கு உதவுவதற்காக இரண்டு ஆக்சிஜன் செறிவூட்டிகளை சங்கத்துக்கு நன்கொடையாக வழங்கியது. மேலும் மாதுஷ்ரீ ஜாவர்பென் சுனிலால் சங்வி குடும்ப அறக்கட்டளை மூன்று சானிடைசர் இயந்திரங்களை சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியிருந்தது. அவற்றை மாண்ட்வி நீதிமன்றம், S V கலை மற்றும் வணிகவியல் கல்லூரி மற்றும் C J மேத்தா தடுப்பூசி மையத்துக்கு வழங்கப்பட்டன. சங்கத்தின் தலைவர் பிரதீக் ஷா, செயலாளர் தர்ஷன் சச்சாடே இருவரும் PDG Dr ஹர்ஷத் உதேஷி வழிகாட்டுதல் பேரில்



*RC சந்திரபூர் உணவு பொட்டலங்களை அளிக்கின்றனர்.*

கோவிட் நிவாரணப் பணிகளைச் செயல்படுத்தினர்.

**RC பெரோஸ்பூர் கன்டோன்மென்ட், RID 3090**

DG விஜய் அரோரா, மாவட்டச் செயலர் அசோக் பெஹல், பெரோஸ்பூர் ரோட்டரி சங்கத் தலைவர் குல்தீப் சிங், செயலர் கமல் சர்மா முன்னிலையில் ஷ்ரீராம்பக் முதியோர் இல்லம் மற்றும் சேவை பார்மோ தர்ம டிரஸ்ட் இரண்டுக்கும் இரு ஆக்சிஜன் சிலிண்டர்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. கோவிட் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக உள்ளூர் சிவில் மருத்துவமனை மருத்துவக் குழுவினருக்கு ஒரு சிறிய செயற்கை சுவாசக்கருவி, இரண்டு புறஊதாக்கதிர் வெப்பமானிகள், 50 தனிநபர் பாதுகாப்பு உடைகள் மற்றும் 1,500 முகக்கவசங்கள் ஆகியவை சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்டது.

**RC அவுரங்காபாத், RID 3132**

அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் வீல்ஸ் குளோபல் பவுண்டேஷன், IIT முன்னாள் மாணவர்கள் குழு மூலம் ஷிவ யோக் அறக்கட்டளையுடன் சங்கம் இணைந்து 10 ஆக்சிஜன் செறிவூட்டிகளை கொள்முதல் செய்தது. இவை மகாராஷ்டிரத்தில் வீட்டுத் தனிமையில் உள்ள கோவிட் நோயாளிகளுக்கும், தொலைத்தூரங்களில் உள்ள கிராம மக்களுக்கும், 2 அடுக்கு, 3 அடுக்கு நகரப்பகுதிகளில் உள்ள மக்களுக்கும் வழங்கப்படும் என்றார் விநாயக் உபாத்யாய். வாஷிங்டனில் காப்புரிமை வழக்கறிஞராக இருப்பவரும், வீல்ஸ் குளோபல் உறுப்பினருமான அவரது மகன் ஆக்சிஜன் செறிவூட்டிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். சங்கத்தின் தலைவர் விஜய் ஜெய்ஸ்வால் மற்றும் செயலர் சமீர் கண்ட்கேட்கர் ஆகியோர் திட்டத்தை ஒருங்கிணைத்தனர்.




RC ரூர்கேளா ராயல் மளிகை பொருட்களை ஏழைகளுக்கு அளிக்கின்றனர்.

**RC பாம்பே பேவியூ, RID 3141**

சங்கத்தின் நிகழ்ச்சிகள் மூலம் ரூ.44 லட்சம் நிதி திரட்டி, 5,000 செவிலியர்களுக்கு ஊட்டச்சத்து பொருள்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டது. இது ஒவ்வொரு தொகுப்பிலும், ஒரு பிளாஸ்க், உலர் பழங்கள் மற்றும் ஊட்டச் சத்துகள் வைக்கப்பட்டிருந்தன என்றார் அவர்.

**RC புதுச்சேரி போர்ட், RID 2981**

நான்கு கிராமங்களில் உள்ள பொது சுகாதார மையங்கள் மற்றும் மகாத்மா காந்தி பட்டமேற்படிப்பு பல்மருத்துவக் கல்லூரிக்கு ரூ.14 லட்சம் மதிப்பில் மருத்துவ உபகரணங்கள், மருந்து, மாத்திரைகள், நுகர்பொருள்கள் வழங்கப்பட்டன. மேலும் சில சிறிய நிறுவனங்களுக்கும் கோவிட் மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டன.

ஆக்சிஜன் செறிவூட்டிகள், மின்சார ஊசிகள், வெப்பமானி, ஆக்சிமீட்டர்கள் ஆகியவை இதில் அடங்கும். நுகர் பொருள்களில் 2,000 N-95 முகக்கவசங்கள், 50,000 மூன்று லேயர் முகக் கவசங்கள், கையுறைகள் ஆகியவையும் நன்கொடையாக வழங்கப்பட்டன. போலீஸ் துறையினருக்கும் கோவிட் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன. சங்க உறுப்பினர்கள் சமீர் காம்ரா, ஸ்ரீகாந்த் சிவராமன், சுரேஷ் ஜலான், ஹஜிபாலால், சங்கத்தலைவர் நந்தகுமார் உள்ளிட்ட நான்கு பேர் கோவிட் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் மருந்து, மாத்திரைகளை




RID 3232வின் கோவிட் நிவாரணப்பணி.

வழங்குவதற்கான தாராள நிதிப்பங்களிப்பைச் செய்திருந்தனர்.

**RC பெங்களூரு வெஸ்ட், RID 3190**

ரூ.83 லட்சம் (116,000 டாலர்) பங்களிப்பு மூலம் கர்நாடகத்தில் உள்ள கோவிட் சிகிச்சை மையங்களுக்கு 100 ஆக்சிஜன் செறிவூட்டிகளை வழங்கியுள்ளது. அமெரிக்காவில் கோவிட் நிவாரணப்பணிகளில் ஈடுபட்டு வரும் வெளிநாடு வாழ் இந்தியர் அமைப்பான பிரகதி, ஆஸ்டின் ரோட்டரி சங்கம் (RID 5870), டெக்ஸாஸ் ரோட்டரி சங்கம் (RID 5870), அமெரிக்காவின் கீவே பேரிடர் நிவாரண நிதி, மலேசியாவின் பந்தர் சன்வே ரோட்டரி சங்கம் (RID 3300), இங்கிலாந்தின் மெர்தைர் டைட்ஃபில் ரோட்டரி சங்கம் (RID 1150), மின் கருவிகள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள 'அவ்மா இந்தியா' ஆகியவை இதற்க்கான பங்களிப்பைச் செய்துள்ளனர்.

மொத்தம் உள்ள 100 ஆக்சிஜன் செறிவூட்டிகளில் 70 பெங்களூரு மாநகராட்சி நடத்தி வரும் கோவிட் மையங்களுக்கும், மகப்பேறு மருத்துவ மனைக்கும் வழங்கப் பட்டது. இதற்கான நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையர் கௌரவ் குப்தா, PDG ராஜேந்திர ராய் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் முன்னிலையில் திட்டத்தை தொடங்கிவைத்தார்.



RC *சஹரான்பூர் கிளாஸிக் மக்களுக்கு உணவளிக்கின்றனர்.*

**RCD பெங்களூர் ஜங்ஷன், RID 3190**

எங்களது சங்கம், பெங்களூரில் உள்ள அகர்வால் சமாஜத்துடன் இணைந்து ஹோஸ்கர்ஹள்ளியில் BBMP நடத்தும் கோவிட் சிகிச்சை மையத்துக்கு 100 ஆக்சிஜன் டாங்க்குகள் வழங்க முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்காக சங்க உறுப் பினர்கள் ரூ.16.5 லட்சம் நிதிப் பங்களிப்புச் செய்துள்ளனர்.

சிக்கபல்லபூர் மாவட்டத்தில் 'ஆக்சிஜன் ஆன் வீல்ஸ்' திட்டத்தின் கீழ் ரூ.1.41 லட்சம் மதிப்பிலான ஆக்சிஜன் சிலிண்டர்கள் வழங்கும் திட்டத்தை இன்னர் வீல் சங்க உறுப்பினர்கள் நிறைவேற்றியுள்ளனர். வீட்டுத் தனிமையில் உள்ளவர்கள் மற்றும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறு பவர்களின் ஆக்சிஜன் தேவையைப் பூர்த்தி செய்ய ஆக்சிஜன் கொண்டு செல்லும் வகையில் பேருந்து ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

**RC சஹரான்பூர் கிளாஸிக், RID 3080**

பொது முடக்க காலத்தில் வார இறுதிநாட்களில் பிரபுஜி கி ரஸோய் என்ற தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் பசி தீர்ப்போம் திட்டத்தின் கீழ் 700 ஏழை குடும்பங்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டன என்றார் சங்கத்தின் தலைவர் சஞ்சய் மிதா. தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் ஆதரவுடன் சங்க உறுப்பினர்கள் தினமும் 250 உணவுப் பொட்டலங்களை மருத்துவ மனைகளில் காத்திருக்கும் கோவிட் நோயாளிகளின் குடும்பத் தினருக்கு வழங்கி வருகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**RC பொள்ளாச்சி, RID 3203**

தனிமைப்படுத்தப்பட்ட காலனியில் வசிக்கும் 120 குடும்பங்களுக்கு ரூ.2 லட்சம் மதிப்புள்ள மளிகைப் பொருள்களும், காய்கறிகளும் வழங்கப்பட்டன. பள்ளியில்



*வால்பாறை GH-யிற்கு படுக்கைகளை அளிக்கும் RC பொள்ளாச்சி உறுப்பினர்கள்.*

இயங்கி வந்த கோவிட் சிகிச்சை மையத்துக்கு ரூ.2.5 லட்சம் மதிப்புள்ள 100 படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணைகளை ரோட்டேரியன் ஹரிராஜ் நன்கொடையாக வழங்கினார். ரோட்டரி சங்கம், கோழிப்பண்ணை சங்கத்துடன் இணைந்து பொள்ளாச்சியில் உள்ள P A என்ஜினீயரிங் கல்லூரியில் அமைக்கப்பட்ட கோவிட் சிகிச்சை மையத்துக்கு ரூ.1 லட்சம் மதிப்பில் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மேலும் வால்பாறையில் உள்ள அரசு மருத்துவமனையில் கோவிட் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஆக்சிஜன் செறிவூட்டி, சக்கர நாற்காலி, படுக்கை விரிப்புகள், குளுகோமீட்டர், முகக்கேடயம், N95 முகக்கவசங்கள், கையுறைகள், ஆக்சிஜன் சிலிண்டர்கள், ஆக்ஸி மீட்டர், ஸ்டிரெச்சர், பிளாஸ்டிக் நாற்காலி உள்ளிட்ட ரூ.40 ஆயிரம் மதிப்புக்கான பொருள்கள் வழங்கப்பட்டன.



RC *மைசூர்-ன் ரோட்டரி ஆக்ஸி-பாங்க்.*

### RC ரூர்கேலா ராயல், RID 3261

எங்கள் சங்கம் தென்கிழக்கு ரயில்வே யுடன் இணைந்து பொது முடக்க காலத்தில் ரயில் நிலையத்தில் உள்ள சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு 40 கிலோ மளிகைப் பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கியது. இந்நிகழ்ச்சியில் சங்கத்தின் தலைவர் விகாஷ் அகர்வால், செயலர் யோகேஷ் பங்கா ஆகியோர் பங்கேற்றனர்.

### RID 3232

எங்கள் சங்கத்தின் சார்பில் ஏழை குடும்பங்களுக்கு தலா ரூ.1,000 மதிப்புள்ள மளிகைப்பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கப் படுகின்றன. ரூ.3 கோடி மதிப்பிலான இந்த உணவுப் பொருள்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 32,000 பேருக்கு உணவுப் பொருள் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. திட்டத் தலைவர் மகாவீர் போத்ரா வழிகாட்டுதல் பேரில் மாவட்டத்தில் உள்ள 85 சங்கங்களும் மொத்தம் 35,000 பேருக்கு இவற்றை வழங்க முடிவு செய்துள்ளன. ஒவ்வொரு பொதியிலும் அரிசி, பருப்பு, கோதுமை, மசாலா பொருள்கள், சமையல் எண்ணெய் ஆகியவை வைக்கப்பட்டிருந்தது. DG முத்து பழனியப்பனின் சென்னை சென்ட்ரல் ஆதித்யா ரோட்டரி சங்கம், இருளர் மற்றும் மீனவர்கள் குடும்பத்தினருக்கு உணவுப் பொருள்களை வழங்கியது. மலேசியாவில் உள்ள அவர்களின் சகோதர சங்கம், இந்த சங்கத்தின் செயல்பாடுகளை முகநூல் மூலம் பார்த்துவிட்டு ரூ.16.5 லட்சம் பங்களித்தனர். இதன் மூலம் மேலும் 3,500 உணவுப் பொதிகள் வாங்கப்பட்டன.


RC *மாண்ட்வியின் கோவிட் நிவாரணப்பணி.*

### RC நாகர்கோவில் சவுத், RID 3212

கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் கிராமத்தில் ஒரு முகாமில் அகதிகளாக வாழும் 192 குடும்பங்களுக்கு ரூ.57,700 மதிப்புள்ள மளிகைப் பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.■

# 100 அரசு மகிழ்ச்சிப் பள்ளிகள்! பெங்களூர் ஜங்ஷன் ரோட்டரியின் பெரு முயற்சி

ஜெய்ஸ்ரீ

பொது முடக்கம் மேலும் தளர்த்தப்பட்டு, பள்ளிகள் திறக்கப்பட்டால் பெங்களூரைச் சுற்றியுள்ள 100 அரசுப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள், தங்கள் பள்ளிக்குள் நுழையும்போது அவர்களுக்கு பெரும் ஆச்சரியம் காத்திருக்கிறது. ஆம் அவை இப்போது புதுப்பொலிவுடன், நவீன வசதிகளுடன் காட்சியளிக்கின்றன. இந்த பெரு முயற்சிக்குக் காரணம் RID 3190க்கு உட்பட்ட பெங்களூர் ஜங்ஷன் ரோட்டரி சங்கம் தான். எனவே அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

கடந்த ரோட்டரி ஆண்டில் (2020–21) இணையவழி கற்றலுக்குத் தேவையான வசதிகள், புத்தகங்கள் நிறைந்த நூலகங்கள், கைகழுவும் நிலையங்கள், ஆடவர், மகளிர்க்கு என தனித்தனி கழிப்பறைகள். மாணவர்களுக்குத் தேவையான அறிவியல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள், வகுப்பறைகளில் அலமாரிகள், மின்விசிறிகள் என பலவேறு வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டு, கட்டடங்கள் புதிய வண்ணப்பூச்சுடன் புதுப்பொலிவுடன் காட்சி தருகின்றன.

இந்த திட்டத்தை செயல் படுத்த எங்களை ஊக்கப்படுத்தியவர் PDG ராஜேந்திர ராய். அவரே எங்களுக்கு ஆரம்பத்திலிருந்து வழிகாட்டினார் என்றார் IPP வேலுபெதி. சீரமைக்கப்பட வேண்டிய பள்ளிகளை அடையாளம் காண 7 பேர் கொண்ட குழு உருவாக்கப்பட்டது.

மகிழ்ச்சிப் பள்ளிகள் திட்டத்துக்கான பங்களிப்பு 156 சங்கங்களிடமிருந்து பெறப்பட்டது. மொத்த திட்டச் செலவில் 10 சத வீதத்தை வேலுபெதி திரட்டினார். மெண்டா அறக்கட்டளை 20 சத வீத நிதியுதவியுடன் இணையவழி கற்றலுக்கான உபகரணங்களை வழங்கியது. நூலகங்களுக்கு புத்தகங்கள் வழங்குவதில் RILM உதவியாக இருந்தது. பல்வேறு தொண்டு நிறுவனங்களும், லார்சன் அண்ட் டூப்ரோ போன்ற கார்ப்பொரேட் நிறுவனங்களும் உதவிக்கரம் நீட்டினர்.



PDG ராஜேந்திர ராய் (வலது) மற்றும் RC பெங்களூர் ஜங்ஷன் முன்னாள் தலைவர் வேலுபெதி ஒரு பள்ளியில் இணைய வழி கற்றல் வசதியை துவக்கி வைக்கின்றனர்.



கடந்த ஏப்ரல் மாதம் ரோட்டரி இயக்குநரும், RILM இணை தலைவருமான மகேஷ் கோட்பாகி முன்னிலையில் RILM தலைவர், PRID கமல் சங்வி, மெய்நிகர் முறையில் புதுப்பொலிவு பெற்ற 100 பள்ளிகளையும் திறந்துவைத்தார். PRID பரத் பாண்ட்யா, அப்போது மாவட்ட ஆளுநராக இருந்த நாகேந்திர பிரசாத், DGN ஜீதேந்திர அனேஜா, PDGக்கள் ராஜேந்திர ராய், K P நாகேஷ், சத்ரு மெண்டா (மெண்டா அறக்கட்டளை), அரவிந்த் கர்க் (L&T), குழந்தைகளுக்கான லவ்கேஸில் டிரஸ்ட் நிறுவனர் பாக்யா ரங்காச்சார் மற்றும் இதர நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இந்த ஆண்டு எங்கள் சங்கம் மேலும் 100 பள்ளிகளை மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்ற தயாராகி வருகிறது. ஏற்கெனவே எங்களிடம் ரூ.16 லட்சம் தொகை இருப்பில் உள்ளது என்றார் வேலுபெதி.■

# விவசாயிகளுக்காக ரோட்டரி கட்டித்தந்த பாலம்

ஜெய்ஸ்ரீ

மகாராஷ்டிர மாநிலம், ஷெகாவன் தாலுகாவில் உள்ளது யெல்கேட் என்னும் குக்கிராமம். இங்கு 950 பேர் வசித்து வருகின்றனர். மக்கள் தொகையில் 70 சதவீதம் பேர் சிறு விவசாயிகள். உனாத்னாலா நீரோடையை ஒட்டி அமைந்துள்ள நிலத்தில் அவர்கள் சாகுபடி செய்து வருகின்றனர். ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கிராம மக்கள் மாட்டு வண்டியில் அந்த கரடு முரடான பாதை வழியாகத்தான் பாலத்தை கடந்து செல்கிறார்கள். இப்போது RID 3030க்கு உட்பட்ட RC ஷெகாவன், கிராம மக்களின் பயணத்தை எளிதாக்கும் வகையில் புதிய பாலத்தை கட்டிக் கொடுத்துள்ளது.

கடந்த ஆண்டு நாங்கள் இந்த குக்கிராமத்துக்கு சென்று பார்வையிட்டோம். விவசாயிகள் தங்கள் விவசாயக் கருவிகளுடன் மாட்டு வண்டியில் இந்த கரடு முரடான பாலத்தை கடந்து சென்றனர். பாலத்தை புதுப்பித்துத் தருமாறு அரசுக்கு பலமுறை மனுக்கள் கொடுத்தும் எந்த பலனும் இல்லை. கரடு முரடான பாதையில் செல்வதால் மாட்டு வண்டிக்கு சேதம் ஏற்படுவதுடன் மாடுகளுக்கு எலும்பு முறிவு மற்றும் காயங்கள் ஏற்படுவதாகவும் தெரிவித்தனர். வயதானவர்கள் இந்த பாதையில் நடந்து செல்லவே மிகவும் சிரமப்பட்டார்கள் என்றார் சங்கத்தின் முன்னாள் தலைவர் அனிருத் பால்டிவால். மழைக்காலத்தில் இந்த பாலத்தை பயன்படுத்தவே முடியாது. விவசாயிகள் பயிர்களை காக்க முடியாததால் அவை அழுகி பெரும் இழப்பை ஏற்படுத்தியது.

எனவே அந்த இடத்தில் ஒரு புதிய பாலம் அமைக்க பால்டிவால் தலைமையிலான சங்கம் முடிவு செய்தது. PDG மஹேஷ் மோகல்கர், தொழில்நுட்ப ஆதரவை வழங்கினார். பாலம் கட்டுமானப் பணிக்கான செலவு ரூ.3.5 லட்சத்தை முக்திலால் பால்டிவால் (அனிருத்தின் தாத்தா) ஏற்றுக் கொண்டார். அவர் ஷெகாவன் பகுதியில் தான் வசித்துவருகிறார். பாலம் கட்டுவதற்கான பணிகள் கடந்த மே மாதம் தொடங்கி ஜூன் மாதம் 10ம் தேதி புதிய பாலத்தை DGE ஆனந்த் ஜுன்ஜுன்வாலா திறந்து வைத்தார். பாலம் கட்டுமானப் பணிகளை அனிருத் பால்டிவால் விளக்கினார்.



*DGE ஆனந்த் ஜுன்ஜுன்வாலா, RC ஷெகாவன் IPP அனிருத் பால்டிவால், AG ராஜீவ் நதானி மற்றும் முன்னாள் செயலர் சச்சின் கடோடியா புதிய பாலத்தின் மீது செல்கின்றனர்.*

அந்த பாலம் 25 அடி நீளம், 20 அடி அகலம் என்ற வகையில் குறைந்த செலவில் சிமெண்ட் குழாய்களைப் பதித்து கட்டப்பட்டிருந்தது. அந்தப் பகுதியை முழுவதுமாக தோண்டியெடுத்தோம். பின்னர் அந்த கற்கள் மற்றும் பாறங்கற்கள் மூலம் 8 அங்குலத்துக்கு அடித்தளத்தை வலுப்படுத் தினோம். அதன் பின் 6 பெரிய சிமெண்ட் குழாய்கள் பதிக்கப்பட்டு இணைக்கப்பட்டன. பாலத்தின் இரு பகுதி களிலும் “சி” வடிவத்தில் சுற்றுச்சுவர்கள் எழுப்பப் பட்டன. பாலம் கட்டு மானம் முழுவதும் சிமெண்டால் பூசப்பட்டது. பாலம் போக்குவரத்துக்கு தயாரானது.



AG *ராஜீவ் நதானி,* DGE *ஆனந்த் ஜுன்ஜுன்வாலா, முக்திலால் பால்டிவால்,* IPP *அனிருத் பால்டிவால், மற்றும் சச்சின் கடோடியா.*

பாலம் கட்டுமானப் பணிகளில் கிராம மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். இறுதியில் பாலம் நல்லமுறையில் அமைந்தது குறித்து அனைவரும் மகிழ்ச்சி தெரிவித்தனர். வலுவாக கட்டப்பட்டுள்ள புதிய பாலம் குறைந்தது 15 வருடங்களுக்கு தாங்கும். இனி அந்த பாலத்தில் விவசாயிகள், மாட்டு வண்டி மட்டுமல்ல, டிராக்டரையே ஓட்டிச் செல்லலாம் என்றார் பால்டிவால்.■

# மருத்துவச் சேவைக்காக இணைந்து செயல்பட்ட UK, சென்னை ரோட்டரியன்கள்

ரோட்டரி செய்திக்குழு

UKவிலுள்ள இருபது ரோட்டரி சங்கங்கள் RC மெட்ராஸ் சென்னபட்னா, RID 3232 உடன் இணைந்து, கோவிட் நோயாளி களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக ரூ.20 லட்சம் மதிப்புள்ள 20 ஆக்சிஜன் செறிவூட்டிகள், பிற மருத்துவக் கருவிகளைச் சென்னை, பிற தமிழ்நாட்டு நகரங்களில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளுக்கு வழங்கினார்கள்.

UKவிலுள்ள RC ஐரெபரோ தலைவர் ராஜ்மணி, நிகழ்ச்சி நடத்தும் சங்க உறுப்பினர் ராமநாதன் நிதி திரட்டலை வழிநடத்தினார்கள். சென்னபட்னா சங்கம் தன் உறுப்பினர்களிடமிருந்தும் சென்னை நேஷனல் பப்ளிக் ஸ்கூல் முன்னாள் மாணவர்களிடமிருந்தும் ரூ.5 லட்சம் திரட்டியது. UK குடிமக்களுக்கு இந்தியாமீதுள்ள அன்பால், 19 ஆக்சிஜன் செறிவூட்டிகள், 800 PPE பொதிகள், 500 NRG முகமூடிகள், 450 கீழ்ப்பட்டைகள், N-95 முகமூடிகள், சக்கர நாற்காலிகள், கம் பூட்ஸ்ல், கை தூய்மைப்படுத்திகளைப் பரிசளித் தார்கள்” என்கிறார் ராஜ்மணி.

ஆக்சிஜன் செறிவூட்டிகள், மருத்து வக்கருவிகள் கோத்தகிரி, ஆரணி, திண்டுக்கல், கோயம்பத்தூர், தஞ்சாவூர், ஈரோட்டில் உள்ள அறக் கட்டளைகள், தனியார் மருத்துவ மனைகள், அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டன என்றார் RC மெட்ராஸ் சென்னபட்னா தலைவர் B சக்கரவர்த்தி.■


RC *மெட்ராஸ் சென்னபட்னா தலைவர் -தேர்வு செந்தன் அமுதன் ஸ்டான்லி மருத்துவமனை தலைவர்* P *பாலாஜியிடன் மருத்துவ உபகரணங்கள் அளிக்கிறார்.*

# புணே-யில் நடமாடும் தடுப்பு மருந்து வழங்கல் மையங்கள்

ரோட்டரி செய்திக்குழு




RC *புணே சென்ட்ரல் நடத்தும் நடமாடும் தடுப்பூசி மையம் முன் செவிலியர்கள்.*

RC புணே சென்ட்ரல், RID 3131, Vaccine on Wheels (VoW) மற்றும் புணே மற்றும் பிம்ப்ரி-சின்ச்வாட் நகராட்சி அமைப்புகளுடன் இணைந்து ஒரு புதுமையான முன்னெடுப்பைச் செய்தது: மறுவடிவமைக்கப்பட்ட வேன்களை நடமாடும் தடுப்பு மருந்து வழங்கல் மையங்களாக இயக்கியது. அரசு மருத்துவ மனைகளை அணுக இயலாத, அறியாமை அல்லது முதுமை அச்சம் ஆகியவற்றால் தடுப்பு மருந்து எடுத்துக்கொள்ளத் தயங்குகிற, மக்களை இந்த நடமாடும் மருந்தகங்கள் அணுகும்.

Rtn ஜிக்னேஷ் படேல் நடத்தும் VOW என்பது, ஒரே இடத்தில் எல்லா வசதிகளும் கொண்ட நடமாடும் மருந்தகமாகும். இது, சமூகங்களுக்கு அருகில், மருத்துவமனையைப் போன்ற தூய்மையான அமைப்புகளை உருவாக்குகிறது. நகராட்சி அமைப்புகள் தடுப்பு மருந்துகளை வழங்குகின்றன; நடமாடும் மையங்கள் அமைக்கப்படவேண்டிய இடங்களை அடையாளம் காணுகின்றன.

ஒவ்வொரு நடமாடும் மருந்தகத்திலும் குளிர்ச் சங்கிலி வசதிகள், “தடுப்பு மருந்து வழங் கலைத் தொடர்ந்து பொருந்தாத பாதிப்புகளை” எதிர்கொள்வோரைக் கையாள்வதற்கான AEFI பொதிகள் உள்ளன. இந்த நடமாடும் மையங்களில் ஒரு மருத்துவர், இரண்டு செவிலியர்கள், Cowin பதிவுக்கான IT உதவியாளர் மற்றும் பலன் பெறுவோரைத் திரட்டுவதற்கான ஒரு சமூக ஊழியர் ஆகியோர் உள்ளார்கள்.

தேர்ந்தெடுத்த ஓர் இடத்தில் தடுப்பு மருந்து வழங்கல் செயல்பாடு நிறைவடைந்ததும், மருந்தகம் இன்னோர் இடத்துக்கு நகர்கிறது. CSR கூட்டாளர்களால் நிதியளிக்கப்பட்டுள்ள ஐந்து நடமாடும் மருந்தகங்கள் புணே மற்றும் பிம்ப்ரி-சின்ச்வாட் பகுதிகளில் ஏப்ரல் முதல் ஏற்கெனவே இயங்கிவருகின்றன, ஜூன் இரண்டாம் வாரம் வரையில் 5,000க்கும் மேற்பட்ட மருந்து அளவுகள் வழங்கப்பட்டுள்ளன.

நடமாடும் தடுப்பு மருந்துத் திட்டத்தை புணே நகரத்தலைவர் முரளிதர் மொஹோல் தொடங்கி வைத்தார். புணே-யில் இந்த நடமாடும் மருந்தகம் முதலாவதாக, புணே மெட்ரோ ரயில் கட்டுமான இடத்தில் உள்ள 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்குத் தடுப்பு மருந்து வழங்கியது. நிவாரா முதியோர் இல்லத்தில் குறைந்தது 180 மூத்த குடிமக்களுக்குத் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது. மேலும், 100 HIV-பாசிட்டிவ் நபர்கள், பாலியல் தொழிலாளர்களுக்கும் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது என்றார் ருபால். 105 வயதான கொன்டிபா என்பவர் நகராட்சி வளாகத்தில் ஒரு

மருந்தகத்தில் தடுப்பு மருந்து பெற்றார்.

மும்பை மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் VoWன் சேவைகளைப் பயன்படுத்துவதற்கு பெருநகர மும்பை நகராட்சி அமைப்பும் VoW உடன் இதேபோன்ற ஒப்பந்தத்தைச் செய்து கொண்டுள்ளது என்றார் துபே.

கோவா, நாக்பூர், ஹைதராபாத், கட்டக், புபனேஸ்வர், பூரி போன்ற பிற நகரங்களும் தங்கள் பகுதிகளில் இதேபோன்ற தடுப்பு மருந்து முகாம்களை நடத்த ஆர்வம் காண்பித்துள்ளன; அந்தந்தச் சங்கங்கள் RC புணே சென்ட்ரலைத் தொடர்புகொண்டு, அவர்களுடைய கோவிட் திட்டத்தைப் பின்பற்ற முனைந்து வருகிறார்கள்.■



*மூதாட்டி ஒருவருக்கு கோவிட் தடுப்பூசி அளிக்கப்படுகிறது.*

## 20,000 உணவுப் பெட்டிகளை வழங்கிய ஜக்தல்பூர் ரோட்டரியன்கள்

ஏப்ரல் 2021ல், RC ஜக்தல்பூர், RID 3261, சத்தீஸ்கர் மாநிலத்தின் பஸ்தர் பழங்குடியின மாவட்டத்திலுள்ள ஒரு ரோட்டரி சமையலறையை அமைத்தது. எங்களுடைய நோக்கம், வீட்டில் தனிமையில் இருப்பவர்களுக்கும், விடுதிகளில் தங்குவதால் அல்லது சமைக்க இயலாத முதியவர்கள், ஆதரவற்றவர்கள், நோயாளிகள், புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், பிச்சைக் காரார்கள் போன்றோருக்கும் உணவு அளிப்பதுதான்,'' என்கிறார் திட்டத் தலைவர் அசோக் லங்கட்.

இதன்படி, ரொட்டி, காய்கறி, பருப்பு மற்றும் சாதம் ஆகியவை புதிதாகச் சமைக்கப்பட்டு, உணவுப் பெட்டிகளில் அழகாக நிரப்பப்பட்டன. ஈத்-உல்-ஃபித்ர் நாளை முன்னிட்டு, அன்று நாங்கள் உணவுடன் இனிப்புகளையும் சேர்த்து வழங்கினோம்'' என்று தொடர்ந்து கூறுகிறார் அவர்.



*உணவு பெட்டிகள் தயாரிக்கப்படுகிறது.*

PDG பால் ஸ்ட்ரீட் மற்றும் RC கான்பெர்ரா, RID 9710, (ஆஸ்திரேலியா) உறுப்பினர்கள் இந்தச் சமையலறைத் திட்டத்துக்குப் பங்களித்தார்கள். 20,000க்கும் மேற்பட்ட உணவுகளைப் பொட்டலம் கட்டும் பணியில் உள்ளூர் அரசியல்வாதிகள், நிர்வாக அலுவலர்களை நாங்கள் ஈடுபடுத்தினோம், என்கிறார் முன்னாள் தலைவர் சத்யநரைன் அக்ரவால்.

யாரும் தங்கள் வீடுகளில் இருந்து வெளியில் செல்ல விரும்பாத ஒரு நேரத்தில், நம் ரோட்டராக்டர்கள் கோவிட் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உணவு பரிமாறினார்கள், என்கிறார் அகர்வால்.

ரோட்டராக்டர்கள் ஸ்விக்கி அல்லது ஜொமாட்டோவில் பயிற்சி பெற்றவர்கள் இல்லை, உணவுப் பெட்டிகளை வழங்குவதில் அவர்களுக்கு எந்தப் பொருளாதார நன்மையும் இல்லை. ஆனால், இந்த இளைஞர்கள் இந்தத் திட்டத்துக்குத் தங்களுடைய இதயம், ஆன்மாவின்மூலம் மிகச் சிறந்த பணியை ஆற்றினார்கள், என்று தொடர்ந்து கூறுகிறார் அக்ரவால்.■

# புதுப்பிக்கப்பட்ட ரோட்டரி அறக்கட்டளை நிதியளித்தலுக்கான ஒரு வழிகாட்டி

நல்கைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலிருந்து இன்றுவரை, ரோட்டரி அறக்கட்டளை ஆண்டுதோறும் வழங்கும் பன்னாட்டு நல்கைகளின் தொகை இரு மடங்குக்குமேல் உயர்ந்துள்ளது: 2013–14ல் 47.3 மில்லியனிலிருந்து 2019–20ல் 95.6 மில்லியன் டாலர். இருப்பினும், பன்னாட்டு நல்கைகளுக்கான தேவை மிகக் கூடுதலாக உள்ளது. இதனால், இது ஆண்டு நிதிப் பங்களிப்புகளைத் தாண்டிச் சென்று விட்டது. இதன் பொருள், தகுதியுள்ள அனைத்துப் பன்னாட்டு நல்கைக் கோரிக்கைகளும் நிதிகளைப் பெற இயலுவதில்லை.

வருங்காலத்தில் அறக்கட்டளை இயன்றவரை கூடுதலான பன்னாட்டு நல்கைகளுக்கு நிதியளிக்கவேண்டும் என்பதை உறுதிசெய்வதற்காக, ரோட்டரி அறக்கட்டளையின் அறங்காவலர்கள் ஜூலை 1ல் தொடங்கிக் கொள்கை மாற்றங்களை அங்கீகரித்துள்ளார்கள். இந்த மாற்றங்கள், இனி வரும் ஆண்டுகளில் அறக்கட்டளை இன்னும் கூடுதலான பெரிய அளவு, நீடித்த திட்டங்களை ஆதரிக்க இயலுவதில் பெரிய தாக்கத்தைக் கொண்டிருக்கும். மேலும் தெரிந்துகொள்ள, தொடர்ந்து படியுங்கள்.



### நம் நிதிகள்: ஒரு சொற்களஞ்சியம்

ஆண்டு நிதிப் பங்கு என்பது, பலவிதமான உள்ளூர் மற்றும் பன்னாட்டு ரோட்டரி அறக்கட்டளைச் செயல்பாடுகளுக்கான முதன்மை நிதி மூலம் ஆகும். ஒவ்வொரு ரோட்டரியனும், ஒவ்வோர் ஆண்டும் என்கிற முன்னெடுப்பு, அறக்கட்டளையின் ஆண்டு நிதிக்கான ஆதரவை ஊக்குவிக்கிறது. ஒவ்வொரு ரோட்டரியனும் ஒவ்வோர் ஆண்டும் ஆண்டு நிதிக்குப் பங்களிக்கவேண்டும் என்று இது ஊக்குவிக்கிறது. ரோட்டரி உறுப்பினர்கள் மற்றும் பிற நன்கொடையாளர்கள் வழங்கும் ஆண்டு நிதிப் பங்கு இரண்டு துணை நிதிகளுக்குத் திருப்பிவிடப்படுகிறது: உலக நிதி மற்றும் மாவட்ட நியமிக்கப்பட்ட நிதிகள். (DDF), SHARE திட்டத்தின் வழியாக, ரோட்டரி அறக்கட்டளைக்கான பங்களிப்புகள் நல்கைகளாக மாற்றப்படுகின்றன.

உலகெங்கும் நாம் செய்கிற, மிக உயர்ந்த முக்கியத்துவம் கொண்ட செயல்பாடுகளுக்கு உலக நிதி நிதியளிக்கிறது. SHARE-க்காக நியமிக்கப்பட்ட பங்களிப்புகளில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் உலக நிதிக்குப் பயன்படுத்தப்படுகிறது. அனைத்து ரோட்டரி மாவட்டங்களுக்கும் கிடைக்கும் நல்கை மற்றும் திட்ட வாய்ப்புகளுக்குப் பணம் வழங்குவதற்கு அறக்கட்டளை உலக நிதியைப் பயன்படுத்துகிறது. எடுத்துக் காட்டாக, போலியோப்ளஸ், ரோட்டரி அமைதி மையங்கள், மிகப்பெரிய திட்டங்கள் நல்கைகள் (programmes of scale), பன்னாட்டு நல்கைகள், இன்னும் பல.

DDF-ஐ அந்த மாவட்டத்தில் உள்ள சங்கம் அறக்கட்டளை, மற்றும் மாவட்டத் திட்டங்களுக்குப் பயன்படுத்தலாம். மாவட்டங்கள் தங்கள் DDFல் பாதிவரை பயன் படுத்தி மாவட்ட நல்கைகளுக்கு நிதியளிக்கலாம். மீதமுள்ள

தொகையைப் பன்னாட்டு நல்கைகளுக்குப் பயன்படுத்தலாம் அல்லது போலியோப்ளஸ், அமைதி மையங்கள் அல்லது இன்னொரு மாவட்டத்துக்கு நன்கொடையாக அளிக்கலாம்.

நன்கொடை நிறுவல் நிதி (Endowment Fund) என்பது ரோட்டரி உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்கள் விட்டுச் செல்லும் ரொக்கப் பணப் பரிசுகள் மற்றும் உயில் சொத்துகளால் நிதியளிக்கப்படுகிறது. அறக்கட்டளை இப்போதுள்ள செயல்பாடுகளை விரிவாக்கவும் புதியவற்றை மேற்கொள்ளவும் நன்கொடை நிறுவலிலிருந்து கிடைக்கும் செலவழிக்கக்கூடிய வருவாய்கள் உதவுகின்றன. பங்களிப்புகள் நிரந்தரமாக முதலீடு செய்யப் படுகின்றன: நிதியின் மொத்த மதிப்பில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் அறக்கட்டளை நல்கைகள் மற்றும் திட்டங்களுக்கு ஆண்டு தோறும் திருப்பிவிடப்படுகிறது.

---

### இந்த மாதிரி எப்படி வேலை செய்கிறது

### எது மாறவில்லை

அறக்கட்டளையின் அடிப்படை நிதியளித்தல் மாதிரி அதேபோல் தொடரும். ஆண்டு நிதி-SHARE பங்களிப்புகள் மூன்று ஆண்டுகளுக்கு முதலீடு செய்யப் படுகின்றன; அதன்பிறகு அவை DDF மற்றும் உலக நிதி ஆகியவற்றுக்கிடையில் பிரிக்கப்படுகின்றன. முதலீடு செய்யப்பட்ட நிதிகளிலிருந்து கிடைக்கும் வருவாய்கள் அறக்கட்டளையின் நிதி திரட்டல் மற்றும் பொது நிர்வாகம் உள்ளிட்ட செயல்பாட்டுச் செலவுகளில் பலவற்றுக்குத் தொடர்ந்து நிதியளிக்கும். (நன்கொடை நிறுவல் நிதியிலிருந்து கிடைக்கும் முதலீட்டு வருவாய்களில் ஒரு பகுதியும் செயல்பாட்டுச் செலவுகளுக்குப் பணம் செலுத்த உதவுகிறது. இதை அறங்காவலர்கள் நியமிப்பார்கள்.)

---

### எது மாறுகிறது

### போலியோப்ளஸ்ஸுக்கான DDF பங்களிப்புகளுக்கு 50% இணைப்பங்களிப்பு

இப்போது, போலியோப்ளஸ்ஸுக்கான DDF பங்களிப்புகளுக்கு உலக நிதி 50% என்ற அளவில் இணைப்பங்களிக்கும். முந்தைய இரண்டு ஆண்டுகளில் இது 100%ஆக இருந்தது. இது, ஒவ்வோர் ஆண்டும் $5 மில்லியன் திருப்பிவிடப்படுவதற்கு அனுமதிக்கும், இந்தத் தொகையைப் பன்னாட்டு நல்கைகள் உள்ளிட்ட பிற அறக்கட்டளைத் திட்டங்களுக்குப் பயன் படுத்தலாம். இளம்பிள்ளைவாதத்தை நீக்குவதற்கு ரோட்டரி ஒதுக்குகிற ஒவ்வொரு டாலருக்கும் 2க்கு 1 என்ற விகிதத்தில் பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ஆண்டுக்கு $50 மில்லியன்வரை தொடர்ந்து இணைப்பங்களிக்கும். இதனால், இளம்பிள்ளைவாதத்தை நீக்குவதற்கான நிதி திரட்டலை நாம் ஓர் உயர்ந்த முக்கியத்துவமாகத் தொடர்ந்து ஆக்குவது முக்கியம்.

Example:




**$20,000** DDF contribution to PolioPlus + **$10,000** 50% World Fund match + **$60,000** Gates Foundation match = **$90,000** for polio eradication

### பன்னாட்டு நல்கைகளுக்குச் செயல்படுத்தப்படும் DDFக்கு 80% இணைப்பங்களிப்பு

சமீபத்திய ஆண்டுகளில், உலக நிதியானது ரோட்டரி ஆண்டு நிறைவடைவதற்குள் தீர்ந்துபோயுள்ளது. இதனால், அறக்கட்டளையால் தான் பெற்ற தகுதியுள்ள பன்னாட்டு நல்கைக் கோரிக்கைகள் அனைத்துக்கும் நிதியளிக்க இயலவில்லை. இப்போது, பன்னாட்டு நல்கைகளில் மேலும் கூடுதல் பங்களிப்பை அனுமதிப்பதற்காக, பன்னாட்டு நல்கைகளுக்குச் செயல்படுத்தப்படும் DDFக்கு உலக நிதி 80%ல் இணைப்பங்களிக்கும், முன்பு இது 100%ஆக இருந்தது. இந்த மாற்றத்தால், ஆண்டுமுழுவதும் மேலும் பல நல்கைகளுக்கு நம்மால் நிதியளிக்க இயலும்.

Example:




**$40,000** DDF applied to global grant + **$32,000** 80% World Fund match = **$72,000** for global grant

### செயல்பாட்டுச் செலவுகளுக்குப் பகிர்ந்து நிதியளித்தல்

ஆண்டு நிதிப்பங்கு-SHARE 5% ரோட்டரி அறக்கட்டளையின் செயல்பாட்டுச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. முன்பு, 45% பங்களிப்புகள் உலக நிதிக்கும், 50% DDFக்கும் திருப்பிவிடப்பட்டன. ஜூலை 1, 2021ல் தொடங்கிப் பெறப்படுகிற (மற்றும் ஜூலை 1, 2024ல் தொடங்கி ஒதுக்கப்படுகிற) ஆண்டு நிதி-SHARE பங்களிப்புகளுக்கு, மீதமுள்ள 95% DDF மற்றும் உலக நிதி ஆகியவற்றுக்குச் சமமாகப் பிரித்தளிக்கப்படும்.


**PREVIOUS**

$100 Annual Fund-SHARE contribution




**BEGINNING 1 JULY 2021**

$100 Annual Fund-SHARE contribution




### DDF உருள்பயன்பாட்டில் (roll over) ஐந்து ஆண்டு வரம்பு

ஆண்டு நிதிக்கு நன்கொடை அளிக்கிறவர்கள், அந்த நன்கொடை உடனடியாகச் சமூகங்களுக்கு உதவப் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால், ஓராண்டிலிருந்து அடுத்த ஆண்டுக்கு உருள்பயன்பாடாகச் செல்லும் DDF தொகை மிகுதியாக உள்ளது. எடுத்துக் காட்டாக, ஜூலை 1, 2020ல் DDFல் $48.8 மில்லியன் பயன்படுத்தப்படாமல் இருந்தது, முந்தைய ரோட்டரி ஆண்டிலிருந்து உருள்பயன்பாடாக வந்தது.

ஜூலை 1, 2026ல் தொடங்கி, அதன்பிறகு ஒவ்வொரு ரோட்டரி ஆண்டின் நிறைவிலும், ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்குமேல் தக்கவைக்கப்பட்டிருந்த DDF தொகைகள் கண்டிப்பாகப் பயன்படுத்தப்படவேண்டும். பயன்படுத்தப்படாத DDFஐப் பேரிடர் எதிர்வினை நிதி, நன்கொடை நிறுவல் நிதி, போலியோப்ளஸ், ரோட்டரி அமைதி மையங்கள் அல்லது உலக நிதி ஆகியவற்றுக்கு மாவட்டத்தின் விருப்பப்படி பயன்படுத்தலாம். அந்த மாவட்டம் எந்த நிதியையும் தேர்ந்தெடுக்காவிட்டால், உருள்பயன்பாடு உலக நிதிக்குச் செல்லும்.

| | 2021-22 | 2022-23 | 2023-24 | 2024-25 | 2025-26 |
|---|---|---|---|---|---|
| **DDF new** | $50,000 | $50,000 | $50,000 | $50,000 | $50,000 |
| **DDF rollover** | $20,000 | $30,000 | $35,000 | $30,000 | $20,000 |
| **DDF spent** | -$40,000 | -$45,000 | -$55,000 | -$60,000 | -$65,000 |
| **Rollover remaining** | $20,000 | $20,000 | $15,000 | $5,000 | $0 |
| | $10,000 | $10,000 | $10,000 | $10,000 | $0 |
| | | $5,000 | $5,000 | $5,000 | $5,000 |
| | | | $0 | $0 | $0 |
| | | | | $0 | $0 |
| | | | | | $0 |
| **Rollover amount remaining after** | **1 year** | **2 years** | **3 years** | **4 years** | **5 years** |

### கூடுதல் மாற்றங்கள்

2020–21ல் பன்னாட்டு நல்கை நிதியளித்தலைப் பெருக்குவதற்கு வேறு பல நடவடிக்கைகளை அறக் கட்டளை அறங்காவலர்கள் ஏற்கெனவே அங்கீகரித்துள் ளார்கள். செயல்பாட்டுச் செலவுகளைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகளால் பன்னாட்டு நல்கைகளுக்கு $4.4 மில்லியன் கூடுதலாகப் பங்களிக்க இயன்றுள்ளது. மேலும், ஜனவரி 2021ல், அறக்கட்டளை அறங்காவலர்களும் RI இயக்குநர் வாரியமும் அறக்கட்டளையின் செயல்பாட்டுக் கையிருப்பிலிருந்தும் RI வரவு செலவுத் திட்ட மிகையிலிருந்து $15 மில்லியனை உலக நிதிக்கு மாற்றினார்கள். இது, 2020–21ல் கூடுதல் பன்னாட்டு நல்கைகளுக்கு நிதியளிப்பதற்கான ஒரு முறை நடவடிக்கையாகும். இந்த இரண்டு நடவடிக்கைகளால் 2020–21ல் கிட்டத்தட்ட $20 மில்லியன் நிதி கூடுதலாகக் கிடைக்கும். இத்துடன், ஜூலை 1, 2020ல் தொடங்கி, நல்கைகளுக்கான ரொக்கப் பணப் பங்களிப்புகளுக்கான இணைப்பங்களிப்பு நீக்கப்பட்டது, இதன்மூலம் ஆண்டுதோறும் உலக நிதியில் $7 மில்லியன் விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2021–22 அறங்காவலர் தலைவர் ஜான் F ஜெர்ம் அவர்களுடன் ஓர் உரையாடல்

**இந்த மாற்றங்களைப்பற்றி உறுப்பினர்கள் உங்களிடம் தெரிவித்த கவலைகள் என்னென்ன?**

நான் கேட்ட மிகப் பெரிய கவலைகளில் ஒன்று, செயல்பாட்டுச் செலவுகளுக்கு 5% செல்லுதல். இதற்குமுன், அந்தப் பணம் ஆண்டு நிதிப் பங்களிப்புகளின் உலக நிதிப் பகுதியிலிருந்து வந்துகொண்டிருந்தது. ஆனால், அது நியாயமில்லை. மாவட்ட நல்கைகள் தொடர்பான நிர்வாகச் செலவுகளையும் நாம் செய்கிறோம்.

அதனால், ஜூலை 1, 2024ல் தொடங்கி, 5% செயல்பாட்டுச் செலவுகள் உலக நிதி, DDF ஆகியவற்றுக்கு இடையில் பிரித்துக்கொள்ளப்படும்.

**இந்த மாற்றங்களைத் தீர்மானிக்க நீங்கள் பயன்படுத்திய செயல்முறை என்ன? நீங்கள் வேறு எந்தத் தெரிவுகளை நீக்கினீர்கள்? ஏன்?**

இரண்டு ஆண்டுகளுக்குமுன், ரோட்டரி உறுப்பினர்கள் அடையாளம் கண்டுள்ள திட்டங்கள், முக்கியத்து வங்களுக்கு நிதியளிக்க நமக்குக் கூடுதல் பணம் தேவை என்று நாம் புரிந்துகொள்ளத் தொடங்கினோம். இதையடுத்து, கூடுதலாகப் பணத்தைத் திரட்டுவது எப்படி (நிதி திரட்டல் பக்கம்) மற்றும் திட்டம் இப்போது இயங்கும் வழியை மாற்றுவது எப்படி ஆகிய இரண்டையும் ஆராய்வதற்காக அறங்காவலர்களின் உலக நிதிப் பணிக் குழு ஒன்றை உருவாக்கினோம். நிதியளித்தலை ஒரு நீண்ட கால கட்டத்தில் பணியாற்றச் செய்வது எப்படி என்பதை பார்க்க முயன்றோம், இதன்மூலம், நாங்கள் ஒவ்வோர் ஆண்டும் ரோட்டரி உறுப்பினர்களிடம் சென்று புதிய மாற்றங்களை முன்வைக்கவேண்டியிருக்காது.

நாங்கள் நிறைய விஷயங்களை நீக்கவில்லை. நாங்கள் அனைத்தையும் விவாதித்தோம்; நாங்கள் எங்களுடைய தெரிவுகளைக் கவனித்தோம், எது மிகுந்த தாக்கத்தை உண்டாக்கும் என்று சிந்தித்தோம்.

ஒரு தெரிவு, இப்போது நடப் பவற்றை அப்படியே விட்டுவிடுவது, ஒருவேளை, பணம் தீர்ந்துவிட்டால், அதை ஏற்றுக்கொள்வது. 2019–20ல் மே மாதத்தில் நம்முடைய பணம் தீர்ந்துவிட்டது. 2020–21ல் டிசம்பர் மாத நடுவில் நம்முடைய பணம் தீர்வதாக இருந்தது. உலகெங்கும் உள்ள ரோட்டரியன்கள் நமக்குப் பணம் தரும்போது, மூன்று ஆண்டுகள் முதலீடு செய்யப்பட்டபின் அது பலன் தரும் என்று எதிர்பார்க்கிறார்கள். இது அவர்களுக்கு நியாயம் செய்வதாக இல்லை.

**அறக்கட்டளையின் நிதியளித்தல் மாதிரியைப்பற்றி ரோட்டரியன்கள் தெரிந்துகொள்ளவேண்டிய மிக முக்கியமான விஷயம் என்ன?**

TRF அறங்காவலர்களுக்கு மூன்று பொறுப்புகள் உள்ளன: ஒன்று, பணம் திரட்டல்; இரண்டு, பணத்தை முதலீடு செய்தல்; மூன்று, பணத்தைச் செலவழித்தல். இப்போது ஆண்டுதோறும் நம்மிடம் $17 மில்லியன் பணம் குறைவாக உள்ளது. நாம் நிதியளித்தலைப் பெருக்கவேண்டும். நிதியளித்தல் மாதிரியைமட்டும் கவனித்தால் போதாது. அதை முதலீடு செய்யவும் அதைச் செலவு செய்யவும் அங்கு பணம் இருக்கவேண்டும்.

**ரோட்டரி உறுப்பினர்களும் பிறரும் ஆண்டுதோறும் $300 மில்லியனுக்கு மேல் அறக்கட்டளைக்குப் பங்களிக் கிறார்கள். அப்படி இருந்தும், உலக நிதியில் பற்றாக்குறை ஏற்படுவது ஏன்?**

ஒவ்வோர் ஆண்டும் தடையில்லாத முறையில் பங்களிக்கப்படும் $300 மில்லியனில் சுமார் $130 மில்லியன் ஆண்டு நிதிப் பங்குக்குப் பங்களிக்கப்படுகிறது. மீதமுள்ள தொகை போலியோப்ளஸ், நன்கொடை நிறுவல் நிதி, பன்னாட்டு நல்கைகள், பேரிடர் எதிர்வினை நிதி, ரோட்டரி அமைதி மையங்கள் அல்லது நன்கொடையாளர் அறிவுறுத்தும் நிதிகள் உள்ளிட்ட குறிப்பிட்ட நோக்கங்களுக்கு அளிக்கப்படுகிறது.

**செயல்பாட்டுச் செலவுகள் எவை?**

செயல்பாட்டுச் செலவுகள் என்பவை, நிதி திரட்டல், பொது நிர்வாகத் துக்குப் பயன்படுத்தப்படும் செலவுகள் ஆகும். இவற்றுக்கான நிதி, ஆண்டு நிதி முதலீட்டு வருவாய்கள், நன்கொடை நிறுவல் நிதியில் செலவழிக்கக்கூடிய வருவாய்கள், பன்னாட்டு நல்கைகளுக்கான ரொக்கப் பணப் பங்களிப்புகளில் 5% மற்றும் ஆண்டு நிதிப் பங்களிப்புகளில் 5% ஆகியவற்றிலிருந்து பெறப்படுகிறது.

**பாதித் தொகை மாவட்டங்களுக்குத் திரும்ப வருகிறது'' என்று பல நன்கொடையாளர்கள் கேள்விப் படுகிறார்கள். இது உண்மையா?**

5% கழிக்கப்பட்ட பிறகு, ஆண்டு நிதி-SHARE பங்களிப்புகள் முழுவதிலும் பாதியை DDFஆகச் செலவழிக்கலாம், இவை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் மிக முக்கியமான ரோட்டரி அறக்கட்டளைத் திட்டங்களுக்குத் திருப்பி விடப்படுகின்றன.

**ஒரு முன்னணித் தொண்டு நிறுவனமாக நம்முடைய நற்பெயரை இது பாதிக்குமா?**

பங்களிப்புகளை நாம் எப்படிக் கவனித்துக்கொள்கிறோம் என்பதை கருத்தில் கொண்டு சாரிட்டி-நேவிகேட்டர் TRFக்கு நான்கு நட்சத்திர மதிப்பீட்டை தொடர்ந்து 13 ஆண்டுகளாக வழங்கியுள்ளது. உண்மையில், லாப நோக்கம் கருதாத அமைப்புகளைப் பற்றிய தகவல்களை வழங்கும் மூன்று முன்னணி அமைப்புகள் (BBB வைஸ் கிவிங் அல்லயன்ஸ், சாரிட்டி நேவிகேட்டர் மற்றும் கைட்ஸ்டார்) லாப நோக்கம் கருதாத அமைப்புகளை ஆராயும் தங்கள் மாதிரியை மாற்றியுள்ளார்கள், தாக்கத்தை வலியுறுத்துகிறார்கள். மேல்நிலைச் செலவுகளை நியாயமான அளவில் வைப்பது இப்போதும் முக்கியம்தான் எனினும், பயிற்சி, திட்டமிடுதல், மதிப்பிடுதல், உள் அமைப்புகள் மற்றும் செயல்பாடுகளில் முதலீடு செய்வதும் முக்கியம் என இந்த அமைப்புகள் சொல்கின்றன. இணைக் கடிதத்தை நீங்கள் *overheadmyth.com* என்ற இணையத் தளத்தில் படிக்கலாம்.

**DDF உருள்பயன்பாட்டுக்கான நேரம் எப்போது தொடங்குகிறது?**

2020–21லிருந்து 2021–22க்கான எந்த DDF உருள் பயன்பாடும் அந்த நிதிகளை உருள்பயன்பாடு செய்வதற்கான ஐந்து ஆண்டு வரம்புக்கு உட்படும்.

**ஒரு மாவட்டம் ஒரு புதிய பன்னாட்டு நல்கைக்கு விண்ணப்பம் செய்யும்போது, அது இப்போதைய DDFஐ பயன்படுத்துமா அல்லது மிகப் பழைய உருள்பயன்பாட்டைப் பயன்படுத்துமா?**

புதிய பன்னாட்டு நல்கைகளுக்கான நிதியளித்தல் முதலில் இந்த ஆண்டு DDFஇலிருந்து கழிக்கப்படும், பிறகு, மிகப் பழைய உருள்பயன்பாட்டு ஆண்டிலிருந்து கழிக்கப்படும்.

© ரோட்டரி

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்



## 500 அரசுப் பள்ளிகளுக்கு மேஜைகளுடன் கூடிய பெஞ்சுகள்

**அஜய் மதன்**
**ரியல்எஸ்டேட் தொழில்**
RC குருக்ஷேத்ரா, RID 3080

கோவிட் கட்டுப்பாடுகள் முழுமையாக தளர்த்தப்பட்டு இயல்புநிலை திரும்பியவுடன், PRIP ராஜேந்திர சாபூ உருவாக்கிய திட்டத்தை அவரது தலைமையில், எங்கள் ஆப்பிரிக்க மருத்துவக் குழுவினரை எத்தியோப்பியா அழைத்துச் செல்ல உள்ளோம். துரதிருஷ்டவசமாக எங்களால் கடந்த ஆண்டு பயணிக்கமுடியவில்லை. ஆனால், திட்டத்தை முழுவீச்சில் நிறை வேற்றுவோம் என்றார் அஜய் மதன். 10 புதிய சங்கங்கள் உருவாக்கப் பட்டு, 2000 ரோட் டேரியன்கள் சேர்க்கப்படுவார்கள்.

இந்த ஆண்டு இறுதிக்குள் உறுப்பினர் எண்ணிக்கையை 5,300ஆக உயர்த்துவதே எங்கள் நோக்கமாகும். மேலும் 20 புதிய ரோட்ராக்ட் சங்கங்கள் நிறுவப்பட்டு, அதற்கு புதிதாக 1000 ரோட்ராக்டர்களைச் சேர்க்கவும் இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

சுமார் 500 அரசுப் பள்ளிகளுக்கு 10,000த்துக்கும் மேலான மேஜைகளுடன் கூடிய பெஞ்சுகள் நன்கொடையாக வழங்கப்படும். மேலும், வின்ஸ் திட்டத்தின் கீழ் மகிழ்ச்சிப் பள்ளிகளை உருவாக்கும் திட்டத்தை செயல்படுத்துவோம் என்றும் மதன் குறிப்பிட்டார்.

உத்தரகண்ட் மாநிலத்தில் மலைப்பகுதிகளில் வசிக்கும் 50,000 பழங்குடியினர் சுகாதார, மருத்துவ வசதிகள் சரிவர கிடைக்காமல் உள்ளனர். அவர்களுக்காக ரஹத் மருத்துவமுகாம் நடத்தப்படும். மாவட்ட சங்கங்கள் சிம்லா, முஸ்ஸௌரி மற்றும் சோலன் ஆகிய இடங்களில் மொத்தம் 10 பெட் பாட்டில்களை அழிக்கும் யூனிட்டுகள் நிறுவப்படும். சிம்லா, நஹன் மற்றும் முஸ்ஸௌரியில் சர்வதேச மானிய உதவியுடன் தடுப்பணைகள் கட்டவும் திட்டமிட்டுள்ளோம். மாவட்டம் முழுவதும் 20 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை ஜூலை 1ம் தேதி தொடங்கியுள்ளோம். அவை 45 நாட்களில் முடிக்கப்படும். இதற்காக 100 கிலோ மூங்கில் விதைகளை வாங்கியுள்ளோம். ஒவ்வொரு கிலோ விதைக்கும் 3,500 மரக் கன்றுகள் முளைக்கும் என்றார் மதன். TRFக்கு 10,00,000 டாலர் நிதி திரட்ட இலக்கு நிர்ணயித்துள்ளதாக குறிப் பிட்டார்.

1984ம் ஆண்டில் கல்லூரி மாணவராக இருந்தபோது ரோட்ராக்ட் உறுப்பினரானேன். 1993ம் ஆண்டு பட்டப்படிப்பை முடித்தேன். நட்புறவுக் காகவும், வேடிக்கைக்காகவும் முதலில் ரோட்ராக்டில் சேர்ந்தேன், பின்னர் ரோட்டரியின் சேவைகளால் ஈர்க்கப்பட்டு ரோட்டரியில் சேர்ந்தேன். இப்போது மெகா திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறேன் என்று மதன் நினைவுகூர்ந்தார்.

## மகளிர் மேம்பாட்டுக்கு முன்னுரிமை

### பிரபிர் சாட்டர்ஜி

I T மென்பொருள்
RC கொல்கத்தா மெஜஸ்டிக், RID 3291



RI தலைவர் சேகர் மேத்தா எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால் நாங்கள் எழுத்தறிவு இயக்கம், மகளிர் மேம்பாடு, ரோட்டரியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல ஒவ்வொருவரும் ஒரு புதிய உறுப்பினரைக் கொண்டுவர வேண்டும் என்ற தலைவரின் குறிக்கோள் உள்ளிட்ட பல முக்கிய விஷயங்களைச் செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம் என்றார் பிரபிர் சாட்டர்ஜி. மாவட்டத்தில் புதிதாக 20 சங்கங்கள் உருவாக்குவதன் மூலம் மொத்த எண்ணிக்கையை 190 ஆக உயர்த்துவது, புதிதாக 1,000 உறுப்பினர்களைச் சேர்ப்பதன் மூலம் ரோட்டேரியன்கள் எண்ணிக்கையை 5,000மாக அதிகரிப்பது எங்கள் நோக்கமாகும்.

இவை தவிர 32 புதிய ரோட்ராக்ட் சங்கங்களை உருவாக்குவதையும், 500 புதிய ரோட்ராக்ட் உறுப்பினர்களை சேர்ப்பதையும் இலக்காக வைத்துள்ளோம். பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் RCCகளில் அரங்குகளில் மகளிர்க்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்கு தற்காப்பு கலைகள் கற்றுத்தரப்படும். இதற்கான பயிலரங்குக்கு “ரோட்டரி வீராங்கனை” என்று பெயர் சூட்டப் பட்டுள்ளது.

எங்களின் 14 ரோட்டரி கண் மருத்துவமனைகள் மூலம் 40,000 பேருக்கு கண்புரை நோய் அறுவைச்சிகிச்சை நடத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

சர்வதேச மானியம் மற்றும் சங்க உறுப்பினர்களின் நன்கொடை மூலம் 25 மகிழ்ச்சிப்பள்ளிகள் உருவாக்கப் படும். TRFக்கு $4,00,000 நிதி திரட்டவும் இலக்கு நிர்ணயித்துள்ளோம். ஏழைகள் எழுத்தறிவு பெறவும், மருத்துவ சுகாதார வசதி, குடிநீர் வசதிகள் பெறும் திட்டங்களைச் செயல்படுத்துவோம். உண்மையில் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் ரோட்டரி அமைதியை வலியுறுத்துகிறது என்றார் சாட்டர்ஜி.

எனது நண்பர் மூலம் 2,000ஆம் ஆண்டில் நான் ரோட்டரியில் சேர்ந்தேன் என்று சாட்டர்ஜி மேலும் குறிப்பிட்டார்.

## NCRல் மருத்துவ மையங்கள், ராஜஸ்தானில் தடுப்பு அணைகள்

### அசோக் அகர்வால்

மருத்துவ எரிவாயு உற்பத்தியாளர், RC கிரேட்டர் காஜியாபாத், RID 3012



அதிகம் செயல்படுங்கள். மேலும் வளர்ச்சி அடையுங்கள், ஒவ்வொருவரும் ஒருவரை கொண்டுவாருங்கள் என்ற RI தலைவர் சேகர் மேத்தாவின் கோட்பாடுகளை ஏற்று திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். தில்லி மற்றும் NCR பகுதிகளை உள்ளடக்கிய எங்கள் மாவட்டத்தில் 122 சங்கங்கள் உள்ளன. உறுப்பினர்கள் எண்ணிக்கை 3,800. மேலும் 25 புதிய சங்கங்களை உருவாக்கவும், 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும் திட்டமிட்டுள்ளோம் என்றார் அசோக் அகர்வால். 30 புதிய ரோட்ராக்ட் சங்கங்கள், 600 புதிய ரோட்ராக்டர்கள் மூலம் எண்ணிக்கையை 2,600ஆக உயர்த்துவது எங்களது குறிக்கோளாகும்.

காஜியாபாதில் உள்ள வர்தன் மல்டி ஸ்பெஷாலிடி மருத்துவமனையில் 1,20,000 டாலர் சர்வேதச நிதியுதவி யுடன் 15 படுக்கைகள் கொண்ட கோவிட் சிகிச்சை மையம், காஜியாபாதில் உள்ள ஆஷா கிரண் மருத்துவ மனை மற்றும் ஸ்ரீ திருப்பதி மருத்துவமனையில் ரூ.1.20 கோடியில் டயாலிசிஸ் சிக்ச்சை மையங்கள் ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம். மேலும் நொய்டாவில் அல்ட்ரா சவுண்ட் x-ray மற்றும் C T ஸ்கேன் கருவிகளுடன் நோய் கண்டறியும் மையங்கள் அமைக்கவும், காஜியாபாதில் உள்ள ஸ்ரீ ஜெகந்நாத் அறக் கட்டளை புற்றுநோய் சிகிச்சை மருத்துவமனையில் ரூ.1.6 கோடியில் C T ஸ்கேன் பிரிவு நிறுவவும் முடிவு செய்துள்ளோம்.

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள கிராமங் களில் சர்வதேச நிதியுதவியுடன் 20 தடுப்பணைகள் (ரூ.60 லட்சம்) கட்டவும் திட்டமிட்டுள்ளோம். ஹரியானா மாநிலம் சோனிபட்டில் 10 மகிழ்ச்சிப் பள்ளிகள் ஏற்படுத்தப்படும். மேலும் அங்குள்ள 5 பொது சுகாதார மையங்கள் நவீன மருத்துவ வசதிகளுடன் தரம் உயர்த்தப்படும். இவையும் சர்வதேச மானிய உதவி மூலம் நிறைவேற்றப்படும். சுகாதார மையங்களில் உள்ள ஆஷா பணியாளர்களுக்கு சங்கத்தின் மூலம் சிறப்பு பயிற்சி அளிக்கப்படும். TRFக்கு 6,00,000 டாலர் நிதி திரட்ட இலக்கு நிர்ணயித்துள்ளோம் என்றார் அகர்வால்.

ரோட்டேரியன் அனில் சர்மா மூலம் 1996–97ல் ரோட்டரியில் சேர்ந்ததாக அகர்வால் தெரிவித்தார்.

## ரோட்ராக்டர்கள் மற்றும் மருத்துவ வசதிகளில் கவனம் செலுத்தப்படும்



**சஞ்சய் மால்வியா**

**கட்டுமானத் தொழில்,** RC **ஜோத்பூர் இன்ஃபினிடி,** RID 3053

பொது முடக்க கட்டுப்பாடுகள் காரணமாக மாவட்டத்தில் உள்ள 65 சங்கங்களும் வாரா வாரம் மெய்நிகர் சந்திப்புகள் மூலம் உறுப்பினர்களுடன் உரையாடி திட்டங்களை தயாரிக்கிறோம். அரசு பொது முடக்க தளர்வுகளை அறிவித்தவுடன் களத்தில் இறங்கி புதிய உத்வேகத்துடன் செயல்படுவோம். எனது பதவிக் காலத்தில் புதிதாக 20 சங்கங்களை ஏற்படுத்தவும், 1,200 உறுப்பினர்களைச் சேர்த்து மொத்த உறுப்பினர் எண்ணிக்கையை 3,900ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளேன் என்றார் சஞ்சய் மால்வியா. அனைத்து சங்கங்களும் குறைந்தது ஒரு ரோட்ராக்ட் சங்கத்தை ஆதரிக்க வேண்டும். தற்போது 12 ரோட்ராக்ட் சங்கங்கள் மூலம் 350 ரோட்ராக்டர்கள் உள்ளனர். மேலும் 1,000 ரோட்ராக்டர்களைச் சேர்க்க முடியும் என்று நம்புகிறோம் என்றார்.

முக்கிய நகரங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளை புதுப்பிக்கவும், 10,000 கண்புரை அறுவைச்சிகிச்சைகள் நடத்தவும் திட்டமிட்டுள்ளோம். DDF, நன்கொடையாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் பங்களிப்பின் மூலம் மாவட்ட மருத்துவ மனைகள் புதுப்பொலிவு பெறும். பசுமைத் திட்டத்தின் கீழ் 1,00,000 மரக்கன்றுகள் விநியோகிக்கப்படும் என்றார் மால்வியா.

வருகிற செப்டம்பர் மாதத்தில் கிராமப்புற பகுதிகளில் உள்ள பெண்களுக்கு மார்பக புற்றுநோய் கண்டறிய 1 லட்சம் டாலர் சர்வதேச மானிய உதவியுடன் மாமோகிராபி வாகனம் அர்பணிக்க உள்ளார். TRF அறக்கட்டளைக்கு 4,00,000 டாலர் நிதி திரட்ட இலக்கு நிர்ணயித்துள்ளோம். மக்கள், தாங்கள் கற்றுக் கொண்டதையும், பெற்றதையும் சமுதாயத்திற்கு திருப்பிச் செலுத்தும் வகையில் ரோட்டரியை கவர்ச்சி கரமான மேடையாக மாற்ற வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். 1999 ஆம் ஆண்டு நான் ரோட்டரியில் சேர என்னை ஊக்கப்படுத்தியது ரோட்டேரியனான எனது தந்தை ராம் நாராயண் மால்வியாதான் என்றார் சஞ்சய் மால்வியா.

## மருத்துவ சுகாதாரம், பசுமை, குடிநீர் திட்டங்களுக்கு முன்னுரிமை



**கே.சுந்தரலிங்கம், ஜவுளித் தொழில்**

RC **சேலம் மெட்ரோபோலிஸ்,** RID 2982

அனைவருக்கும் ஆரோக்கியம் என்ற திட்டத்தின் கீழ் 1,00,000 பேருக்கு மருத்துவ வசதிகள் அளிக்க தொடர்ச்சியாக NCD முகாம்கள் நடத்தப்படும் என்று தெரிவித்தார் சுந்தரலிங்கம். ரோட்டரியின் 7 முக்கியத்துறைகளை கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தவும் திட்டம் உள்ளது. சர்வதேச மானிய உதவி மற்றும் சங்க உறுப்பினர்களின் நன்கொடை உதவியுடன் 5 தடுப்பணைகள் கட்டவும் திட்ட மிட்டுள்ளோம். ரோட்டேரியன்கள் வீடுகள் இருக்கும் இடங்களில் 12 குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் (RO) அமைத்து பாதுகாப்பான குடிநீர் வழங்கவும் முடிவு செய்துள்ளோம். உள்ளூர் சமூகத்தினரும் இதன் மூலம் பயன்பெற முடியும் என்று அவர் விளக்கினார்.

பசுமையான சூழலை உருவாக்க பொதுமக்களுக்கும், ரோட்டேரியன்களுக்கும் மாடித் தோட்டம் போடுவதற்கான உபகரணங்கள் வழங்கப்படும். ஊரகப் பகுதிகளில் வசிக்கும்  மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்ய ஒவ்வொரு சங்கமும் அவர்களுக்கு கறவை மாடுகள் வழங்க ஏற்பாடு செய்யப்படும். தேவைப்படும் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் பரிசோதனை இலவசமாக நடத்தப்படும். அரசு மற்றும் தனியார் அளித்த நிலங்களில் மியாவாகி காடுகள் உருவாக்கவும் சங்கங்களிடம் வலியுறுத்தி யுள்ளோம். பழங்குடியினர் கிராமங்களில் 150 சூரியசக்தி விளக்குகள், செயற்கைக்கால்கள் தயாரிப்பு மையம் ஏற்படுத்தப்படும். சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவ மனையில் ஆக்சிஜன் சேமிப்புத் தொட்டி நிறுவ தமிழக முதல்வர் M K ஸ்டாலினிடம் ரூ.25 லட்சம் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது என்றார்.

பத்து புதிய சங்கங்கள், 1500 புதிய உறுப்பினர்கள், சமூக அடிப்படையிலான 50 ரோட்ராக்ட் சங்கங்கள் மற்றும் 500 ரோட்ராக்ட் உறுப்பினர்களைச் சேர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. TRFக்கு 7,50,000 டாலர் நிதி திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். 1994ம் ஆண்டில் நண்பர்களுடன் சேர்ந்து சமூக அடிப்படையில் சில்வர் சிட்டி ரோட்ராக்ட் சங்கத்தை தொடங்கினேன். எனினும் தொழில் நிமித்தமாக 1997ல் வெளியேறினேன். சில ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு 2005ல் மீண்டும் ரோட்டரியில் சேர்ந்தேன் என்றார்.

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

# மூட நம்பிக்கைகளுக்கு எதிராகப் பரப்புரை நடத்தும் அமல்னெர் மாணவர்கள்

கிரண் ஜெஹரா

ஏப்ரல் 2020ல், மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள அமல்னெருக்கு அருகில் இருக்கும் புத்ருக் என்ற சிறு கிராமத்தைச் சேர்ந்த சுதர்ஷன் ரத்தோட் என்ற 10 வயதுச் சிறுவருடைய உடல், ஒரு ஏரிக்கு அருகில் கண்டறியப் பட்டது. இந்தக் கொலைக்குக் காரணம், சுதர்ஷனைப் போன்ற வயதில் இருக்கும் தங்கள் மகனின் சரிந்துவரும் நலனை மீட்பதற்காக ஒரு குடும்பம் செய்த மனித பலிச் சடங்குதான். மகாராஷ்டிர மனிதப் பலி மற்றும் பிற தீய நடவடிக்கைகளைத் தடுத்து ஒழிக்கும் சட்டம் 2013ன் கீழ் குற்றவாளிக்கு எதிராக ஒரு புகாரைப் பதிவு செய்யும்படி மாவட்ட நீதிமன்றம் காவல்துறைக்கு ஆணையிட்டபிறகு, இந்த வழக்கு வெளிச்சத்துக்கு வந்தது. பதினாறு பேர் கைது செய்யப் பட்டார்கள்; வழக்கு நடந்துவருகிறது.

இந்த நிகழ்ச்சிக்குப்பிறகு, RC அமல்னெர், RID 3030 மற்றும் அதன் RCC, SSES பண்டிட் ஜவகர்லால் நேரு கல்லூரி மாணவர்கள் சேர்ந்து இத்தகைய மூட நம்பிக்கைகளுக்கு எதிரான ஒரு பரப்புரையைத் தொடங்கியுள்ளார்கள்.

இது 21ம் நூற்றாண்டு. ஆனால் இப்போதும் பலர் தங்களுடைய நோய்களுக்குத் தீர்வு காண்பதற்கு மருத்துவர்களை நாடாமல் மந்திரவாதி அல்லது சோதிடரை அணுகுகிறார்கள், கிராமங்களில் மட்டுமில்லை, நகரங் களிலும் இது நடக்கிறது. இந்த முட்டாள் தனத்தால் மக்கள் பணத்தை, சொத்து களை, உயிரை இழந்துள்ளார்கள். எங்களுடைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் வழியாக, மந்திர வித்தைகள் சட்டப்படி தடுக்கப் பட்டுள்ளவை, என்ற செய்தியை நாங்கள் பரப்ப விரும்புகிறோம்'' என்றார் SSES கல்லூரியின் சமூகப் பணிப் பேராசிரியர் டாக்டர் பரத் கண்டல்கலெ. இந்த விழிப்புணர்வு முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, தெரு நாடகங்களை நடிப்பதற்குத் தன் மாணவர்களுக்கு இவர் பயிற்சியளிக்கிறார்.

அனைத்து மூட நம்பிக்கைகளையும் சட்டத்தால் சரி செய்ய இயலாது. மக்கள் ஏமாற்றுக்கார மந்திரவாதிகளை அணுகாமல், மூடிய கதவுகளுக்குப் பின்னால் மனிதத்தன்மையற்ற சடங்குகளைச் செய்யாமல் தடுக்க வேண்டுமென்றால், விழிப்புணர்வு முன்னெடுப்புகள் தேவை என்றார் சங்கத்தின் IPP அபிஜீத் பன்டார்கர். மூட நம்பிக்கைச் செயல்பாடுகள் மனித நேயமற்றவை, பிறரைத் தவறாகப் பயன்படுத்தக்கூடியவை என்பதால் அவற்றைக் கடுமையாகத் தடுக்க வேண்டும் என்று தொடர்ந்து கூறினார்.

அமல்னெரைச் சுற்றிச் சுமார் 155 கிராமங்கள் உள்ளன, மக்கள் மந்திர வித்தைகளை நம்புவதற்கு மிகப் பெரிய காரணம், கல்வி அறிவு இல்லாததுதான் என்கிறார் SSES கல்லூரி மாணவர், தெரு நாடகக் கலைஞர் மௌலி படேல். சமூக சேவை மாணவர்கள் என்ற முறையில், படேலும் அவருடைய நண்பர்களும் 15 மாணவர்களைக் கொண்ட குழுவாக ஒரு தீவிரப் பரப்புரையை நடத்துகிறார்கள், இவர்கள் இதுவரை 25 கிராமங்களில் நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்கள், இன்னும் பல கிராமப் பகுதிகளுக்குச் சென்று தங்கள் முன்னெடுப்பை விரிவுபடுத்தத் திட் டமிட்டுள்ளார்கள்.

மாணவர்களுடைய பயணம், மற்ற செலவுகள், அவர்களுடைய பதாகைகள், துண்டுப் பிரசுரங்களுக் கான செலவுகளை இந்தச் சங்கம் ஏற்றுக்கொள்கிறது. ■



*மூட நம்பிக்கைகளுக்கு எதிரான விழிப்புணர்ச்சியூட்டும் தெரு நாடகம்.*

# சூரியசக்தி மின்சாரம்

ப்ரீதி மெஹ்ரா

நாம் டிஜிட்டல் முறையில் இப்போது பேசுகிறோம். இந்த உலகம் இப்போது எரிசக்தியில் இயங்குகிறது. அதன் நுகர்வு விரைவில் அதிகரிக்கப் போகிறது. அதை உறுதிப்படுத்த வேண்டுமானால் நாம் நமது எரிசக்தித் தேவையில் சுயசார்பு நிலையை எட்ட வேண்டும். குறிப்பாக பசுமைக் கண்ணோட்டம் நம்மிடம் இருந்தால், வீடுகளில் சூரிய மின்சக்தி அல்லது காற்றாலை மின்சக்தியை நிறுவுவது பற்றி நாம் பரிசீலிப்பது ஒன்றும் தவறு அல்ல. நமது நாட்டின் நிலப்பரப்பை வைத்துப் பார்க்கும்போது சூரிய சக்தியும், காற்றும் ஏராளமாக உள்ளன.

கடந்த காலங்களில் வீட்டின் மேற்கூரையில் சூரியசக்தி மின்சாரம் பெறுவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. மத்திய, மாநில அரசுகள் தனிப்பட்ட வீடுகள், குடியிருப்புகள் மற்றும் அலுவலக வளாகங்களில் சூரிய சக்தி மின்னுற்பத்தி திட்டத்துக்கு மானியம் வழங்கி வருகின்றன. ஆரம்பத்தில் முதலீடு கொஞ்சம் அதிகமாக இருக்கும் என்றாலும் நீண்டகால நோக்கில் மின்கட்டணச் செலவுகள் குறைந்துவிடும்.

எனவே இதை அடைய எளிமையான வழி என்ன? முதல் கட்டமாக சூரியசக்தி மின்சார ஒப்பந்ததாரரை அழைத்துப் பேசவேண்டும். அவர் உங்களிடம் இரண்டு கேள்விகள் கேட்பார். ஒன்று உங்களது மின்தேவை என்ன? என்பது. மற்றொன்று சூரிய சக்தி மின்னுற்பத்தி பலகையை நிறுவ எளிதான வழி என்ன? என்று கேட்பார். முதலில் உங்கள் வீட்டில் ஆண்டுக்கு எவ்வளவு மின்சாரம் தேவைப்படும் என்பது கணக்கிடப்படும். இரண்டாவதாக ஒப்பந்ததாரர் உங்கள் வீட்டின் சுவர் அல்லது மேற்கூரையில் போதுமான சூரிய ஒளி கிடைப்பதை தள பகுப்பாய்வு செய்வார். சூரிய சக்தி மின்தகடுகள் எந்த அளவுக்கு வைக்க வேண்டும் என்று உங்களிடம் கலந்து ஆலோசிப்பார்.



இதன் மூலம் சூரியசக்தி மின் பலகைகளின் எண்ணிக்கையை கணக்கிட்டு அவற்றை நிறுவுவதற்கான இடத்தையும், வடிவமைப்பையும் முடிவு செய்வார்.

உங்கள் பகுதியில் உள்ள சூரியசக்தி மின்சார பேனல்களை நிறுவும் நிறுவனங்களிடம் ஆன்லைன் மூலம் தொடர்பு கொண்டால், அவர்களே ஒரு தரமான ஒப்பந்ததாரரை உங்களுக்கு அனுப்பிவைப்பார். அவரிடம் ஆலோசனை பெறலாம். பெரும்பாலான நகரங்களில் தொழில்முறை ஆலோசகர்களின் முகவரிகள் எளிதில் கிடைக்கும்.

உங்கள் வீட்டு மேற்கூரையில் நிறுவப்படும் பி.வி. சிஸ்டம் ஒரு மினி மின்னுற்பத்தி ஆலை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இவை சூரிய ஒளியை மின்சக்தியாக மாற்றி உங்களின் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்கிறது. இங்கு தயாரிக்கப்படும் மின்சாரத்தை மின் தொகுப்புக்கும் அனுப்பமுடியும். சூரிய சக்தி மின்சாரம் தயாரிக்கும் உபகரணங்களை வீட்டில் மேற்கூரையில் அமைப்பது ஒன்றும் கஷ்டமான காரியமல்ல. வீடு அல்லது சமூகத்தில் மின்தேவை மற்றும் உரிமையாளரின் முதலீடு, இருக்கும் இடம் ஆகியவற்றை பொருத்து இவற்றை நிறுவமுடியும். நீங்கள் எந்த மாடலை விரும்புகிறீர்கள் என்பதையும் அரசாங்கத்திடமிருந்து மானிய உதவி கிடைப்பதைப் பொருத்தும் செலவுகள் இருக்கும்.

வீட்டின் மேற்கூரையில் பி.வி. சிஸ்டத்தை பொருத்த அதற்கான இன்வெர்ட்டர், கட்டமைப்பு வசதிகளுக்கான உபகரணங்கள் தேவை. மின்சார பெட்டிகள், மின்மாற்றிகள், மீட்டர்கள், பேட்டரிகள், ஜெனரேட்டர்கள் போன்றவையும் அவற்றில் அடங்கும். சூரிய சக்தி மின்தகடு களின் அளவு, அதன் செயல்திறன் போன்றவை உங்களின் மின்தேவையைப் பொறுத்தது. சந்தையில் விற்கப்படும் சூரிய சக்தி மின்தகடுகள் 14–16 சதவீதம் செயல்திறன் மிக்கவை. அவற்றின் ஆயுள் 25 ஆண்டுகள். சூரிய சக்தி மின்தகடுகள் ஒருமுறை அமைக்கப்பட்டுவிட்டால் அவற்றை பராமரிக்கும் செலவு அதிகமில்லை. அவ்வப்போது தூசி களையும், பறவைகள் இடும் எச்சத்தையும் துடைத்துவிட்டால் போதுமானது. இதில் முக்கியமானது என்னவெனில் சூரிய சக்தி மின்தகடுகளை நாம் அணுகும் இடத்தில் வைக்க வேண்டும். அப்போது தான் அவற்றை குறிப்பிட்ட இடைவெளியில் சுத்தம் செய்ய முடியும். இப்போது சில நிறுவனங்கள் சூரிய சக்தி மின்தகடுகளுடன் ரோபாட் இணைக்கப்பட்ட கருவிகளை விற்கின்றனர். அவை பொருத்தப்பட்டால் நாம் சென்று அவற்றை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டியதில்லை. ஆனால், இதற்கு சற்று கூடுதல் செலவாகலாம். எந்த ஒரு சூரிய சக்தி மின்சார அமைப்பு மூலமும் 10 முதல் 300 வாட் மின்சாரம் தயாரிக்க முடியும். ஆனால், கருவியின் செயல்திறன் மற்றும் மின்தகடுகளின் அளவைப் பொறுத்தது.

மின்சார சேமிப்புக்கு காரீய அமிலம் மற்றும் லிதியம்-அயன் பேட்டரிகள் உள்ளன. இரண்டிலும் சாதக, பாதகங்கள் உள்ளன. காரீய அமில பேட்டரிகள் கொண்ட இன்வெர்ட்டர்கள் விலை குறைந்தவை. அவற்றின் ஆயுள் 5 முதல் பத்து ஆண்டுகள் வரைதான். லிதியம்-அயன் பேட்டரிகள் மடிக்கணினிகளில் பயன்படுத்துவது போன்றது. ஆனால், விலை அதிகம். அவை சிறந்த திறனைக் கொண்டிருப்பதால் 13 முதல் 18 ஆண்டுகள் வரை உழைக்கும் தன்மை கொண்டவை. எனினும் இதற்கான முதலீடுகளை கணக்கிட்டுப் பார்க்கும் போது பெரும்பாலும் பலர் வீடுகளில் காரீய அமில பேட்டரிகளைத்தான் பயன்படுத்தி வருகிறார்கள்.

சூரியசக்தி மின்சாரம் தயாரிக்கும் சாதனங்களை வடிவமைப்பதற்கு முன்பாக வீட்டிற்கு எவ்வளவு மின்சாரம் தேவைப்படும் என்பதை நாம் அறிந்துகொள்வது முக்கியம். அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் இதற்கென எளிமையான ஆன்லைன் கருவியை தயாரித்துள்ளது. Solarmyroof.cseindia.org என்ற இணையதளத்தில் உங்கள் தகவல்களை உள்ளீடு செய்தால் உங்கள் வீட்டுக்கு என்னவகையான சூரிய சக்தி மின் தொகுப்பு தேவை, அதற்கு எவ்வளவு இடம் தேவைப்படும், பணம் எவ்வளவு செலவாகும் என்ற தகவல்கள் கிடைக்கும். அதன் பின் உங்களுக்குத் தெரிந்த ஆலோசகர் மூலம் இறுதிமுடிவுக்கு உங்களால் வரமுடியும்.

நீங்கள் திட்டத்தின் முழுச் செலவையும் ஏற்று கோபெக்ஸ் மாதிரிக்கு செல்ல விரும்புகிறீர்களா அல்லது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனத்தின் மாதிரிக்கு செல்ல விரும்புகிறீர்களா என்பதை தீர்மானிக்க ஆலோசகர் உங்களுக்கு உதவுவார். இந்த மாதிரியில் சூரியசக்தி மின் உருவாக்கும் நிறுவனங்கள் உங்கள் வீட்டில் சூரியசக்தி மின்சாரம் தயாரிக்கும் கருவிகளை தங்கள் செலவில் நிறுவி அதன் மூலம் தயாரிக்கப் படும் மின்சாரத்தை உங்களுக்கு விற்பனை செய்வார்கள். இரண்டு முறைகளிலும் லாபமும் உண்டு, நஷ்டமும் உண்டு. எனவே இதுவிஷயத்தில் ஆராய்ந்து கணக்குப் பார்த்து செயல்படுவது நல்லது. சூரியசக்தி மின்சாரம் தயாரிக்கும் நடைமுறைகளை செயல்படுத்துவதற்கு முன் நன்கு யோசித்து செயல்படுவது நல்லது. ஆனால், இந்த முறையில் நீண்டகால அடிப்படையில் பயன் உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. அடுத்த கட்டுரையில் காற்றாலை மின்சாரம் தயாரிப்பது குறித்து பார்ப்போம்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

Wordsworld

# Of soirees and sensations



Sandhya Rao

Stories from the world of music, real and real-ly imagined.


All of us have stories to share from our experiences and we recount them, sometimes deadpan, sometimes blended with *mirch masala* and a crush of *kasuri methi* for the general listening pleasure. Among my mother's all-time favourite stories concerned the golden-voiced, maverick yet endearing musician M Balamuralikrishna.

Amma's story goes like this: Many years ago, the Music Academy in Madras (now Chennai), the frontrunning platform for all performing artists, had blacklisted Balamurali, and would not invite him to perform on its stage. The reasons are unknown to me. However, Balamurali was not only a creative genius, he was fiercely dogged and he somehow, finally, managed to get a leg in. This is when Amma's giggling fit would begin. She and my aunt were in the upper galleries that evening when Balamurali took the stage and the way she tells it, he didn't get off until he had run through practically his entire songbook, turning one page after another without a break. It was, my mother recalls, a performance that showcased some familiar songs, but mostly original compositions set in *ragas* of his own creation. You could see the organisers getting agitated, my mother would recall giggling away 'They tried so hard to stop him,' Amma would say, 'but uh-huh, he didn't even look in their direction, he just went on and on. They didn't know what to do!'

Music, like poetry, resides with and around us everywhere, in every moment, but the world has chosen June 21 to celebrate it annually, at least since around 1981. That's why my thoughts drifted to music, musicians and, as you rightly guess, books about music and musicians. Prominently displayed in my bookshelf is *Raga'n Josh: Stories from a Musical Life* by Sheila Dhar. It's a gift from a friend: a collection of incisive, droll and detailed writings about many things, especially music.

Sheila Dhar was passionate about Hindustani music and was no mean singer herself. She worked with the Publications Division and wrote a delightful book for children (among others) called *This India*. She was associated with the Sangeet Natak Akademi and the Indian Council for Cultural Relations. She was a sharp writer and being married to the economist PN Dhar provided many opportunities to rub shoulders with prominent and/or influential people. Her musical journey brought her close to personalities such as Begum Akhtar, Fayyaz Ahmad Khan, Pran Nath, Siddheswari Devi and Kesarbai Kerkar. Add to all this a keen sense of observation laced with a streak of mischief, not to mention an amazing way with words. To quote from the back cover of *Raga'n Josh*: 'Incisive intelligence, comic effervescence, self-deprecating humour, and a fascinating ability to manipulate the English language for Indian contexts…' The book has and is all this. The best part is that you don't have to be a music-lover to enjoy it, although it is a bonus if you do.

As you chuckle your way through the pieces, each a separate chapter, you also get glimpses into the lifestyle of a well-positioned and extended Mayur Kayasth family whose dining table







seated over 50 members in descending order of importance at any given meal. That is a story in itself. The collection also has memorable ruminations on many subjects, but the music plays on.

For instance, I opened the book at random and found this little section talking about how musicians are influenced by those whom they admire or love, even if they belong to other *gharanas* or schools: 'The other day a brilliant young vocalist, recording her first CD, honoured the master she admired most simply by singing in his special manner. Everyone present recognised the tribute without a word having been said. "I just felt like writing a love letter today," she remarked later.' Then, Sheila Dhar goes on to mention how every time Mallikarjun Mansur sang *Raag Jaunpuri*, he would 'interrupt himself to tell his listeners that he was singing the *antara* in the characteristic manner of Manji Khan, a guru whom he adored'. A little later, he would mention the name of Rahmat Khan from whom Manji Khan had got it. 'In this tradition,' Sheila Dhar writes, 'no great musician lives alone on the creative mountaintop… In a sense, all outstanding achievement in this field is collective, and there is a sense of participation by a warm, closely connected joint family which lives in the mind of the musician and provides him with all the earlier recordings he might wish to refer to.'

In a sense, it is this 'collective' that Carnatic musician TM Krishna is perhaps inspired by in his thoughtful, often provocative writings and in his music itself. Whether you are a musician or not, aficionado or not, his *A Southern Music* is a must-read for the insights it provides and the thinking it triggers about history, tradition, practice and performance. Striking a different note is Namita Devidayal's *The Music Room*. Although it's a memoir of the author's musical journey, it has a fiction-like quality. It begins with her first lessons as a child to study music from Dhondutai, the last disciple of Kesarbai Kerkar and Alladiya Khan. As the reader journeys with Namita Devidayal, an intricately interlinked world unravels in which music dominates. In an interaction at the Asia Society headquarters in New York some ten years back, the author told her audience: 'The music we have today is as beautiful as it is only because of the influences that came in when the Mughals came in. … You have Hindu singers and Muslim singers performing together in a way that is unimaginable. I think we need to cherish this.'

That's what, perhaps, inspired singer Shubha Mudgal to write *Looking for Miss Sargam: Stories of Music and Misadventure*. The fact that she cherishes her musical heritage as well as all that it has given her as a practising musician. Anyone who knows music knows Shubha Mudgal and her powerhouse of a voice. That same voice speaks to readers with affection, irony, compassion and accuracy in this, her debut offering of fiction. Yet, again, as anyone who is familiar with the music world would know, truth




The music we have today is as beautiful as it is only because of the influences that came in when the Mughals came in. … You have Hindu singers and Muslim singers performing together in a way that is unimaginable.

lies at the heart of each story, whether it is about a singer dying to perform abroad and being hosted by locals in the US, or raising funds for a music competition. India-Pakistan music concerts for peace? There hangs a story. Work not being acknowledged, or worse, being appropriated? Looking for patronage? Or desperate for public honour? Shubha Mudgal writes with a light touch but the underlying tragedy is unmistakable.

So, dear readers, there's plenty to look forward to and, given the present environment, time enough to read and ruminate. When you go looking for these books, I promise you will stumble upon an even greater haul. *Miss Sargam* could lead the way, to both books and music. Don't forget to listen to music.

*The columnist is a children's writer and senior journalist.*

Rotary PEOPLE OF ACTION

# RC பட்டியாலா மிட்-டவுனின் மன நிறைவான ஆண்டு

ஜெய்ஶ்ரீ

ரோட்டரி ஆண்டு 2020–21 நிறைவடைகிற நேரத்தில், RC பட்டியாலா மிட்-டவுன், RID 3090, தலைவர் மனிக் ராஜ் சிங்க்ளா மன நிறைவுள்ள ஒரு ரோட்டரியனாகப் பேசுகிறார். இந்த ஆண்டுமுழுவதும் பலருக்கு உதவுகிற 76 திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நான் என் குழுவை வழிநடத்தினேன்.

அதே நேரம், அவருடைய இதயத்துக்கு நெருக்கமான திட்டம், பெண்களுக்கான தொழில் சார்ந்த பயிற்சித் திட்டம்தான். இந்தச் சங்கம் பட்டியாலாவிலுள்ள ரோட்டரி பவனில் ஒரு மையத்தை நிறுவிப் பெண்களுக்குத் தையல் பயிற்சி அளிக்கிறது. சென்ற ஆண்டில் முப்பது பெண்கள் இந்தக் கலையைக் கற்றார்கள், அதில் ஏழைமையான பின்னணியிலிருந்து வரும் 15 பேர் இந்தத் தொழிலைத் தொடர்ந்து செய்வதற்காக அவர்களுக்குத் தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. பயிற்சி பெற்ற பெண்களுக்கு வேலை கிடைக்கவும் அவர்கள் தங்களுடைய சொந்தத் தையல் அமைப்பை நிறுவவும் இந்தச் சங்கம் உதவுகிறது.

சிங்க்ளா-வின் நோக்கம், 1,000 பெண்களுக்குப் பயிற்சி அளிப்பது தான். நோய்ப்பரவல், அதைத் தொடர்ந்த முடக்கம் இந்தத் திட்டத்தை மெதுவாக்கிவிட்டது. ஆனால், எனக்குப் பிறகு பொறுப்புக்கு வரும் தர்சென் பன்சால் இந்தத் திட்டத்தைத் தொடர்வதில் அதே அளவு ஆர்வத்துடன் உள்ளார். இந்த ஆண்டு சிங்க்ளா சங்கச் செயலாளர் என்பதால், இந்தப் பணி இன்னும் எளிதாகிறது.

இரண்டாவது கோவிட் அலையின்போது, இந்தச் சங்கம் மாவட்ட நிர்வாகத்துக்கு 5,000 துணி முகமூடிகளை வழங்கியது. நாங்கள் குப்பையைச் செல்வமாக்கினோம். துணி விற்பனையாளர் ஒருவர் எங்களுக்கு 500 பருத்தித் துணித் துண்டுகளை அளித்தார்; அதிலிருந்து முகமூடிகளை வடிவமைப்பது எப்படி என்று நாங்கள் பயிற்சி பெறும் பெண்களுக்குக் கற்றுத்தந்தோம். இதற்காக நாங்கள் அவர்களுக்குச் சம்பளமும் வழங்கினோம். இதனால், எல்லாரும் நன்மை பெற்றார்கள்'' எங்கிறார் சிங்க்ளா.

இன்னொரு குறிப்பிட வேண்டிய திட்டம், மெய்நிகர் கட்டுரை எழுதுதல்



*RC பட்டியாலா மிட்டவுன் அனாதை குழந்தைகளுக்கு புத்தாடைகள் அளித்தது.*

போட்டி. இதில் 2,400 பள்ளி மாணவர்கள் பங்கேற்றார்கள். நிறைவுப் போட்டியில் பஞ்சாப் மாநிலக் கல்வி அமைச்சர் விஜய் இந்தர் சிங்க்ளா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். இந்தச் சங்கம் இரண்டு நாள் இணைய வழி RYLA ஒன்றை நடத்தியது. இந்த நிகழ்ச்சிக்கு PRID பரத் பான்ட்யா தலைமை தாங்கினார், மாவட்டம் முழுவதிலுமிருந்து 1,900 பேர் இதில் பங்கேற்றார்கள். பள்ளிக் குழந்தைகளுக்கான ஓவியப் போட்டி, இளைஞர் களுக்கான பொதுப் பேச்சுப் போட்டி ஆகியவை இந்தச் சங்கம் நடத்திய வேறு சில நிகழ்வுகள்.

நாங்கள் அவ்வப்போது சென்று பார்க்கும் ஆதர



*சங்கத்தின் தையல் பயிற்சி மையத்தில் பெண்கள்.*

வற்றோர் இல்லங்கள், முதியோர் இல்லங்களுக்குத் தூய்மைப்படுத்திகள் மற்றும் முகமூடிகளை வழங்குகிறோம்'' என்கிறார் அவர். இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் அவ்வப்போது தங்களுடைய பிறந்த நாட்கள், தங்கள் வாழ்க்கையில் பிற முக்கிய நாட்களை இங்குள்ளவர்களோடு கொண்டாடுகிறார்கள். இவர்கள் இந்த இல்லங்களில் உள்ள மக்களுக்குப் போர்வைகள் மற்றும் காலணிகளை வழங்கினார்கள்.

சென்ற ஆண்டில் செயல்படுத்தப்பட்ட வேறு சில செயல்பாடுகள்: இரண்டு ரத்த தான முகாம்கள், இரண்டு மருத்துவ முகாம்கள், அரசுப்பள்ளிகளில் உள் கட்டமைப்பை மேம் படுத்துதல் மற்றும் மரக் கன்றுகள் நடுதல். இந்தச் சங்கம் தன்னுடைய 12 கோவிட் தடுப்பு ஊசி மையங்களின் வழியாக 5,000 மக்களுக்குத் தடுப்பு ஊசி வழங்க உதவியுள்ளது.

சிங்க்ளாவின் இவருடைய ரோட்டரி பேரார்வத்துக்குக் காரணம், RC பட்டியாலா உறுப்பினரான இவருடைய தந்தை.■

## மேற்கு வங்கத்தில் புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரோட்டரி நிவாரண உதவி

ரோட்டரி செய்திக்குழு

இந்த ஆண்டு மே மாதம், யாஸ் புயல், மேற்குவங்க மாநிலம், மிட்னாபூர் மாவட்டத்தில் உள்ள கடலோர கிராமமான மந்தரமணியை தாக்கியதில் ஆயிரக்கணக்கான குடும்பத்தினர் வீடுகளை இழந்தனர். அவர்களின் துயரங்களைப் போக்கும் விதத்தில் RID 3291க்கு உட்பட்ட கொல்கத்தா மிட் சவுத் ரோட்டரி சங்கம் நிவாரண முகாம் நடத்தி புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவி அளித்தது.




5 கிலோ அரிசி, உப்பு, கடுகு எண்ணெய், உருளைக்கிழங்கு, சர்க்கரை, மஞ்சத்தூள், சிவப்பு மிளகாய் ஆகியவை அடங்கிய ரூ.500 மதிப்புள்ள அத்தியாவசிய மளிகைப் பொருள்கள் கடலோர கிராமத்தைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

இதேபோல RC கொல்கத்தா மெஜஸ்டிக், இங்கிலாந்தில் உள்ள RID 1145க்கு உட்பட்ட RC அஷ்டெட்டுடன் இணைந்து தெற்கு 24 பர்கானா மாவட்டம், நம்கானா பகுதிக்கு உட்பட்ட உத்தர் சந்தன்பிரி கிராமத்தில் புயலால் பாதிக்கப் பட்ட 50 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. தண்ணீர் சுத்திகரிப்பு செய்யும் நான்கு இயந்திரங்களும் நன்கொடையாக வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் DG பிரபிர் சாட்டர்ஜி பங்கேற்றார்.■

# நீங்கள் சரியான தீவிரத்துடன் உடற்பயிற்சி செய்கிறீர்களா?

ஷீலா நம்பியார்

நாள்தோறும் 30 நிமிடங்கள் டிரெட்மில்லில் நடக்க வேண்டும் என்று உங்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். நீங்களும் இசையைக் கேட்டபடி பொழுதுபோக்காக நடக்கிறீர்கள், மதிய உணவுக்கு என்ன சாப்பிடலாம் என்று யோசிக்கிறீர்கள். உடலைப் பராமரிக்க ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் 30 நிமிடம், அவ்வளவுதான்! இது பெரிய சிரமமில்லை. உங்களால் இதைச் செய்ய இயலும்.

குறைந்த தீவிரம் கொண்ட உடற்பயிற்சி கூடுதல் கொழுப்பை எரிப்பதாக ஊடகங்கள் அலறுகின்றன. அப்படியானால், அதுதான் சிறந்தது, இல்லையா? நீங்கள் பூங்காவில் மெதுவாக, கொஞ்சமும் வியர்வை வராமல் நடக்கிறீர்கள். இது மிக நேரடியாகவும், எளிதாகவும் தோன்றுகிறது. இதை நீங்கள் ஏன் முன்பே யோசிக்கவில்லை?

இன்னும் கூடுதல் நேரத்துக்கு இன்னும் குறைந்த தீவிரத்தில் செய்யப்படும் உடற்பயிற்சி, அந்தக் குறிப்பிட்ட உடற்பயிற்சிக்குத் தேவைப்படும் ஆற்றலை முதன்மையாக உங்கள் கொழுப்புச் சேமிப்புகளிலிருந்து பெறுகிறது என்பது உண்மை. எனினும், அந்த நாள்/வாரம்/மாதத்தின் நிறைவில் செலவழிக்கப்பட்ட ஆற்றலுக்கும் நுகரப்பட்ட ஆற்றலுக்கும் உள்ள வேறுபாடுதான் முக்கியம், அதுதான் உங்கள் எடையைத் தீர்மானிக்கிறது.

நீங்கள் மணிக்கு 3 கிமீ விரைவில் நடக்கிறீர்கள், 60 நிமிடங்களில் சுமார் 150–200 கலோரிகளை எரிக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் இன்னும் குறைவான தீவிரத்தில் உடற்பயிற்சி செய்வதால், இந்தக் கலோரிகளில் பெரும்பாலானவை உங்கள் கொழுப்புச் சேமிப்புகளிலிருந்து பெறப்படலாம்; ஆனால், எடை இழப்பு, அதைவிட முக்கியமாக, எடை மேலாண்மை ஆகியவற்றுக்குத் தொலைநோக்குக் கலோரிப் பற்றாக்குறைதான் முக்கியம்.

எடுத்துக்காட்டாக, அந்த ஒரு மணி நேரத்தில் நீங்கள் இன்னும் உயர்ந்த தீவிரத்தில் உடற்பயிற்சி செய்து, சுமார் 300–500 கலோரிகளை எரித்திருந்தால், தொலைநோக்கில், நீங்கள் கலோரிப் பற்றாக்குறையைப் பராமரிக்க இயலும் வாய்ப்புகள் இருக்கும் (இது எடைக் குறைப்புக்கு அவசியம்). ஒரு தனிப்பட்ட நிகழ்வில் செலவழிக்கப்பட்ட கலோரிகளின் எண்ணிக்கையைவிட, நீடித்த ஒரு காலகட்டத்தில் எரிக்கப்படும் கலோரிகளின் மொத்தத் தொகை மேலும் முக்கியமாகும்.

இன்னொரு முக்கியமான கண்டுபிடிப்பையும் இங்கு சுட்டிக் காண்பிக்கவேண்டும். உங்களால் மேலும் உயர்ந்த தீவிரங்களில்



உடற்பயிற்சி செய்ய இயலுகிறது என்றால், அதைச் செய்வதன்மூலம் உடற்பயிற்சிக்குப்பிறகு ஆற்றலும், அதன்மூலம் கலோரிகளும் தொடர்ந்து கூடுதலாக நுகரப்படும். கார்டியோ அல்லது எடைப் பயிற்சி என்று உடற்பயிற்சியின் தீவிரம் கூடுதலாக ஆக, உடற்பயிற்சிக்குப்பிறகு எரியும் கலோரிகளின் எண்ணிக்கையும் மிகுதியாகும், சில நேரங்களில் 6–12 மணி நேரம் வரைகூட இது நீடிக்கும். இந்த மிகுதியாதல் சிறிய அளவில் இருந்தாலும், கொழுப்பு இழப்புக்கு மதிப்பு மிக்கதாகும். இதன் பெயர் EPOC அல்லது, உடற்பயிற்சிக்குப் பிந்தைய கூடுதல் ஆக்சிஜன் நுகர்தல். மேலும் கூடுதலான தீவிர உடற்பயிற்சி கள் மற்றும் வலிமைப் பயிற்சி க்குப்பிறகு EPOC மிகுதியாகிறது.

### MET என்றால் என்ன?

உங்கள் உடற்பயிற்சியின் தீவிரம் METஆல் வரையறுக்கப்படுகிறது. இது, "வளர்சிதைமாற்றச் சமன்" என்பதன் சுருக்கமாகும். ஓய்வெடுக்கும் போது உங்கள் வளர்சிதைமாற்ற விகிதத்துடன் ஒப்பிடும்போது, உடற்பயிற்சியின்போது உங்கள் வளர்சிதை மாற்ற விகிதம் எவ்வளவு என்பது தான் MET.

பொதுவாக, ஓய்வெடுக்கும்போது செலவழிக்கப்படும் ஆற்றல் 1 MET என அழைக்கப்படுகிறது. நீங்கள் உடல் சார்ந்த செயல்பாடுகளை மிகுதியாக்கும் போது, உங்கள் METகள் கூடும்.

எடுத்துக்காட்டாக, தோட்ட வேலை செய்யும்போது நீங்கள் சுமார் 4–5 METல் பணியாற்றுவீர்கள். பூங்காவில் மெல்ல நடந்தால் அது சுமார் 3–5 METகள் ஆகும். ஒரு செயல்பாட்டின் MET 4 என்றால், ஓய்வில் இருப்பதைவிட 4 மடங்கு கடினமாக நீங்கள் பணியாற்றுகிறீர்கள் என்று பொருள்.

உங்களுடைய தேவையான MET எப்படிக் கணக்கிடப்படுகிறது?

தேவையான MET என்பது, ஒரு தனிநபருடைய வயது மற்றும் அடிப்படை வாழ்க்கைமுறையைப் பொறுத்துக் கணக்கிடப்படுகிறது. இது, உடலியல் அடிப்படையில் இயல்பான மக்களுக்குதான் பொருந்தும். இதயப் பிரச்சனை கொண்டவர்கள், அறுவைச் சிகிச்சைக்குப்பிறகு தேறிவருகிறவர்கள் அல்லது உடல் சார்ந்த குறைபாடு கொண்டவர்களை வேறுவிதமாக நடத்தவேண்டும்.

மிகக் கூடுதலான நன்மை களைப் பெறுவதற்கு உங்கள் உடற்பயிற்சியின்போது உங்களுக்கு எவ்வளவு METகள் தேவை என்பதை ஓர் உடற்தகுதித் தொழில்வல்லுனரால் உங்களுக்கு அறிவுறுத்த இயலும். ஒவ்வொரு செயல்பாடும் வெவ்வேறு METஐக் கொண்டிருக்கும். இது உங்கள் கார்டியோ இயந்திரத்தில் உள்ள ஓர் எளிய எண்ணால் குறிப்பிடப்படுகிறது என்பதால், எளிதில் அளக்கக்கூடிய, மீண்டும் செய்யக்கூடிய ஓர் இலக்கை இது உங்களுக்கு அளிக்கிறது, இதை நோக்கி நீங்கள் பணியாற்றலாம்.

### உங்களால் உங்களுடைய METஐக் கணக்கிட இயலாவிட்டால் என்ன செய்வது?

உங்கள் உடற்பயிற்சியின் தீவிரத்தை மதிப்பிடும் இன்னொரு வழி, காணப்படும் உழைப்பு விகிதத்தை அல்லது RPE அளவைப் பயன்படுத்துவது. இது, உங்கள் உடற்பயிற்சியின் போது நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்பதன் ஓர் அகநிலையான அளவீடு ஆகும். 1முதல் 10வரையான அளவுகோலில், அசையாமல் அமர்ந்திருப்பது 1 ஆக இருக்கும். வியர்வை இல்லாமல் வீட்டுக்குள் அங்குமிங்கும் நகர்கிற நடுத்தரமான செயல், இந்த அளவு கோலில் சுமார் 5 ஆக இருக்கும். நீங்கள் ஓர் உடற்பயிற்சியின் தீவிரத்தை மிகுதியாக்க ஆக்க, நீங்கள் மேலும் மேலும் மூச்சு வாங்கும் நிலைக்கு வருகிறீர்கள், கூடுதல் வேலைப் பளுவுக்கு இடமளிப்பதற்காக உங்கள் இதயம் மேலும் விரைவாகத் துடிக்கிறது.

சுமார் 7 என்ற தீவிரத்தில், உங்களால் பேச இயலும், ஆனால், சுமார் ஒரு சொற்றொடர்தான் பேசுவீர்கள். 8–9ல் உங்களால் உடற் பயிற்சியின் போது ஓரிரு சொற்களுக்குமேல் பேச இயலாது. 9–10ல் நீங்கள் வேலையில்தான் கவனம் செலுத்துவீர்கள்; ஒரு சொல் பேசுவதற்குக்கூட அது உங்களை அனுமதிக்காது.

உடற்பயிற்சிக்கூடங்களில் உள்ள பெரும்பாலான கார்டியோவாஸ்குலார் கருவிகளின் கட்டுப்பாட்டுப் பலகங்களில் MET ஒரு தெரிவாக இருக்கும், உடற்பயிற்சியின்போது அதை எளிதில் காணலாம். இயந்திரத்தின் விரைவு, சாய்வு அல்லது வேலைப்பளுவை மிகுதியாக்குவதன்மூலம் உங்களுடைய MET மிகுதியாவதை/குறைவதை நீங்கள் காண்பீர்கள்.

உங்களுடைய உடற்பயிற்சியின் ஒட்டுமொத்தக் காலகட்டத்துக்கும் உங்களுடைய தேவையான வளர்சிதைமாற்றச் சமனை உங்களால் தக்கவைக்க இயலாமலிருக்கலாம். அவ்வப்போது அதை எட்டுவதுதான் முக்கியம்.

- **குறைந்த தீவிரம்:** இது, உழைப்பு அளவு கோலில் சுமார் 3–5 நிலை ஆக இருக்கும். உடற்பயிற்சியின் தொடக்கத்தில் அல்லது நீங்கள் நீண்ட மிதிவண்டிப் பயணம் அல்லது மெதுவான, தளர்வான நடை போன்ற மேலும் நீண்ட ஓர் உடற்பயிற்சியில் ஈடுபடுகிறீர்கள் என்றால், இந்தத் தீவிரத்தில் உடற்பயிற்சி செய்யலாம்.
- **நடுத்தரத் தீவிரம்:** இது சுமார் 5–7 நிலை ஆக இருக்கும்; இங்குதான் உங்களுடைய பெரும்பாலான உடற்பயிற்சிகள் அமையவேண்டும். இந்த நிலையை வாரத்துக்குச் சுமார் 3–4 முறை முயன்று பாருங்கள்.
- **உயர்ந்த தீவிரம்:** இது சுமார் 8–9 நிலை ஆக இருக்கும். இவற்றை வாரம் ஒருமுறை அல்லது இரண்டு முறை செய்யலாம், இவற்றினிடையே நிறைய ஓய்வு இருக்கவேண்டும்.

மனித உடல் முன்னேற்றத்துக்கான பெரிய தகுதியைக் கொண்டுள்ளது. ஆனால், அதைப் பெறுவதற்கு நாம் அதற்குச் சவால் விடவேண்டும்.

இன்னொருபக்கம், உங்கள் METஐ அடிக்கடி எட்ட இயலுதல், அதை மேலும் கூடுதலான நேரத்துக்குப் பராமரிக்க இயலுதல் ஆகியவை உங்களுக்கு ஒரு சாதனை உணர்வை, மன நிறைவை அளிக்கும், உங்கள் உடலை இன்னும் உயர்ந்த வரம்புகளுக்குச் செல்லத் தூண்டும்.

ஒருவேளை, நீங்கள் பல நாட்களாக உடற்பயிற்சியை மறந்துவிட்டீர்கள்,

உங்கள் உடற்பயிற்சிக் காலணிகள் எங்கு உள்ளன என்பதுகூட உங்களுக்கு நினைவில்லை என்றால், இன்னும் குறைந்த தீவிரத்தில் உடற்பயிற்சியைத் தொடங்குவது நல்லது.

சில நாட்களில் நீங்கள் சும்மா நடக்கத்தான் விரும்புவீர்கள், வெறுமனே கை, கால்களை நீட்டத்தான் விரும்புவீர்கள், அல்லது, ஓய்வெடுக்க விரும்பு வீர்கள். இவையெல்லாம் நியாயமானவைதான், ஏற்றுக் கொள்ளக்கூடியவைதான்.

எடையில்மட்டும் கவனம் செலுத்தாதீர்கள், உங்கள் உடற்தகுதி நிலைகளிலும் கவனம் செலுத்துங்கள், நீங்கள் உங்கள் உடலுக்குப் போதுமான அளவு சவால் விட்டால், இது மேம்படும். ஒரே நேரத்தில் நீங்கள் நடக்கும் தொலைவைக் கூடுதலாக்க முயலுங்கள். உங்கள் நடையில் சாய்வுகளைச் சேர்க்க முயலுங்கள். இன்னும் கூடுதலான எடைகளைத் தூக்க முயலுங்கள்.

இதன் ஆசிரியரை sheelanambiar@gmail.com என்ற இணையதளத்தில் தொடர்பு கொள்ளலாம். Website:www. drsheelanambiar.com

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

**லக்ஷ்யா – 3:** TRF இலக்கு அமைத்தல் 2021–22 ஜூன் 8, 2021 அன்று, TRF இலக்கு அமைத்தல் நிகழ்வு: லக்ஷ்யா 3 மெய்நிகர் முறையில் நடைபெற்றது. அறங்காவலர் குலாம் வாகன்வடி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் RIDகள், EMGAகள், RRFCகள், ARRFCகள், DGsE மற்றும் RISAOன் TRF ஊழியர்கள் கலந்துகொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியின் தலைமை விருந்தினரான RI தலைவர் சேகர் மேத்தா, TRF குழு 2021–22க்கு ஓர் ஊக்கமளிக்கும் உரையை வழங்கினார். “எல்லைகளை உயர்த்துவோம்” என்ற தலைப்பிலான அவருடைய பேச்சு, இலக்கு அமைக்கும் நிகழ்ச்சிக்கான முன்னுரையாக அமைந்தது, அந்த நிகழ்ச்சியில் DGக்கள் மாவட்டத் தலைவர்களாகத் தங்கள் ஆண்டின் நிதி திரட்டல் இலக்கு களை உறுதிப்படுத்தக் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

வாகன்வடி தன்னுடைய வரவேற்புக் குறிப்பில், ஆண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுடைய ஆதரவுடன் அறிவார்ந்த, எட்டக்கூடிய TRF இலக்குகளை அமைக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். PRID கமல் சங்வி, “இளம்பிள்ளைவாதத்தை நீக்குதல்: நம்முடைய இன்னும் முடியாத வேலை” என்ற தலைப்பில் பேசினார், உலகிலிருந்து இளம்பிள்ளைவாதம் அகற்றப்படும்வரை இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து ஆதரிக்கும்படி ரோட்டரி தலைவர்களை ஊக்குவித்தார். PRID Dr பரத் பான்ட்யா ஆண்டு நிதியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார், இந்தத் திட்டத்துக்கான பங்களிப்பு தொடர்ந்து குறைந்துவரும் சூழலில் இது மிக முக்கியம் என்றார். RISAO ஊழியர்கள் பல TRF நிகழ்ச்சிகள், கொள்கைகளைப்பற்றிப் பேசி னார்கள். RIDகள், அறங்காவலர் மற்றும் பிராந்தியத் தலைவர்களுடைய வழிகாட்டுதலின்கீழ் DGகள் இலக்கு அமைப்பதுடன் இந்த நிகழ்ச்சி நிறைவடைந்தது.


RIDகள் மகேஷ் கோட்பாகி மற்றும் A S வெங்கடேஷ் TRF குழுவினரிடம் பேசினார்கள், அறக்கட்டளையை வலுவாக்க இன்னும் பெரிய உயரங்களை எட்டவேண்டும் என்று அவர்களை ஊக்குவித்தார்கள்.

**உங்கள் இணையத் தளங்களை மேம்படுத்துங்கள்**

இன்றைய ஊடக, தரவு ஆர்வலர் உலகில், மிக முக்கியமான சங்கச் சேவைச் செயல்பாடுகளில் ஒன்று, மேம்படுத்தப்பட்ட இணையத் தளம், சமூக ஊடகம் மற்றும் பொதுத் தோற்ற மேலாண்மையைக் கொண்டிருத்தல். செயல்திறன் கொண்ட ஓர் இணையத் தளத்துக்கு, இந்த யோசனைகள் உதவும்:

- Rotary.orgல் உள்ள, ரோட்டரி அங்கீகரித்த சின்னப் பொருட்களைப் பயன்படுத்துங்கள்
- எப்போதும் இப்போதைய தலைமைக் கருப்பொருளைப் பயன்படுத்துங்கள்
- எப்போதும், RI மற்றும் மாவட்ட ஆகிய இரண்டு இணையத்தளங்களையும் உங்கள் தளத்தில் இணையுங்கள்
- உங்கள் சங்கத்தின் கூட்ட இடம், நேரத்தை நன்கு தெளிவாகக் காண்பியுங்கள்
- உங்கள் எங்களைப்பற்றி” மற்றும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்” இணைப்புகளை நன்கு தெளிவாகக் காண்பியுங்கள்.
- சங்க இணையத் தளங்களில், சேவைத் திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளின் புகைப்படங்களுடன் இப்போதைய செய்திகள் முதல் பக்கத்தில் அல்லது செய்திப் பக்கம் ஒன்றுக்கான இணைப்பின் வழியாக எப்போதும் இடம்பெறவேண்டும். சங்கத்தின் முதல் பக்கத்தில், 30 நாட்களுக்குள்ளான ஒரு சங்கச் செய்தியாவது இருக்கவேண்டும்.
- சங்கத்தின் முதல் பக்கத்தில் எதிர்வரும் பேச்சாளர்கள், அவர்களுடைய தலைப்புகளின் பட்டியல் இருக்க வேண்டும்
- சங்கத்தின் முதல் பக்கத்தில் எதிர்வரும் சங்க நிகழ்வுகளின் பட்டியல் இருக்கவேண்டும்
- சங்கத்தின் முதல் பக்கத்தில், சங்கத்தின் சமூக ஊடகப் பக்கங்கள் அனைத்துக்குமான இணைப்புகள் இருக்கவேண்டும்
- சங்கத்தின் முதல் பக்கத்தில் உங்கள் சங்கத்தின் அலுவலர்கள் பட்டியல் இருக்கவேண்டும்
- உங்கள் சங்கத்தில் ஒரு செய்தி மடல் இருந்தால், செய்தி மடலில் இணைவதற்கான கோரிக்கையைச் சேருங்கள்
- சங்க இணையத் தளத்தில் உள்ள இணைப்புகளை அவ்வப்போது சரிபார்க்கவேண்டும், அவற்றில் பிரச்சனை இருந்தால் சரிசெய்யவேண்டும். ■


# On the racks




## Hisila

Author : **Hisila Yami**
Publisher : **Penguin Random House India**
Pages : **384; ₹499**


Hisila Yami in her political memoir writes about her life as a Nepali politician and an architect. She talks about being a young student activist in 1978 and recounts the 1990 uprising against the Panchayat regime, a partyless type of governance initiated by King Mahendra by sidelining the dominant Nepali Congress, which ruled Nepal from 1960–90. She was one of the prominent women leaders in that political uprising. The book gives insight into her personal life from her marriage to a fellow architect and politician, Baburam Bhattarai, who went on to become Nepali PM to her struggles as a mother and a politician. She also recalls her student years in Delhi studying architecture and then becoming the president of the All-Nepal Women's Association. Her arrest for her anti-monarchy stance and how she went underground in 1996 during the People's War in Nepal were narrated in an interesting manner. She became a politburo member of the CPN (Maoist) which was also nicely captured in crisp words.




## Inside Money

Author : **Zachary Karabell**
Publisher : **Penguin Press**
Pages : **448; ₹2,562**

A walk through the history of the private investment firm Brown Brothers Harriman, this book explores its central role in American wealth creation and the rise of US as a global power. Historian Karabell digs deep into and examines the long history of this financial services firm in a political context. He reveals some uncomfortable truths of the intertwined firm, such as its deep involvement in the cotton economy in southern America that implies that the firm may have supported slavery in the past. The book also gives insight into the leadership of Alexander Brown, who set up the first investment bank in the US, by joining hands with his sons at the Alex Brown and Sons Inc. This company endured wars, banking panics and stock market crashes over decades. The book offers an interesting account of the firm's big push into advisory, wealth management, commercial banking, and investor services for corporates and high net worth clients.




## What Happened to You?

Author : **Bruce D Perry and Oprah Winfrey**
Publisher : **Flatiron Books**
Pages : **304; ₹2,108**

Oprah Winfrey, American talk show host and TV producer, along with Dr Bruce D Perry, American psychiatrist and senior fellow at the Child Trauma Academy in Houston, Texas, analyses the effects of trauma on the brain. They discuss both the emotional and biological changes the trauma creates. Dr Perry explains how childhood trauma can profoundly affect an adult's life. The book alternates between sections written by Oprah, as she recalls events from her life, and Perry who uses anecdotes from his practice to explain concepts about the brain's response to trauma in a conversational tone. There are discussions on drug addiction and how people use artificial means to restore some sense of balance in their lives. In other chapters they discuss love, identifying trauma and the healing process.

Compiled by Kiran Zehra

## RC ஆடுதுறை — RID 2981



கோட்டூர் கிராமத்தில் கோவிட் தடுப்பு மருந்து வழங்கல் முகாம் நடத்தி, 300 பேருக்குத் தடுப்பு ஊசி போடப்பட்டது.

## RC சோனிபாட் மிட்-டவுன் — RID 3012

100 குடும்பங்களுக்கு மளிகைப் பொருள்கள் வழங்கப் பட்டன. சிறப்பு விருந்தினரான சோனிபாட் தலைமை நீதித்துறை நீதிபதி ரமேஷ் சந்தர் சங்க உறுப்பினராகச் சேர்க்கப்பட்டார்.



## RC சேலம் சென்ட்ரல் — RID 2982



அன்னபூர்ணா நாளை முன்னிட்டு, மேட்டூர் நகரத்துக்கு அருகிலுள்ள கொளத்தூர் கிராமத்தில் 75 மாற்றுத் திறனாளி களுக்கு ரூ.75,000 மதிப்புள்ள அரிசி, மளிகைப் பொருள்கள் வழங்கப்பட்டன.

## RC நாசிக் கோதாவரி — RID 3030

RIன் DEI கொள்கைப்படி, இந்தச் சங்கம் கல்கி சுப்ரமணியம் என்ற திருநங்கயரை உறுப்பினராகச் சேர்த்தது. இவர், மூன்றாம் பாலினச் சமூகத்துக்கு ஆற்றல் அளிக்கப் பணியாற்றும் சகோதரி அறக்கட்டளையின் நிறுவனர் ஆவார்.



## RC தில்லி சவுத் சென்ட்ரல் — RID 3011




ஆரவல்லி மலைகளில் ஓர் ஏக்கர் தரிசு நிலத்தில் வன்யகரன் என்ற பெரிய காடு வளர்ப்புத் திட்டம் செயல் படுத்தப் பட்டது, சுமார் 7,000 உள்ளூர் மரங்கள் நடப் பட்டன.

## RC ஜோத்பூர் — RID 3053

இந்தச் சங்கம் ரோட்டரி ரத்த வங்கியுடன் சேர்ந்து 60 மருத்து வர்களைக் கொரோனாப் போராளிகளாகப் பெருமைப் படுத்தியது.



# செய்திகள்

## RC ஃபக்வாரா மிட்-டவுன் — RID 3070



ஃபக்வாராவிலுள்ள குருத்வாரா சுக்செயின் சாஹேபில், பறவையியல் அன்பர்களுக்குப் பறவைகளுக் கான நீர்ப் பானைகள் வழங்கப்பட்டன.

## RC பாலியா கலன் — RID 3120



பாலியா கலன் குருத்வாரா சாஹேபுக்கு ரூ.1.02 லட்சம் மதிப்புள்ள இரண்டு ஆக்சிஜன் செறிவூட்டிகள் நன்கொடையாக அளிக்கப்பட்டன. ஆக்சிஜன் உருளைகளை வாங்குவதற்கு ரூ.31,100 பண உதவியும் அளிக்கப்பட்டது.

## RC பிவானி டௌன்-டவுன் — RID 3090



அருணா தன்வர், டோக்கியோவில் நடைபெறவுள்ள இணை ஒலிம்பிக்ஸில் டேக்வாண்டோ விளையாட்டில் இந்தியாவின் சார்பாகக் கலந்துகொள்ளத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். கைகளில் சிதைவு நிலையைக் கொண்ட இவர், பல துன்பங்களைக் கடந்துவந்து வென்றுள்ளார்.

## RC பன்வெல் இன்டஸ்ட்ரியல் டவுன் — RID 3131



பன்வெல் மகாநகர் பாலிகா உதவியுடன், ரோட்டரி சமூக மையத்தில் கோவிட் தடுப்பு மருந்து வழங்கல் மையம் அமைக்கப் பட்டது, துண்டுப் பிரசுரங்கள், சமூக ஊடகப் பரப்புரைமூலம் இதுபற்றிய விழிப்புணர்வு உண்டாக்கப்படுகிறது.

## RC கான்பூர் — RID 3110



ரோட்டரி ஷாஹீத் பூங்காவில் அமைக்கப் பட்டுள்ள ரோட்டரி முகக்கவசம் வங்கியை UP அமைச்சர் சதீஷ் மஹானா தொடங்கி வைத்தார், இந்த விழாவில் IPDG தினேஷ் சந்த் ஷுக்லா கலந்துகொண்டார்.

## RC சோலாப்பூர் நார்த் — RID 3132



உள்ளூர்ச் சுடுகாட்டில் பிணங்களைத் திறந்த நிலையில் எரிப்பதால் உண்டாகும் மாசைக் குறைப் பதற்காக, ஓர் எரிப்புக் கூண்டு நன்கொடையாக அளிக்கப்பட்டது.

## RC சூலூர்பெட் — RID 3160



IPDG சின்னப்ப ரெட்டி, DGE வாமினா சதீஷ் பாபு ஒரு மகிழ்ச்சிப் பள்ளியைத் தொடங்கி வைத்தார்கள், திட்டச் செலவான ரூ.4.95 லட்சத்தை Rtn பாலு மோகன் ராவ் வழங்கினார்.

## RC பெங்களூர் நார்த் — RID 3190

வேலையும் இல்லாமல் உணவும் இல்லாமல் பெங்களூரில் சிக்கியுள்ள புலம் பெயர்ந்த குடும்பங் களுக்கு நாள் தோறும் 350 உலர் பங்கீட்டுப் பொருள் பொதிகள், 100 புதிதாகத் தயாரிக்கப்பட்ட உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படுகின்றன.



## RC லோட்டெ — RID 3170




Rtnகள் சுபாஷ் ரஹோதே, ஷஷாங்க் ரெட்டி, Dr சந்தீப் சர்வெ, தொடக்க நல மையம் ஒன்றுக்கு ஒரு கணினி, இரண்டு மொபைல் தொலைபேசிகளை வழங்கினார்கள்.

## RC கோயம்பத்தூர் கிரீன் சிட்டி — RID 3201

ரூ.40 லட்சம் மதிப்புள்ள ஒரு CSR திட்டத்தின் கீழ், மைக்கேல் பணிப் பள்ளியில் ஒரு கணினி ஆய்வகம் தொடங்கப் பட்டது. வெவ்வேறு பள்ளிகளில் இந்தச் சங்கம் அமைத்துள்ள 10 ஆய்வகங்களில் இதுவும் ஒன்றாகும்.



## RC குந்தப்புரா சவுத் — RID 3182

குந்தப்புரா வட்டம் சித்தூருவில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியின் 10ம் வகுப்பு மாணவர் களுக்குப் பதினைந்து கணினி மேசை கள் வழங்கப் பட்டன. இந்த விழாவில் PDG A S N ஹெப்பார், சங்கத்தின் IPP உத்தம்குமார் ஷெட்டி பங்கேற்றார்கள்.



## RC கண்ணனூர் — RID 3204

இணைய வகுப்புகளில் கலந்து கொள்வதற் காகத் தலப் உயர் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு ஸ்மார்ட் ஃபோன்கள் பெற்றோர் ஆசிரியர் அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டன.



# செய்திகள்

## RC செங்கன்னூர் — RID 3211



இந்தச் சங்கத்தின் தனித்துவமான ஒரு திட்டத் தின்கீழ், மாற்றுத் திறனாளி ஒருவருக்குப் புதிதாகக் கட்டிய வீடு ஒன்றைக் கோட்டயம் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் ஜோஸ் ஜோசஃப் வழங்கினார்.

## RC ராஞ்சி — RID 3250

உள்ளூர் நிர்வாகத்தின் ஆதரவுடன், இந்தச்சங்கத்தின் சொந்த வளாகத்தில் நடத்தப்படுகிற கோவிட் தடுப்பு மருந்து வழங்கல் மையம் இதுவரை 6,500க்கும் மேற் பட்டவர்களுக்குத் தடுப்பு மருந்து வழங்கியுள்ளது.



## RC யார்ன் சிட்டி நாகர்கோயில் — RID 3212

சென்னை AJM அறக்கட்டளையுடன் கைகோத்து, காவல் துறையினர், இதழாளர்கள், செவிலியர்கள், பேரிடர் மேலாண்மை ஊழியர்கள், தூய்மைப் பணியாளர்கள் போன்ற முன்களப் பணியாளர்களுக்கு சுமார் ரூ.10 லட்சம் மதிப்புள்ள தூய்மைப் பொதிகள் வழங்கப்பட்டன.



## RC கட்டக் கோல்டன் ஸ்டார் — RID3262

இந்தச் சங்கம், J J சிறுவர் இல்லம் என்ற ஆதரவற்றோர் இல்லத்தில் வசிக்கும் 40 பேருக்குக் காலை உணவு வழங்கி ஆதரித்தது. ரோட்டரியன்கள் 65 மரக்கன்று களையும் நட்டார்கள், 30 மருத்துவர்களை அவர்களுடைய கோவிட் பணிக்காகப் பாராட்டினார்கள்.



## RC குவஹாத்தி சிட்டி — RID 3240

இந்தச் சங்கம், RC குவஹாத்தி மெட்ரோ இணைந்து, இந்த நகரில் உள்ள Dr B பொரோவா புற்றுநோய் மருத்துவமனை நோயாளிகளைக் கவனித்துக் கொள்ளும் சுமார் 400 பேருக்கு அன்னரத்னம் திட்டத்தின்கீழ் உணவு வழங்கினார்கள்.



## RC கல்கத்தா மெஜஸ்டிக் — RID 3291

சிறப்புக் குழந்தை களுக்கான தொழில் சார்ந்த பயிற்சி மையமாகிய பிரயாஸில், பழ ரசங்கள், பிஸ்கட்கள், கார்ன்ஃப்ளேக்ஸ் உள்ளிட்ட உணவுப் பொருட் கள் வழங்கப்பட்டன.




ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# காணாமல் போன "மாலி"யும் மொத்த உள்நாட்டு உற்பத்தியும்!

TCA ஸ்ரீனிவாசராகவன்

கடந்த வாரம் என் மனைவியுடன் மற்றுமொரு சண்டை நடந்தது. இந்த முறை மாலி அல்லது தோட்டக்காரருக்காக சண்டையிட்டுக் கொண்டோம். தோட்டக்காரர் முழு மாத சம்பளம் வாங்கிக் கொண்டு மாதத்தில் 15 நாள்கள் மட்டுமே வேலை செய்தாலும் மலர்ச் செடிகள் நன்றாக பராமரிக்கப்படுகிறது, செழிப்பாக வளர்கிறது என்றால் சரிதான் என்பது அவளது கருத்து. மாத சம்பளம் வாங்கும் ஒருவர் குறைந்தது மாதத்தில் 22 முதல் 24 நாட்களாவது வேலைக்கு வரவேண்டும் என்பது என்னுடைய கருத்து. எனவே தோட்டக்காரர் 7 முதல் 9 நாட்கள் வரை வராமல் இருப்பது குறித்து தான் எங்களிடையே சண்டை. அவர் மாதத்தில் பாதி நாட்கள் வந்து விட்டு இரட்டிப்பு சம்பளம் வாங்குவதாக நான், அவளிடம் விளக்கினேன். உடனே அவள், ஒரு நாளைக்கு ரூ.50 தருகிறோம் என்பதற்காக விதண்டாவாதம் செய்யாதீர்கள் என்றாள். பணத்துக்காகச் சொல்ல வில்லை. உண்மை என்னவெனில் அவர் வேலை செய்யாமலே மதிப்புக் கூட்டல் மூலம் உற்பத்தித்திறனை இரண்டு மடங்கு ஆக்குகிறார். உள்நாட்டு உற்பத்தி அளவீட்டு முறையில் இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறினேன். உங்கள் முட்டாள்தனமான பொருளாதார சிந்தனையை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? என்றாள் அவள்.

நான் சொல்லுவதை யாராலும் புறக்கணிக்க முடியாது. சண்டை தொடர்ந்தது. சுருக்கமாகச் சொன்னால் நான் தோற்றுப்போனேன். நான் ஆத்திரப் பட்டாலும் மாலி தொடர்ந்து அப்படியேதான் வேலை செய்கிறார். அவர் இந்திய புள்ளியியல் நடைமுறையையும் அரசாங்கத்தையும் முட்டாளாக்கி விட்டார். இந்தியப் பொருளாதாரம் வளர்ந்து வருகிறது. அதேசமயத்தில் உற்பத்தித்திறன் வீழ்ச்சி அடைகிறது. இதற்கெல்லாம் மாலிதான் காரணம்.

மதிப்பை இழந்த நான், மனதை திடப்படுத்திக் கொண்டு, சிறப்பாக தோட்டத்தை பராமரித்து வரும் எனது நண்பருடன் சில தகவல்களை பரிமாறிக்கொண்டேன். அவர் மொட்டை மாடியில் அமைத்திருந்த தோட்டம், சிறப்பாக இருந்தது. குறைந்தது 50 வகையான செடிகளைக் கொண்டிருந்தது அந்த தோட்டம். நான் அவரிடம் உங்கள் தோட்டக்காரர் எப்படி வேலை செய்கிறார்? என்று கேட்டேன். தோட்டக்காரர் எப்படியும் மாதத்துக்கு 10 அல்லது 12 நாட்கள் கண்டிப்பாக வருவார். சரி மீதமுள்ள நாட்கள்.? நானே தோட்டத்தை நேரடியாக கவனிக்கிறேன் என்றார். அவரின் வீட்டு தோட்டக்காரர் என் வீட்டு தோட்டக்காரரைவிட பரவாயில்லை. உற்பத்தித்திறனை மூன்று மடங்காக அதிகரித்து என்னை விடவும் புள்ளியியல் துறையை முட்டாளாக்குகிறார். இவர்கள் போன்ற தோட்டக்காரர்களைத்தான் நாம் நேசிக்க வேண்டும். எந்த மதிப்புக் கூட்டலும் இல்லாத அதிகாரிகளைவிட இந்த தோட்டக்காரர்கள் பரவாயில்லை. ஆனால், அதிகாரிகள் குறைந்தபட்சம் அலுவலகத்துக்காவது வருகை தருகிறார்கள். ஆனால், இந்தியாவில் உள்ள 'மாலி'க்கள் அதைக்கூட சரியாகச் செய்வதில்லை.

இதுபோன்ற விஷயங்களை தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டும் நண்பர் ஒருவரிடம் இதைக் குறிப்பிட்டேன். அவர், இரண்டு மாலிக்களை உதாரண மாகக் கூறுவது சரியாக இருக்காது என்று கூறினார். இதையடுத்து அதிக தரவுகளைத் திரட்ட ஆயத்தமானேன். என் மனைவி பேராசிரியராக இருக்கும் பல்கலைக்கழகம் சில ஆயிரம் ஏக்கர் பரப்பளவு உள்ளது. அதாவது அதற்கு தோட்டக்காரர்கள் பலர் தேவைப்படுவார்கள். ஆனால், இவர்கள் எல்லோரும் பல்வேறு நிலைகளில் இருக்கிறார்கள் என்பது அப்பட்டமாகத் தெரியவந்தது. இவர்கள் மாதம் தவறாமல் சம்பளம் பெறுகிறார்கள். ஆனால் பெரும்பாலும் வளாகத்தின் சுற்றுப்புறத்தில் உள்ள மேட்டுக்குடியினருக்கு வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு பல்கலைக்கழகத்தில் உற்பத்தித் திறன் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுகிறது. ஆனால், அவர்கள் வேலை செய்யும் இடத்திலிருந்து எந்த வருமானமும் வராது.

எனினும் பல்கலைக்கழகத்தில் உற்பத்தி அளவு என்று பார்த்தால் பூஜ்யம்தான். எனவே மீண்டும் அதே கதைதான். அதிக சம்பளம், உற்பத்தி இல்லை. ஆனால், அதே நேரத்தில் அருகில் உள்ள வீடுகளில் உற்பத்தி அதிகம், ஆனால் வருமானம் கிடையாது.

விமான சுற்றுச்சூழல் அளவியலாளரான எனது உறவினரிடம் இதுபற்றி கேட்டேன். அவர் மிகப்பெரிய புதிருடன் என்னிடம் திரும்ப வந்தார். போரில்லாத நேரத்தில், அமைதியாக இருக்கும்போது ராணுவ வீரர்கள் எதிரிகளைக் கொல்ல வேண்டாம். ஆனால், அவர்களுக்கு சம்பளம் தரப்படுகிறது. அதிக சம்பளம் ஆனால், உற்பத்தித்திறன் இல்லை என்று சுட்டிக் காட்டினார்.

மாலிக்களும் ராணுவ வீரர்களும் ஒரே மாதிரிதான் போலும்! மலர்ச் செடிகள் நன்றாக செழித்து வளரும் வரை, நாடு போரில் தோற்காதவரை சில ஆயிரம் ரூபாக்களை பற்றி யார் கவலைப் படப் போகிறார்கள்? எப்போதும் போல என் மனைவி சண்டையில் மட்டுமல்ல, போரிலும் வெற்றி பெற்றாள்.■

# செய்தித் துளிகள்

## மைக்கேல் ஏஞ்சலோவின் கைரேகைகள்?



லண்டனில் உள்ள விக்டோரியா மற்றும் ஆல்பர்ட் அருங்காட்சியக வல்லுநர்கள் 500 ஆண்டுகள் பழமையான A Slave என்னும் தலைப்பில் மெழுகில் உருவான சிலையில் கைரேகையை கண்டுபிடித்துள்ளனர். இத்தாலிய சிற்பி, மைக்கேல் ஏஞ்சலோவின் கைரேகையாக இது இருக்கலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். இந்த சிலை ரோமில், போப் இரண்டாம் ஜூலியஸ் கல்லறைக்கு தயாரிக்கப்பட்டதன் ஒருபகுதியாகும். இது இளம் நிர்வாண உருவம் கைகளால் முகத்தை மூடியவாறு உள்ளதை சித்தரிக்கிறது. இது கருஞ்சிவப்பு நிறத்தில் அச்சிடப்பட்டிருந்ததை வல்லுநர்கள் கண்டு பிடித்தனர். இது முடிக்கப்படாத பளிங்கு சிற்பத்திற்கான ஆரம்ப கட்ட மாதிரியாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## 12.3 மில்லியன் டாலர் கிரிப்டோ கரன்சியில் வாங்கப்பட்ட வைரம்



பேரிக்காய் வடிவம் கொண்ட 101 கேரட் வைரத்தை 12.3 டாலர் மதிப்புக்கு கிரிபோட் கரன்சியை பயன்படுத்தி வாங்கியுள்ளார் பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர். கிரிப்டோகரன்சி மூலம் வாங்கப்பட்டுள்ள விலையுயர்ந்த ஆபரணம் இதுதான் என்று இதை ஏலம்விட்ட சோத்பை நிறுவனம் தெரிவித்துள்ளது. 12.3 டாலர் மதிப்புக்கு சமமான கிரிப்டோ கரன்சி மூலம் இது வாங்கப்பட்டுள்ளது. (கிரிப்டோ கரன்சி என்பது உருவம் இல்லாத நாணயம். டிஜிட்டல் பரிவர்த்தனை போன்றது.) வழக்கமான பண நடைமுறைகளைத் தவிர பிட்காயின், எத்தேரியம் போன்றவையும் கரன்சிகளாக ஏற்றுக் கொள்ளப்படும் என்று இந்த ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது.

## விண்வெளிக்கு பயணிக்கும் மூன்றாவது இந்திய வம்சாவளிப் பெண்



விர்ஜின் கேலடிக் நிறுவனத்தின் அரசு விவகாரங்கள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கை களை கவனித்து வரும் துணைத் தலைவரான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெண் ஷ்ரீஷா பாண்ட்லா, பிரிட்டன் தொழிலதிபர் ரிச்சர்டு பிரான்சன் மற்றும் நான்கு பேருடன் சேர்ந்து விண்வெளிக்கு பயணம் சென்றுவந்துள்ளார். பிரான்சனுக்கு சொந்தமான விர்ஜின் கேலடிக் நிறுவனம் தயாரித்த யூனிட்டி விண்வெளிக் கப்பல் மூலம் இவர்கள் பயணித்துள்ளனர். ஆந்திர மாநிலம், குண்டூரில் பிறந்தவர் ஷ்ரீஷா என்றாலும் அமெரிக்காவின் ஹூஸ்டனில்தான் அவர் வளர்ந்தார்.

## LGBTQ லீகோ செட்



LGBTQ சமூகத்தின் ஒற்றுமைச் சின்னமான வானவில் கொடி யால் ஈர்க்கப்பட்டு, குடும்பத்தினர் தங்கள் LGBT குழந்தைகளை நேசிக்கிறார்கள், ஏற்றுக் கொள் கிறார்கள் என்பதை அறிய உதவும் வகையில் பொம்மை தயாரிப்பாளரான லீகோ நிறுவனம், LGBTQ கருபொருள் தொகுப்பை வெளியிட்டுள்ளனர். அதில் 346 துண்டுகள் மற்றும் 11 புள்ளி விவரங்கள் உள்ளன. வானவில் வண்ணத்துடன் தயாரிக்கப் பட்டுள்ளது. இந்த செட்டை வடிவமைத்தவர் மாத்யூ ஆஷ்டன்.

## முப்பரிமாண அச்சு இயந்திர வீடு



நெதர்லாந்தின் ஐண்ட்ஹோவன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் மைல்ஸ்டோன் திட்டக்குழு, உள்ளூர் நகராட்சி மற்றும் ரியல் எஸ்டேட் முதலீட்டாளர் வெஸ்டேடா மற்றும் மூன்று கட்டுமானத்துறையினர் இணைந்து புதிய தொழில்நுட்பத்தில் முப்பரிமாண அச்சு இயந்திரத்தின் மூலம் வீடு கட்டியுள்ளனர். இதை ஆங்கிலத்தில் 3D-Printed House என்கின்றனர். இந்த வீடு இரண்டு படுக்கை அறைகளுடன் விசாலமாக கட்டப்பட்டுள்ளது. ஐண்ட்ஹோவனில் உள்ள ஆலையில் 24 கான்கிரீட் கலவையுடன்கூடிய சிமெண்ட் பிளாக்குகள் தயாரிக்கப்பட்டு ஐந்து நாளில் வீடு கட்டி முடிக்கப் பட்டது. முப்பரிமாண இயந்திரம் கான்கிரீட் கலவையை ஒரு குழாய் வழியாக மென்பொருள் வழிகாட்டும் வடிவத்தில் ஊற்றுகிறது. கதவு, ஜன்னல்களுக்கு இடைவெளிவிட்டு சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. பின்னர் பொறியாளர் வந்து கதவு, ஜன்னல்களை பொருத்துவார். இந்த முப்பரிமாண அச்சு இயந்திர வீடு கட்டப்பட்டு டச்சு தம்பதிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S. கிருஷ்ணபிரதீஷ்.

Regn. No. TN/CCN/677/2019-2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019-2021
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

ADVT.

www.iisuniv.ac.in




IIS (deemed to be UNIVERSITY) JAIPUR

# Admissions Open 2021-22

For UG/PG/Ph.D./Professional programmes

**Option-1 : Apply Offline**
Visit our Campus between 9.30 am & 4.00 pm on all working days

**Option-2 : Apply Online**
https://onlineadmission.iisuniv.ac.in/

Direct Admission for **UG/PG & Professional** programmes

Admission to **Ph.D.** programmes through **Research Entrance Test (RET)** on **21.08.2021**

## Psychometric Testing available for Vocational & Career Counselling

https://onlineadmission.iisuniv.ac.in/node/3016

## FOR ACADEMIC COUNSELLING &/OR ANY SPECIFIC QUERIES :

9358819994 ARTS & SOCIAL SCIENCE | 9358819995 SCIENCE
9358819996 COMMERCE & MANAGEMENT | or mail at : admissions@iisuniv.ac.in

**FOR GENERAL ENQUIRY : +91 141 2397906-07, +91 141 2400160, 2401008**

# PROGRAMMES OFFERED

## UNDERGRADUATE PROGRAMMES

- **B.A.**
- **B.A. Hons.**
- **B.A.** (Journalism and Mass Communication)
- **B.F.A.** (Applied Art, Painting, Sculpture)
- **B.B.A.**
- **B.C.A.**
- **B.Com.**
- **B.Com. Hons.**
- **B.Sc.**
- **B.Sc. Hons.**
- **B.Sc. Hons.** (Home Sc.)
- **B.Sc. Hons.** (Multimedia & Animation)
- **B.Sc. Fashion Design**
- **B.Sc. Jewellery Design & Technology**

## INTEGRATED COURSES

- B.A. B.Ed.*
- B.Sc. B.Ed.*

*Approved by NCTE

## SPECIALIZED PROGRAMMES

- **B.Com. Hons.** (Proficiency in Chartered Accounting/ Proficiency in Company Secretaryship) Specialized programmes and separate academic calendars for aspirants of CA & CS.
- **B.Com. Hons.** (Applied Accounting and Finance) Accredited by ACCA, UK.

## SPECIALIZED CERTIFICATE PROGRAMMES

- **ICAI sponsored Certificate** programme for Accounting Technicians.
- **University of Cambridge,** U.K.'s Business English Certificates Tests of English

## BACHELOR OF VOCATION (B.VOC.) PROGRAMMES

- **B.Voc.** (Office Management and Secretarial Practices)
- **B.Voc.** (Banking and Financial Services)
- **B.Voc.** (Entrepreneurship and Business Innovation)
- **B.Voc.** (Digital Marketing)

*Approved by UGC

## POSTGRADUATE PROGRAMMES

- **M.A.-** Economics, English, French, Sociology, Geography, History, Political Science, Mathematics, International Relations, Public Administration, Psychology, Statistics
- **M.Sc.-** Biotechnology, Botany, Chemistry, Economics, Environmental Science, Geography, Information Technology, Mathematics, Microbiology, Physics, Psychology, Statistics, Zoology
- **M.Com. -** Accounting & Taxation, Business Studies, Financial Studies
- **M.Sc. Home Science -** Clothing and Textiles, Foods and Nutrition, Human Development
- **M.F.A. -** Applied Art (Graphic Design/Illustration), Print Making, History of Art, Painting, Sculpture (Portraiture, Creative Sculpture)
- **M.A.** Journalism & Mass Communication
- **M.A./M.Com./M.Sc.** Fashion Design
- **M.S.W.** (Master of Social Work)
- **M.B.A. (Semester Based)** Human Resource Management; International Business; Retail Management; Travel & Tourism Management; Finance; Advertising & Brand Management; Business Analytics; Innovation, Entrepreneurship and Venture Development
- **M.B.A. (Dual Specialization, Trimester based)** - Marketing, Finance, Human Resource, International Business, Information Technology Management **(Co-Educational)**
- **M.C.A.** (Master of Computer Applications - Two years semester based programme) **(Co-Educational)**

## RESEARCH PROGRAMMES

- **Ph.D.**

**Faculty of Arts & Social Sciences:** English, Journalism and Mass Communication, Economics, Geography, History, Political Science, Fine Arts, Fashion & Textiles, Mathematics, Psychology, Statistics

**Faculty of Science :** Environmental & Life Sciences (Botany, Biotechnology, Environmental Science, Microbiology, Zoology), Chemistry, Computer Science, Fashion & Textiles, Geography, Home Science (Human Development), Mathematics, Physics, Psychology, Statistics

**Faculty of Commerce & Management:** Commerce, Management

- **D.Sc./D.Litt. : Admissions Also Open**

CAREER ORIENTED & SKILL DEVELOPMENT PROGRAMMES, 3-LEVEL CERTIFICATE/ DIPLOMA/ADVANCED DIPLOMA ALONG WITH DEGREE PROGRAMMES

**IIS (deemed to be UNIVERSITY)**
Gurukul Marg, SFS, Mansarovar, Jaipur -302 020 (India)
**www.iisuniv.ac.in** | admissions@iisuniv.ac.in

**50% SCHOLARSHIP**
OFFERED TO THOSE WHO HAVE LOST AN EARNING PARENT / GUARDIAN TO COVID-19